## ஒன்ராறியோவை அறிந்து கொள்ளுதல்

ஒன்ராறியோவை அறிந்து கொள்ளும் ஒரு பயிலரங்கத்தில் நீங்கள் கலந்து கொள்ள முடியும் என்பதை நீங்கள் அறிவீர்களா?

கூடுதல் தகவலுக்குத் தயவுசெய்து orientationontario.ca/en என்னும் இணையதளத்திற்கு வருகை தாருங்கள்

எங்களை நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கு, தயவு செய்து எங்களுடைய இருமொழித் தொலைபேசி இணைப்பை 1-855-626-0002அழையுங்கள் அல்லது O2O@costi.org க்கு மின்னஞ்சலிடுங்கள்.

Funded by:
Immigration, Refugees and Citizenship Canada

Financé par :
Immigration, Réfugiés et Citoyenneté Canada

Ontario



ஒன்ராறியோவை அறிந்து கொள்ளுதல்

ஒன்ராறியோவுக்கு புதிதாக வந்து குடியமர்வோரிற்கான ஒரு அறிமுகம்

orientation to ontario
l'ontario c'est chez moi

# ஒன்ராறியோவுக்கு புதிதாக வந்து குடியமர்வோரிற்கான



# ஒன்ராறியோவை அறிந்து கொள்ளுதல்

Orientation to Ontario / L'Ontario, est chez moi திட்டம், கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சகம் (IRCC) மற்றும் ஒன்டாரியோ அரசால் நிதியளிக்கப்படுகிறது. இந்த இரு மொழி செயல்திட்டமானது புதிதாக வருபவர்கள், ஒன்ராறியோவில் புதிதாகக் குடியமர்வோரிற்கான செயல்நூல், பயிலரங்குகள் மற்றும் settlement.org/o2o என்னும் ஆங்கிலம் மற்றும் etablissement.org/o2o என்னும் பிரெஞ்சு இணையத்தளங்களைப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. புதிய குடியேறிகளை ஈர்ப்பதற்காக, Orientation to Ontario பணிப்புத்தகம், பட்டறைகள், தகவல் தாள்கள், chatbot, ArriveON செயலி மற்றும் ஆங்கிலம் (orientationontario.ca/en), பிரெஞ்சு (orientationontario.ca/fr) மற்றும் பிற மொழிகளில் உள்ள இணையதளத்தின் மூலமாக இந்த இருமொழித் திட்டம் உருவாக்கப்பட்டது.

O2O பணிப்புத்தகத்தை அணுக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

பிற மொழிகளில் O2O வளங்களை அணுக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

O2O வெபினார்களை அணுக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

O2O உண்மைத் தாள்களை அணுக QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

Download on the App Store

GET IT ON Google Play

Obtenir sur Microsoft

# நன்றி நவிலல்

கீழ்க்கண்ட திட்ட மேலாண்மை மற்றும் உறுப்பினர் முகவரமைப்புகளின் ஆலோசனைக் குழுவினர் மற்றும் பங்குதாரர்கள் ஆகியோரது ஒத்துழைப்பினாலேயே இந்த திட்டத்தை உருவாக்க முடிந்தது, அவர்களது ஆதரவிற்கும் தலைமைக்கும் COSTI Immigrant Services நன்றி நவில்வதற்கு விரும்புகிறது. இந்த முன்னோடித் திட்டத்தின் அமுலாக்கத்தில் ஈடுபட்ட சேவை வழங்கும் முகவரமைப்புகளின் அர்ப்பணிப்பு மற்றும் கடமைப்பாடு ஆகியவையே மாகாணம் முழுவதும் இதை நிஜமாக்கிட உதவியது, அவர்களுக்கும் நாங்கள் நன்றி கூற விரும்புகிறோம்.

- Association canadienne-française de l'Ontario Conseil régional des Mille-Îles
- Association des francophones de la région de York
- Brampton Multicultural Community Centre
- Catholic Centre for Immigrants
- Catholic Crosscultural Services
- Centre de santé communautaire du Grand Sudbury
- Centre des Services communautaires Vanier
- Centre for Immigrant and Community Services
- Centre francophone du Grand Toronto
- Centre communautaire francophone Windsor-Essex-Kent
- Collège Boréal
- Conseil Économique et Social d'Ottawa - Carleton
- CultureLink
- HMC Connections
- Immigrant Services Guelph-Wellington
- Kingston Community Health Centres
- London Cross Cultural Learners Centre
- Multicultural Council of Windsor and Essex County
- Newcomer Centre of Peel
- New Canadians' Centre of Excellence Inc.
- Niagara Folk Arts Multicultural Centre
- North Bay and District Multicultural Centre
- North York Community House
- Peel Multicultural Council
- Punjabi Community Health Services
- Polycultural Immigrant & Community Services
- TNO - The Neighbourhood Organization
- Thunder Bay Multicultural Association
- Upper Canada District School Board
- Vietnamese Association of Toronto
- WoodGreen Community Services
- YMCA of Hamilton-Burlington-Brantford
- YMCA of Three Rivers
- YMCA of Simcoe-Muskoka

இந்த செயல்நூலுக்கான கலைவேலை சம்பந்தப்பட்ட பங்களிப்பு அளித்தமைக்காக (Albert Casson) அவர்களுக்கு இந்த திட்டமானது தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

இறுதியாக, ஒன்ராறியோவை தமது இல்லமாக்கிக் கொள்ளத் தீர்மானித்திருக்கும் புதிதாகக் குடியமர்ந்தோருக்கும் நாம் நன்றியுரைக்க விரும்புகிறோம். அவர்களது பங்களிப்பு இல்லாமல், இந்த திட்டம் பூர்த்தியாகி இருக்க முடியாது . நல்வரவு!

# இந்தச் செயல்நூல் பற்றி

ஒன்ராறியோ, கனடாவுக்கு உங்களை வரவேற்கின்றோம். உலகெங்கும் இருந்து புதிதாக வருபவர்களை வரவேற்கும் கனடா, பெருமை மிக்க ஒரு பல்கலாச்சாரச் சமூகமாகும். ஒன்ராறியோவின் சனத்தொகை 16 மில்லியனுக்கும்[1] மேலாகும், அதில் 250 க்கும் மேலான நாடுகளில் இருந்து வந்துள்ள 200 மொழி[2] பேசுபவர்களும் அடங்குவார்கள். ஒரு புதிய நாட்டில் குடியமர்வது என்பது ஒரு பரபரப்பூட்டும் நேரம் ஆகும். இதற்கு *ஒன்ராறியோவை அறிந்து கொள்ளுதல் செயல்நூல்* (Orientation to Ontario Workbook) வழி காட்டும்.

## இந்தச் செயல்நூலில் நீங்கள் பார்க்கக்கூடியவை

இந்தச் செயல்நூலானது ஒன்ராறியோவில் குடியமர்வதற்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை உங்களுக்கு அளிக்கிறது. இது ஆறு பிரிவுகள் கொண்டது. ஒவ்வொரு பிரிவிலும் பல தலைப்புகள் உள்ளன, அரசாங்க அலுவலகங்களின் இணையத்தளங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் உள்ளடங்கலாக முழு மாகாணத்திற்குமான தகவல்களை அவை அளிக்கின்றன.

பெரும்பாலான பிரிவுகளில் குடியமர்வுத் திட்டங்கள் உள்ளன, அவை உங்களது முக்கிய பணிகளைத் தொகுத்து வழங்குகின்றன. மேலும், "சிந்திக்க வேண்டிய விஷயங்கள்" என்னும் தலைப்பில் சில கேள்விகளையும் நீங்கள் காண்பீர்கள். உங்களது குடியமர்வு நடைமுறையின் பொழுது நீங்கள் தேர்வு செய்ய வேண்டியவை பற்றிச் சிந்திப்பதற்கு இந்த கேள்விகள் உங்களுக்கு உதவிடும்.

உங்களது தனிப்பட்ட குடியமர்வுத் திட்டத்தை உருவாக்கிட, கூடுதல் தகவல்களை நீங்கள் பெ வேண்டும். இந்த செயல்நூலானது அந்த தகவல்களை நீங்கள் இணையத்தில் பெறுவது பற்றி சில யோசனைகளையும் மற்றும் சில பயனுள்ள கருவிகளையும் உங்களுக்கு அளிக்கிறது.

நீங்கள் இந்த செயல்நூலை இணையத்தில் ஆங்கிலத்தில் orientationontario.ca/en என்ற இணையதளத்தில் அல்லது ஃப்ரெஞ்சில் orientationontario.ca/fr என்ற இணையதளத்தில் காணலாம். இணையம் மற்றும் அச்சிட்ட வடிவம் இரண்டிலும் பிற பல மொழிகளிலும் இது கிடைக்கிறது.

Orientation to Ontario உங்களது வரைபடமாகவும் திசைகாட்டியாகவும் நினைத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் எங்கே போக வேண்டியிருக்கிறது மற்றும் எவ்வாறு போக வேண்டியிருக்கிறது என்று நீங்கள் முடிவு செய்வதற்கு இதைப் பயன்படுத்த முடியும்.

## குடியமர்வுத் திட்டமிடல் கருவிகள்

உங்களுடைய சொந்தக் குடியிருப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காக, ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் தலைப்புகள் வாரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட குடியிருப்புத் திட்டமிடல் உதவிஅமைப்பை நீங்கள் பார்ப்பீர்கள்.

- உங்களுடைய குறுகிய கால இலக்குகளுக்கான முக்கியமான தகவல்களை நீங்கள் அடையாளம் காண்பதற்கும், காலக்கோடுகளை உருவாக்கவும் இந்த உதவிஅமைப்பு உதவிசெய்யும்.
- இந்த கருவிகளை இணையத்தில் orientationontario.ca/en என்ற இணையதளத்திலும் காண முடியும்

## கனடாவில் வாழ்வதற்கான கருவி

உங்களது குடியமர்வுத் திட்டத்தை உருவாக்கிட நீங்களும் உபயோகிக்கக்கூடிய ஒரு இணையக் கருவியை Immigration, Refugees and Citizenship Canada உருவாக்கியுள்ளது. இந்த கருவியை நீங்கள் canada.ca என்ற அல்லது findlink.at/cic-lctvac இணையதளத்தில் பாருங்கள்.

## கனடா வழிகாட்டிக்கு வரவேற்கிறோம் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

Immigration, Refugees and Citizenship Canada வினால் பிரசுரம் செய்யப்பட்டுள்ள Welcome to Canada என்னும் நூலில் இடம் பெற்றுள்ள தகவல்கள் பற்றிய பல மேற்கோள்களை இந்த செயல்நூல் முழுவதுமே, நீங்கள் காண்பீர்கள். இந்த சின்னம் இருக்கிறதா என்று பாருங்கள்:

இதை இணையத்தில் canada.ca என்ற அல்லது findlink.at/welcomecan என்ற இணையதளத்திலும் நீங்கள் படிக்க முடியும்

## இணைப்புகளைக் கண்டறியுங்கள்

தகவல்களை எளிதாகக் காண்பதற்கு உங்களுக்கு உதவுவதற்காக, அனைத்து இணையத்தள முகவரிகளுக்கான முக்கிய செயற்களங்களையும் (domains) ஒரு ஃபைன்ட்லிங்க் (FindLink) உடன் சேர்த்திருக்கிறோம், அது இணையத்தில் ஒரு குறிப்பிட்ட பக்கத்துக்கு எடுத்துச் செல்லும்.

[1] ஆதாரம்: Ministry of Finance: findlink.at/092

[2] ஆதாரம்: Ontario Immigration: ontario.ca




**இணைய வசதி பெறுவது**

*இலவச கணினி / இணைய வசதியானது ஒன்ராறியோ முழுவதும் நூலகங்கள் மற்றும் குடியமர்வு முகவரமைப்புகளில் கிடைக்கிறது. பல்வேறு பொது இடங்களில் மொபைல் கருவிகள் ஊடாக இலவச (Wi-Fi) வசதியை அணுக முடியும்.*

# உள்ளே இருப்பது என்ன


## கனடா மற்றும் ஒன்ராறியோ பற்றி அறிந்து கொள்ளல் 3

கனடா அறிமுகம் 4
அரசாங்கம் 5
ஒன்ராறியோ அறிமுகம் 6
குடியமர்வு முகவரமைப்புக்கள் 10
பயனுள்ள தொலைபேசி இலக்கங்கள் மற்றும் இணையத்தளங்கள் 11

## உங்களது புதிய சமூகத்தில் வாழ்தல் 13

ஆரோக்கியக் கவனிப்பு 14
நுகர்வோர் சேவைகள் 17
குடியிருப்பு 18
சமுதாயப் பங்கேற்பு 21
போக்குவரத்து 22
சட்ட உரிமைகள் மற்றும் சேவைகள் 24
குடியமர்வுத் திட்டம் 26

## கல்வி மற்றும் பயிற்சி 29

பிள்ளைப் பராமரிப்பு 30
ஆரம்பநிலை மற்றும் இரண்டாம் நிலைக்கல்வி 31
இரண்டாம் நிலைக்கு மேற்பட்ட கல்வி 33
தொடர் கல்வி 34
மொழிப் பயிற்சி 35
குடியமர்வுத் திட்டம் 36

## வேலை செய்வது மற்றும் வணிகம் 39

வேலை செய்வதற்கு தயாராவது 40
வேலை தேடுதல் 42
பணியிட உரிமைகள் 44
உங்களது சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தல் 46
குடியமர்வுத் திட்டம் 47

## பணம் மற்றும் சொந்த நிதிகள் 49

பணம் மற்றும் வங்கியியல் 50
கடன் பெறுதல் 51
வரிகள் 52
அனுகூலங்கள் மற்றும் சமுதாய ஆதரவு 53
குடியமர்வுத் திட்டம் 54

## மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் 55

உள்வாங்கும் தன்மை 56
செயல்திறனிழப்புகள் கொண்ட மக்கள் 57
குடும்ப உறவுகள் 58
சுற்றுச்சூழலைப் பராமரிப்பது 59
குடியமர்வுத் திட்டம் 60

## பிற்சேர்க்கை 61

மத்திய அரசு ஆதாரவளங்கள் 62
ஒன்ராறியோ அரசு அமைச்சகங்கள் 63
அகர வரிசை அட்டவணை 64

# கனடா மற்றும் ஒன்ராறியோ பற்றி அறிந்து கொள்ளல்

இந்தப் பகுதி கனடா மற்றும் ஒன்ராறியோ மாகாணம் குறித்த நிலவியல், காலநிலை, சனத்தொகை, பொருளாதாரம், மொழிகள் மற்றும் அரசாங்கம் உள்ளடங்கிய விடயங்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றது. குடியமர்வு முகவரமைப்புகள் பற்றிய தகவல்களையும், பயனுள்ள தொலைபேசி எண்களுடன் சேர்த்து நீங்கள் இதில் காண்பீர்கள்




4
கனடா அறிமுகம்

5
அரசாங்கம்

6
ஒன்ராறியோ அறிமுகம்

10
குடியமர்வு முகவரமைப்புகள்

11
பயனுள்ள தொலைபேசி இலக்கங்கள் மற்றும் இணையதளங்கள்



# கனடா அறிமுகம்

கனடா உலகின் இரண்டாவது மிகப்பெரிய நாடு ஆகும், இது 10 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் (3.9 மில்லியன் சதுர மைல்கள்)பரப்பளவு கொண்டது. இதன் மிகப் பெரிய அளவிலான அமைப்பினால், கனடாவில் மலைகள், காடுகள், புல்வெளிகள் மற்றும் ஆர்க்டிக் துருவப்பகுதி எனப் பல வித்தியாசமான நில அமைப்புகள் அடங்கியுள்ளன.

## நகரங்கள், மாகாணங்கள் மற்றும் பிரதேசங்கள்

கனடாவின் தலைநகரம் ஒட்டாவா ஒன்ராறியோவில் அமைந்துள்ளது. இது கனடாவின் நான்காவது பெரிய நகரம் ஆகும். கனடாவில் உள்ள மூன்று பெரிய நகரங்கள் ரொறன்றோ (ஒன்ராறியோ), மொன்றியல் (கியூபெக்) மற்றும் வன்கூவர் (பிரிட்டிஷ் கொலம்பியா) ஆகும்.

கனடாவில் 10 மாகாணங்களும் மூன்று பிரதேசங்களும் உள்ளன, அவை ஒவ்வொன்றுக்கும் அதன் சொந்தமான தலைநகரம் உள்ளது. கனடாவின் முக்கிய பிரதேசங்களாவன:

- அத்திலாந்திக் பிரதேசங்கள் (Newfoundland and Labrador)நியூஃபவுன்ட்லேன்ட் மற்றும் லேப்ராடார், (Prince Edward Island) பிரின்ஸ் எட்வர்ட் ஐலன்ட், நோவா ஸ்காஷியா(Nova Scotia)மற்றும் நியூ பிரன்ஸ்விக் (New Brunswick) ஆகும்
- சென்ட்ரல் கனடா (கியூபெக் மற்றும் ஒன்ராறியோ) Canada (Quebec and Ontario)
- பிரைரி மாகாணங்கள் (மனிடோபா, சஸ்காட்ஷ்வன் மற்றும் ஆல்பெர்ட்டா) The Prairie provinces (Manitoba, Saskatchewan and Alberta)
- தி வெஸ்ட் கோஸ்ட் (பிரிட்டிஷ் கொலம்பியா) The West Coast (British Columbia)
- தி நார்த் (நுனாவுட், தி நார்த்வெஸ்ட் பிரதேசங்கள் மற்றும் யுக்கோன்) The North (Nunavut, the Northwest Territories and Yukon)

findlink.at/LandClimate

## நிறுவிய மக்கள் மற்றும் குடியேற்றம்

கனடாவில் மூன்று நிறுவிய மக்கள் உள்ளார்கள்: பூர்வீகக் குடியினர், பிரெஞ்சு மற்றும் பிரிட்டிஷ் ஐரோப்பிய இட ஆய்வாளர்கள், முன்னோடிகள் மற்றும் குடியமர்வாளர்கள் ஆகியோர் வருவதற்கு முன்பாகவே பூர்வீகக் குடியினர் கனடாவில் வாழ்ந்து வந்தார்கள். தற்பொழுது இந்த பதமானது மூன்று குழுக்களைக் குறிக்கிறது. முதல் தேசத்தவர்கள் (சில நேரங்களில் “இந்தியர்கள்” என அழைக்கப்படுவார்கள்). Inuit மற்றும் Métis ஆவார்கள். பூர்வீகக் குடியினர் கனடாவெங்கிலும் தங்களது சொந்த சமுதாயங்களில் மற்றும் நகரங்களில் வசிக்கிறார்கள்.

16 மற்றும் 17ம் நூற்றாண்டுகளில் பிரெஞ்சு குடியமர்வாளர்கள் வந்தார்கள், 17 வது மற்றும் 20ம் நூற்றாண்டுகளில் ஆங்கிலம் பேசும் குடியமர்வாளர்கள் இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து வந்தார்கள்

கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாக, பல வகையான இன ரீதியான மற்றும் மத ரீதியான மக்கள் குழுக்கள் கனடாவுக்கு குடியேறி இருக்கின்றனர். இன்று, சுமாராக 20 சதவிகித கனேடியமக்கள் கனடாவுக்கு வெளியே பிறந்தவர்களாக உள்ளார்கள். ரொறன்றோவில் இந்த எண் 45 சதவிகிதமாக இருக்கிறது.

ஆங்கிலமும் பிரெஞ்சும் கனடாவின் இரு அதிகாரப்பூர்வமான மொழிகளாகும். சட்டப்படி, மத்திய அரசு கனடா முழுவதுமாக ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மொழிகள் இரண்டிலுமே சேவைகளை கட்டாயமாக அளித்திடல் வேண்டும்.

findlink.at/LandClimate

## ஒரு கனேடிய பிரஜை ஆவது

கனடாவிற்கு வந்த உடனேயே நீங்கள் பிரஜை ஆவதற்குத் தயாராகத் தொடங்கலாம். பிரஜை ஆவதற்கான பரீட்சைக்கான இலவசப் படிப்பு வழிகாட்டியை canada.ca என்ற அல்லது findlink.at/cic-study என்ற இணையத்தளத்தில் வாசியுங்கள்

# அரசாங்கம்

கனடா அரசியல் அமைப்புச் சட்டப்படியான முடியரசும் ஒரு மத்திய ஜனநாயகமும் இணைந்தது. இதன் பொருள் என்ன என்றால் கனடாவின் தலைவராக ராணி அல்லது ராஜா இருக்கையில் அரசாங்கத்தின் தலைவராக பிரதம மந்திரி இருப்பார். முக்கிய பொறுப்புகள் மத்திய அரசு, மாகாண அல்லது பிரதேச மட்டங்களிடையே பிரித்துக் கொள்ளப்படும். கனேடியர்கள் தங்களது மத்திய அரசு, மாகாண மற்றும் நகராட்சி பிரதிநிதிகளை, ஒரு பொது வாக்கெடுப்பு முறையால் தேர்ந்தெடுக்கின்றனர்.

கனடாவின் ராணி அல்லது ராஜாவை தலைமை ஆளுநர் (மத்திய அரசு) மற்றும் 10 துணைத்தலைவர்கள் (மாகாணம்) பிரதிநிதித்துவம் செய்வார்கள்.

findlink.at/government

## மத்திய அரசாங்கம்

தேசப் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், செலவாணி மற்றும் வங்கியியல்,தொழிற் காப்பீடு, தபால் சேவை மற்றும் குற்றயியல் சட்டம் ஆகிய தேசப் பிரச்சினைகளை மத்திய அரசு கையாள்கிறது. மத்திய அரசை பிரதம மந்திரி வழிநடத்துகிறார். மத்திய அரசின் பிரதிநிதிகள் ***பாராளுமன்ற உறுப்பினர்கள்*** (அல்லது எம்பிக்கள்) என்று அழைக்கப்படுகின்றனர்.



## மாகாண / பிரதேச அரசாங்கங்கள்

மாகாண /பிரதேச அரசாங்கங்கள் சுகாதாரம், கல்வி மற்றும் போக்குவரத்து ஆகிய பிரச்சினைகளைக் கையாளுகின்றன. ஒன்ராறியோவில், மாகாண ஆளும் அமைப்பானது ஒன்ராறியோ சட்டசபை என்று அழைக்கப்படுகிறது. மாகாண அரசின் பிரதிநிதிகள், மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள் (அல்லது எம்பிபி க்கள்) (MPPs)என்று அழைக்கப்படுகின்றனர்.

மாநகராட்சி அரசாங்கங்கள் (உங்களது உள்ளூர் சமுதாயம் அல்லது நகர அரசாங்கம்) குப்பைச் சேகரிப்பு மற்றும் பொழுதுபோக்கு சேவைகள் போன்ற உள்ளூர்ப் பிரச்சினைகளைக் கையாளுகின்றன. மாநகராட்சி அரசாங்கப் பிரதிநிதிகள் ***கவுன்சிலர்கள் என்று*** அழைக்கப்படுகின்றனர்.

- கனடாவின் அரசாங்க அமைப்பு பற்றிக் கூடுதலாக canada.ca என்ற அல்லது findlink.at/cgovsystem என்ற இணையத்தளத்தில் கண்டறியுங்கள்
- ஒன்ராறியோவின் மாகாண அரசாங்கம் பற்றிக் கூடுதலாக ontario.ca என்ற இணையதளத்தில் அல்லது findlink.at/govontario என்ற இணையத்தளத்தில் கண்டறியுங்கள்
- ஒன்ராறியோவில் நகராட்சி அரசாங்கங்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பது பற்றி yourlocalgovernment.com என்ற இணையத்தளத்தில் கண்டறியுங்கள்

***சிந்திக்க வேண்டிய டயங்கள்***

*எனது எம்பி யார், மற்றும் அவர் கவனிக்கும் விடயங்கள் எவை?*

*எனது எம்பிபி யார் மற்றும் அவர் கவனிக்கும் விடயங்கள் எவை?*

*எனது உள்ளூர் கவுன்சிலரை நான் எவ்வாறு தொடர்பு கொள்வது?*






# ஒன்ராறியோவுக்கு அறிமுகம்

## கனடாவுக்கு வரும் குடிவரவாளர்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் ஒன்ராறியோவையே தங்களது புதிய இல்லமாக[3] தேர்வு செய்கின்றனர். ஒன்ராறியோ தனது பல்கலாச்சார சமூகம் பற்றிப் பெருமை கொள்கிறது மற்றும் இது பன்னாட்டு வர்த்தகம் மற்றும் வணிகத்திற்கான பன்முகம் கொண்ட ஒரு மையம் ஆகும்

### சனத்தொகை மற்றும் நிலவியல்

சனத்தொகை அடிப்படையில் ஒன்ராறியோவே மிகப்பெரிய மாகாணம் (13 மில்லியனுக்கு அதிகம்) ஆகும். பெரும்பாலான ஒன்ராறியோ வாசிகள் பெரும் ஏரிகளை (Great Lakes) அடுத்துள்ள இந்த மாகாணத்தின் தெற்கு எல்லைக்கு அருகில் உள்ள நகர்ப்புற மையங்களில் வாழ்கின்றனர். பொதுவாக இந்த மாகாணத்தின் வடக்குப் பகுதிகளில் உள்ள நகரங்கள் மற்றும் குடியேற்றங்கள் சிறியவை ஆகும்.

ஒன்ராறியோவில் உள்ள பல சிற்றூர்கள் மற்றும் நகரங்களின் பெயர்கள் இந்த மாகாணத்தின் செழிப்பான பழங்குடி வரலாற்றையும் பாரம்பரியத்தையும் பிரதிபலிக்கின்றன: ஒன்ராறியோ என்னும் பெயரானது "அழகான ஏரி" அல்லது "மினுமினுங்கும் நீர்" என்னும் அர்த்தமுள்ள "***கனடாரியோ***" என்னும் இரக்குவாய் (Iroquoian) சொல்லில் இருந்து வருகின்றது.

10 மாகாணங்கள் மற்றும் மூன்று பிரதேசங்கள் கனடாவை உருவாக்குகின்றன. இதன் அளவு பற்றிய ஒரு கருத்தை உங்களுக்குத் தருவதற்கு, ஒன்ராறியோ என்பது ஃபிரான்ஸைப் போல சுமாராக இரு மடங்கு அளவுள்ளது மற்றும் இந்தியாவின் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவுள்ளது என்று கூறலாம்.

ஒன்ராறியோவுக்கு ஒரு சுற்றுலா செல்வதற்கு திட்டமிடுவது பற்றி அறிந்து கொள்வதற்கு, ஒன்ராறியோவின் அதிகாரப்பூர்வ சுற்றுலா இணையதளமான destinationontario.com க்குச்செல்லுங்கள்

ஒன்ராறியோவின் இயற்கைச் சூழல்களைக் கண்டு களிப்பதற்கு ஒன்ராறியோ மாகாணப் பூங்காவி ஒன்றிற்குச் செல்லவும். அதைப் பற்றி கூடுதல் தகவல்களை ontarioparks.ca என்ற இணையதளத்தில் அறியலாம்.

[3] ஆதாரம்: Immigration, Refugees and Citizenship Canada: findlink.at/prstats


NEWFOUNDLAND
& LABRADOR
QUÉBEC
PRINCE
EDWARD
ISLAND
NEW
BRUNSWICK
NOVA SCOTIA
N
ONTARIO
THUNDER BAY
TIMMINS
SAULT
STE. MARIE
SUDBURY
NORTH BAY
OTTAWA
KINGSTON
TORONTO
KITCHENER/
WATERLOO
NIAGARA
FALLS
LONDON
WINDSOR

## பூர்வீகக் குடியினரின் கலாசாரம்

"பூர்வீகக் குடிமக்கள்" என்பது வடக்கு அமெரிக்காவில் பூர்வீகமாக வசித்து வருபவர்கள் மற்றும் அவர்களது சந்ததியினர் ஆகியோரின் ஒரு பொதுப்படையான பெயராகும். அவர்கள் குறைந்தது 7,000 வருடங்களாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

கனேடிய அரசியல் அமைப்பு ஆனது மூன்று பூர்வீகக் குடிமக்கள் குழுக்களை அங்கீகரிக்கிறது: First Nations, Métis மற்றும் Inuit ஆகியோர் ஆகும். இவர்கள் மூன்று வேறுபட்ட வகையான மக்கள் ஆவார்கள், இவர்களுக்கு தனித்துவமான வரலாறுகள், மொழிகள், கலாச்சாரப் பயிற்சிகள் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகள் உள்ளன. ஒன்ராறியோவில் உள்ள First Nations மக்களில் Cree, Oji- Cree, Algonquin, Ojibwa, Odawa, Potawatomi and Delaware பிரிவினர் Algonquian மொழியைப் பேசுகிறார்கள், Mohawk, Oneida, Onondaga, Cayuga, Seneca மற்றும் Tuscarora பிரிவினர் Iroquoian மொழி பேசுகிறார்கள். Métis இன மக்கள் என்பவர்கள் First Nations மற்றும் Métis இனம் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் ஐரோப்பிய பூர்வீகத்தினரின் கலப்பின மக்கள் ஆவார்கள். Inuit மக்கள் ஆர்க்டிக் கனடா, நுனாவட், வடமேற்குப் பிரதேசங்கள், யுக்கோன், வடக்கு க்யூபெக் மற்றும் லேப்ரடார் ஆகிய பகுதிகள் உள்ளிட்ட இடங்களில் உள்ள பூர்வீகக் குடிகள் ஆவர்.

2009ம் ஆண்டில், ஜுன் மாதம் தேசிய பூர்வீகக் குடிகளின் மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஒன்ராறியோ மக்கள் ஒவ்வொரு ஆண்டும் ஒன்ராறியோ மற்றும் நாடெங்கிலும் உள்ள பூர்வீகக் குடிகளின் கலாச்சார நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அந்த பூர்வீகக் குடிகளின் செழிப்பான பாரம்பரியத்தைப் பற்றி அறிந்து கொள்கின்றனர்.

ஜூன் 21 தேசிய பழங்குடி மக்கள் தினம். ஒவ்வொரு ஆண்டும் ஒன்ராறியோவாசிகள் பூர்வீக கலாச்சார நிகழ்வுகளில் கலந்துகொள்வதுடன், ஒன்ராறியோவிலும் நாடு முழுவதிலுமுள்ள பூர்வகுடி மக்களின் வளமான பாரம்பரியம் பற்றியும் கற்றுக்கொள்கிறார்கள். குடிகள் ஆவார்கள்.

2021 கனேடிய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1.8 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பழங்குடி மக்களாக அடையாளம் காணப்படுகின்றனர். கனடாவில், ஒட்டுமொத்த கனேடிய மக்கள் தொகையில் பழங்குடி மக்கள் 5 சதவீதம் உள்ளனர்.

ஒன்ராறியோவில் பழங்குடி மக்களில் அதிக மக்கள் உள்ளனர். தற்போது ஒன்ராறியோவில் 406,585 க்கும் மேற்பட்ட முதல் நாடுகள், மெட்டிஸ் மற்றும் இனுயிட் மக்கள் வாழ்கின்றனர், இது ஒன்ராறியோவின் மொத்த மக்கள்தொகையில் 2.9 சதவீதத்தையும் கனடாவில் உள்ள அனைத்து பழங்குடி மக்களில் 22.5 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அவர்கள் இருப்புகளில், நகரங்களில், கிராமப்புற சமூகங்களில் வாழ்கின்றனர். சிலர் சிறிய தொலைதூர சமூகங்களில் வாழ்கின்றனர், ஆண்டு முழுவதும் விமானம் அல்லது குளிர்காலத்தில் பனி சாலைகள் மூலம் மட்டுமே அணுக முடியும். முக்கிய நகர்ப்புற பழங்குடி மக்கள் தண்டர் பே, சட்பரியில் உள்ளனர்.

பூர்வீகக் குடிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு aadnc-aandc.gc.ca என்ற மற்றும் ontario.ca/ministry-indigenous-affairs என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## உண்மை மற்றும் நல்லிணக்கம்

செப்டம்பர் 30 உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தினம் மற்றும் ஆரஞ்சு சட்டை தினம் ஆகிய இரண்டும் ஆகும், இது குடியிருப்பு பள்ளிகளிலிருந்து ஒருபோதும் திரும்பாத குழந்தைகளை நினைவுகூருவதற்கும் உயிர் பிழைத்தவர்கள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் சமூகங்களை கௌரவிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த துயரமான வரலாற்றை நினைவுகூருவது கூட்டாட்சி சட்டரீதியான விடுமுறையாக நிறுவப்பட்ட நல்லிணக்க செயல்முறைக்கு முக்கியமானது

பழங்குடி சமூகங்களால் வழிநடத்தப்படும் ஆரஞ்சு சட்டை தினம், குடியிருப்புப் பள்ளிகளின் தலைமுறைகளுக்கு இடையேயான தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், "ஒவ்வொரு குழந்தையும் முக்கியமானது" என்ற கருத்தை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆரஞ்சு சட்டை பழங்குடி குழந்தைகள் அனுபவிக்கும் கலாச்சார, சுதந்திரம் மற்றும் சுயமரியாதை இழப்புகளைக் குறிக்கிறது.

## மொழிகள்

இந்த மாகாணத்தில் பேசப்படும் மிகப் பொதுவான மொழி ஆங்கிலம் ஆகும் மற்றும் இது வணிகத்தின் முதன் மொழியும் ஆகும். பிரெஞ்சு மொழியானது ஒன்ராறியோவின் பிரெஞ்சு மொழி பேசும் சமுதாயத்தினரால் பயன்படுத்தப்படுகிறது மற்றும் அனைத்து ஒன்ராறியோ பள்ளிக் குழந்தைகளுக்கும் கற்பிக்கப்படுகிறது. பிரெஞ்சு மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் நீங்கள் தங்குதடையின்றி பேச, எழுதக் கூடியவராக இருந்தால், வேலை தேடும் பொழுது அது உங்களுக்கு ஒரு சாதக அம்சமாக இருக்கும்.

## பொருளாதாரம்


ஒன்ராறியோ ஒரு பல்வகைப்பட்ட பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. இந்த மாகாணத்தின் தெற்குப் பகுதியில் நிதிச் சேவைகள், விருந்தோம்பல துறை, தயாரிப்பு, உயிரி அறிவியல்கள்(life sciences) மற்றும் தகவல் மற்றும் தொலைதூரத் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் ஆகியவற்றை நீங்கள் காணலாம்.

இந்த மாகாணத்தின் வடக்குப் பகுதியில், பொருளாதாரமானது வரலாற்று ரீதியில் இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிறது. முதன்மையான தொழில்களாக சுரங்க வேலை, வன இயல் மற்றும் நீர்மின்சாரம் ஆகியவை உள்ளன.

ஒன்ராறியோவின் பொருளாதாரம் பற்றி கூடுதலாகத் தெரிந்து கொள்வதற்கு Ministry of Finance பற்றிய: findlink.at/economy என்ற இணையதளத்தை பாருங்கள்

# காலநிலை

## ஒன்ராறியோவுக்கான மாதாந்திர சராசரி வெப்பநிலைகள் (செல்சியஸ் டிகிரிகளில்)[4]




[4] ஆதாரம்: currentresults.com or findlink.at/091

### ¡உங்களுக்குத் தெரியுமா?

- ஒவ்வொரு செப்டம்பர் மாதமும் ரொறன்றோ பன்னாட்டு திரைப்பட விழா (TIFF) நடைபெறுகிறது மற்றும் இது உலகிலேயே மிகப் பெரிய மற்றும் மிகப் பிரபலமான திரைப்பட விழாக்களில் ஒன்றாகும்.
- ஒன்ராறியோ 20 பொது பல்கலைக் கழகங்களுக்கும் 24 பயன்பாட்டுக் கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கும் ஆதரவளிக்கிறது.
- ஒன்ராறியோவில் 1,000 க்கு மேற்பட்ட காற்றாலைகள் உள்ளன-இதனால் காற்று மூலம் சக்தி பெறும் நாடுகளில் கனடா ஒரு முன்னணி வகிக்கிறது.
- அல்கோன்குயின் (Algonquin) மாகாணப் பூங்காவானது 1893ம் ஆண்டு உருவாக்கப்பட்டது மற்றும் இதுவே ஒன்ராறியோவின் முதலாவதும் மிகப்பெரியதுமான பூங்காவாகும்.

### ONTARIO QUICK FACTS

***தலைநகரம்***

ரொறன்றோ கனடாவின் மிகப்பெரிய நகரமாகும், இதில் சுமார் 4 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர்

***அதிகாரப்பூர்வ பூ***


வெள்ளை டிரில்லியம் மலர்

***அதிகாரப்பூர்வ மரம்***


ஈஸ்டர்ன் ஒயிட் பைன் (Eastern White Pine)

***அதிகாரப்பூர்வ பறவை***

காமன் லூன் (Common Loon)









# குடியமர்வு முகவரமைப்புகள்

ஒன்ராறியோவுக்கு நீங்கள் வந்து சேர்ந்ததும், ஒரு உள்ளூர் குடியமர்வு முகவரமைப்பிடம் இருந்து நீங்கள் உதவியைப் பெற முடியும். குடியமர்வு முகவரமைப்புகள் என்பன சமுதாய நிறுவனங்கள் ஆகும், இவை புதிதாக வருபவர்களுக்கு உதவுகின்றன. இதன் சேவைகள் நம்பகமானவை, கட்டணம் இல்லாதவை மற்றும் பல மொழிகளில் கிடைக்கின்றன


குடியமர்வுப் பணியாளர் ஒருவர் பல்வேறு வித்தியாசமான சமுதாயம் மற்றும் அரசுச் சேவைகள் பற்றிய தகவல்கள் மற்றும் அறிமுகத்தை அளித்து உங்களுக்கு உதவ முடியும். குடியிருப்பு, ஆரோக்கியக் கவனிப்பு, மொழிப் பயிற்சி, வேலை வாய்ப்பு பெறுவது எப்படி மற்றும் கிடைக்கக்கூடிய பிற சேவைகள் பலவற்றையும் பற்றி நீங்கள் கேட்கலாம்.

உங்களது புதிய சமுதாயத்துடன் உங்களது குடும்பத்தை இணைப்பதற்கு உங்களுக்கு உதவும் வகையிலான திட்டங்களை பல குடியமர்வு முகவரமைப்புகள் அளிக்கின்றன

ஒன்ராறியோ முழுவதும் புதிதாக வருபவர்களுக்கு குடியமர்வுச் சேவைகளை வழங்குவதற்காக கனடா மற்றும் ஒன்ராறியோவின் அரசாங்கங்கள் இந்த நிறுவனங்களுக்கான நிதியை அளிக்கின்றன.

### உங்களது பகுதியில் சேவைகள் கிடைக்கும் இடத்தைக் கண்டறிதல்

- Settlement.org என்னும் இணையத்தளமானது உங்களது பகுதியில் உள்ள சமுதாயச் சேவைகள் பற்றிய இணைப்புகளையும் உங்களது குடியமர்வுத் தேவைகள் அனைத்திற்குமான பயனுள்ள தகவல்கள் அனைத்தையும் அளிக்கிறது: services.settlement.org
- Immigration, Refugees and Citizenship Canada அமைப்பு ஆனது canada.ca என்னும் அல்லது findlink.at/cic-serve என்னும் இணையத்தளத்தில் குடியமர்வு முகவரமைப்புகளின் பட்டியல் ஒன்றை அளிக்கிறது.
- Ontario Ministry of Citizenship, Immigration and International Trade குடியமர்வுச் சேவைகளை அளிக்கும் முகவரைமப்புகளை ontario.ca என்னும் இணையத்தளத்தில் அல்லது findlink.at/on-serve என்னும் இணையத்தளத்தில் பட்டியலிட்டுள்ளது
- உள்ளூர் சேவைகள் பற்றிய தகவலுக்கு நீங்கள் 211 என்ற இலக்கத்தை அழைக்கலாம்



# பயனுள்ள தொலைபேசி இலக்கங்கள்

**9-1-1 –அவசரக்காலம்**
ஏதேனும் அவசரக்கால நிலைமை இருந்து உங்களுக்கு காவல், தீயணைப்பு அல்லது நோயாளர் ஊர்தி (ambulance) உதவி தேவையிருந்தால், உங்கள் தொலைபேசியில் இருந்து 911 என்ற எண்ணை அழையுங்கள். தொலைபேசி இயக்குநர் உங்களிடம் உங்களது முழு முகவரியை, தபால் குறியீட்டுடன் (Postal Code)ன் கேட்பார். 170 மொழிகளுக்கான மொழிபெயர்ப்பாளர்கள் உள்ளார்கள்.

911 என்பது ஒரு அவசரக்கால சேவை மட்டுமே.

2-1-1 – **சேவைகள்**
உங்களது பகுதியில் உள்ள சமுதாயம் மற்றும் சமூகச் சேவைகள் பற்றிய தகவல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு 211 என்ற எண்ணை அழைக்கவும். இந்த சேவையானது 24 மணி நேரமும், வருடத்தில் 365 நாட்களும், 150 க்கும் அதிகமான மொழிகளில் கிடைக்கிறது. 211 ஐ அழைப்பது இலவசமாகும் மற்றும் இது முழுமையாக நம்பகமானது. இந்த சேவை பற்றிய கூடுதல் தகவலுக்கு, www.211ontario.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

ServiceOntario INFOline
எந்த ஒரு அரசாங்க சேவைப்பற்றிய தகவல் அறிய அல்லது உங்களுக்கு அருகிலுள்ள ஒரு SeviceOntario மையத்தைக் கண்டுபிடிக்க 1-800-267-8097 என்ற எண்ணை அழைத்திடுங்கள். உங்கள் OHIP அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன உரிம பலகையைப் பெற நீங்கள் ஒரு SeviceOntario மையத்துக்குச் செல்ல வேண்டும்.

Service Canada INFOline
குடிவரவு, வரிவிதிப்பு, குடியுரிமை, வேலைக் காப்பீடு , சமூகக்காப்பீடு அல்ல வேறு ஒரு மத்திய திட்டம் அல்ல சேவைக்கு 1-800-622-6232 என்ற எண்ணை அழைத்திடுங்கள்.

**தொலைப்பேசி இலக்க உதவி**
இருப்பிட அல்ல வேலை தொ லைப்பேசி இலக்கத்தை கண்டறிய 411 அழைத்திடுங்கள். இதற்கான கட்டணம் பொதுவாக நிலவழி க்கு 50 சென்டும் செல்போ னுக்கு $1.50 ஆகும்.

# பயனுள்ள இணையத்தளங்கள்

ontario.ca
என்பது Ontario Ministry of Labour, Immigration, Training and Skills Development அதிகாரப்பூர்வ இணையத்தளம் ஆகும். புதிதாக வருபவர்களின் குடியமர்வு, மொழிப் பயிற்சி மற்றும் இணைவிப்புப் பயிற்சி திட்டங்கள் போன்றவை பற்றிய தகவல்களை இதில் பாருங்கள். இணைவிப்புப் பயிற்சித் திட்டம் என்பது ஒன்ராறியோவில் உங்களது வாழ்க்கைப்பணி மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றுக்கு உங்களைத் தயார்படுத்துகிறது.

canada.ca
என்பது Immigration, Refugees and Citizenship Canada அதிகாரப்பூர்வ இணையத்தளம் ஆகும். பல்வேறு குடியமர்வுத் தலைப்புகள் மற்றும் "கனடாவில் வாழ்வது" என்னும் கருவி பற்றிய இணைப்புகள் மற்றும் வீடியோக்களை இதில் பாருங்கள், இது உங்களுக்குரிய குடியமர்வுத் திட்டத்தை உருவாக்கிட உதவுகிறது. findlink.at/livingcana என்னும் இந்த இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்

settlement.org
குடியமர்வு-தொடர்பான உள்ளூர் குடியமர்வுச் சேவைகள் உள்ளடங்கலான, பல்வேறு வகையான தகவல்களை இதில் கண்டறியுங்கள்.

servicecanada.gc.ca
கனேடியஅரசாங்கத் திட்டங்கள் மற்றும் சேவைகளை நீங்கள் பெறும் வாய்ப்பைத் தருகிறது. குறிப்பாக புதிதாக வந்துள்ளவர்கள் findlink.at/ncservices என்னும் இந்த இணையைதளத்தில் வேண்டிய தகவல்களைக் காணலாம்

serviceontario.ca
வேலைவாய்ப்பு, கல்வி, பயிற்சி மற்றும் வாகனம் ஓட்டுதல் உள்ளடங்கலான ஒன்ராறியோ திட்டங்கள் மற்றும் சேவைகளை அறிந்து கொள்ளுங்கள்.

yellowpages.ca
குடியிருப்புகள், வர்த்தகம் மற்றும் அரசாங்க தொலைபேசி இலக்கங்களை இதில் பாருங்கள். தொலைபேசி இலக்கங்கள் அச்சிட்ட ஒரு புத்தகப் பிரதியையும் நீங்கள் பெறுவீர்கள் (தொலைபேசிப் புத்தகம் என்று அழைக்கப்படுகிறது), இது ஒன்ராறியோவில் வசிக்கும் அனைவருக்கும் இலவசமாகக் கிடைக்கிறது. உங்களுக்கு ஒரு தொலைபேசிப் புத்தகம் தேவைப்பட்டால், 1-800-268-5637 என்ற இலக்கத்துக்கு அழையுங்கள்.

cicic.ca
பன்னாட்டுக் கல்வி பெற்ற பணியாளர்களுக்கு உரிய சான்று ஆவண அங்கீகரிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான தகவல்களையும் சேவைகளையும் வழங்குகின்றது.

# O CANADA

O Canada!
Our home and native land!
True patriot love
in all of us command.


With glowing hearts
we see thee rise,
The True North
strong and free!

From far and wide
O Canada,
we stand on guard for thee.

God keep our land
glorious and free!

O Canada,
we stand on guard for thee.

O Canada,
we stand on guard for thee.



# உங்களது புதிய சமூகத்தில் வாழல்

இந்த பகுதியானது சுகாதாரச் சேவையை அணுகுதல், குடியிருப்பு மற்றும், சமூகப் பொழுதுபோக்குத் திட்டங்களைத் தேடிக் கொள்ளல், பல்சரக்குப் பொருட்களை வாங்கும் இடங்களைக் கண்டறிதல், உங்களது பகுதியில் உள்ள பல்வேறு வகையான போக்குவரத்துகளைப் பயன்படுத்துதல் போன்ற ஒன்ராறியோவில் அன்றாட வாழ்க்கை குறித்த, தகவல்களை அளிக்கிறது. மேலும் உங்களது அடிப்படை உரிமைகள் பற்றியும் சட்டச் சேவைகளை எவ்வாறு அணுகுவது என்பது பற்றியும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இந்த சேவைகளை நீங்கள் கண்டறிந்து பயன்படுத்தும் போது உங்கள் புதிய சமுதாயமே உங்களது இல்லம் என்று அழைக்கக்கூடிய இடமாக ஆகி விடும்.




14 ஆரோக்கியப் பராமரிப்பு

17 நுகர்வோர் சேவைகள்

18 குடியிருப்பு

21 சமூகப் பங்கேற்பு

22 போக்குவரத்து

24 சட்ட உரிமைகள் மற்றும் சேவைகள்

26 குடியமர்வுத் திட்டம்



# ஆரோக்கியப் பராமரிப்பு

கனடாவின் ஆரோக்கியப் பராமரிப்பு, நிர்வாகத்தில் மத்திய அரசு, மாகாண மற்றும் பிரதேச அரசாங்கங்கள் ஆகியவை ஒரு முக்கிய பங்காற்றுகின்றன. ஆரோக்கியப் பராமரிப்புச் சேவைகளை வழங்குவது என்பது மாகாண மற்றும் பிரதேச அரசுகளின் பொறுப்பு ஆகும். கனடாவின் தேசிய ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்டமானது (Medicare என்று அழைக்கப்படுவது), அனைதது குடியிருப்பாளர்களும் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்களை அணுகுவதற்கான முன்கட்டணம் கட்டிய அணுகலை வழங்குகின்றது.

## ஆரோக்கியக் காப்புறுதி

ஒன்ராறியோவின் அரசு, மாகாணத்தில் வசிப்பவர்களுக்கு, ஒன்ராறியோ ஆரோக்கியக் காப்புறுதித் (OHIP") திட்டத்தின் வாயிலாக அனைவருக்குமான ஆரோக்கியக் கவனிப்பை வழங்குகின்றது. இந்த திட்டம் ஒரு குடும்ப மருத்துவரைச் சந்திப்பது மற்றும் அவசர மருத்துவக் கவனிப்பு போன்ற அடிப்படையான மருத்துவச் சேவைகளுக்குரிய கட்டணத்தைச் செலுத்துகின்றது. ஒரு கனேடிய பிரஜை என்ற முறையில் அல்லது நிரந்தரக் குடியிருப்பாளர் என்ற முறையில், உங்களது வருமான வரி மூலமாக இந்த திட்டத்திற்கு நீங்கள் பணம் செலுத்துகிறீர்கள்.

OHIP ல் பங்கு பெறுவதற்கு, நீங்கள் OHIP அட்டை (*உங்களது ஆரோக்கிய* அட்டை என்று பெரும்பாலும் அழைக்கப்படுகிறது) ஒன்றைக் கட்டாயமாகப் பெற வேண்டும் மற்றும் மருத்துவச் சேவைகளைப் பெறும் ஒவ்வொரு முறையும் அதை நீங்கள் காட்ட வேண்டும். இந்த அட்டை ஒன்ராறியோவில் ஆரோக்கியச் சேவைகளைப் பெறுவதற்கான தகுதி உங்களுக்கு இருக்கிறது என்பதற்கான சான்றை அளிக்கிறது.

OHIP மூலம் கட்டணம் செலுத்தப்படும் பல்வேறு சேவைகள் பற்றிய ஒரு விளக்கத்தை Ontario Ministry of Health -ன் இணையத்தளத்தை ontario.ca அல்லது findlink.at/healthont ல் பாருங்கள்

**உங்களது ஆரோக்கியத் தேவைகள் அனைத்திற்கும் OHIP கட்டணம் செலுத்தாது. உதாரணமாக, பல் மருத்துவச் சேவைகள் அல்லது மருந்துச் சீட்டுக்கள் போன்றவற்றுக்கு இது கட்டணம் செலுத்தாது.**

**பணி அமர்த்துபவர்கள் சிலர் இந்த கூடுதல் செலவுகளுக்காக ஆரோக்கிய-பலன் திட்டங்களை அளிக்கிறார்கள். இது பணி அமர்த்துவபர்களிடையே மாறுபடுகிறது. OHIP க்குள் உள்ளடங்காத ஆரோக்கியக் கவனிப்புச் செலவுகளைச் சமாளிப்பதற்காகநீங்களும் தனியார் காப்பீட்டினை வாங்கலாம்.**

**உங்களுக்கு OHIP பாதுகாப்பு இல்லா விட்டால், வரம்புக்குட்பட்ட சேவைகளுக்காக ஒரு சமுதாய ஆரோக்கிய மையத்தை அணுகலாம். இதற்கான ஆதாரவளங்களை அடுத்த பக்கத்தில் காண்க.**

## OHIP + (ஓஹிப் +)

தனிப்பட்ட திட்டம் எதுவுமில்லை, 24 வயது அல்லது அதற்கும் குறைந்த வயதுடைய தனிநபர்களுக்கு எந்தவித கட்டணமுமின்றி 5,000 இற்கும் மேற்பட்ட மருந்துத் தயாரிப்புகளுக்கு ஓஹிப்+ காப்புறுதி வழங்கப்படுகின்றது. ஓஹிப்+ காப்பீட்டைப் பெறுவதற்கு நீங்கள் பதிவுசெய்யவோ அல்லது பதிவு செய்யவோ வேண்டியதில்லை — உங்களுக்குத் தேவையானது ஒரு ஆரோக்கிய அட்டை இலக்கமும் தகுதியான ஒரு மருந்துச் சீட்டு நிறுவனமும் மட்டுமே. ஓஹிப்+ காப்பு உங்கள் 25ஆவது பிறந்தநாளன்று அல்லது நீங்கள் ஒரு தனிப்பட்ட திட்டத்தினால் காப்பு பெறுவீர்கள்.

ஓஹிப்+ பற்றி மேலதிகமாகத் தெரிந்துகொள்ள பின்வரும் இடங்களுக்குச் செல்லுங்கள்

**ஒன்ராறியோவில் ஆரோக்கியக் கவனிப்பு பற்றி பின்வரும் இணையதளங்களில் அறிந்து கொள்ளுங்கள்:**

- ontario.ca அல்லது findlink.at/ohip-info
- settlement.org

## உங்களது ஒன்ராறியோ ஆரோக்கியக் காப்பீட்டுத் திட்ட அட்டையைப் பெறல்

தேவையான ஆவணங்களை நீங்கள் பெற்ற உடனே நீங்கள் உங்களது OHIP அட்டைக்காக விண்ணப்பிக்க வேண்டும். இருப்பினும், அதைப் பெறுவதற்கு நீங்கள் கனடா வந்து சேர்ந்த பிறகு மூன்று மாதங்களுக்குக் காத்திருக்க வேண்டும். இந்த காத்திருக்கும் காலம் ஆனது நீங்கள் வந்திறங்கிய உங்களது பதிவில் காட்டும் தேதியன்று தொடங்குகிறது.

உங்களது OHIP அட்டைக்காக விண்ணப்பிப்பதற்கு, அருகில் உள்ள Service




Ontario மையத்துக்குச்செல்லுங்கள். உங்களது தகுதி பெற்ற குடியுரிமை அல்லது குடியேற்ற ஆவணத்துடன், உங்களை அடையாளம் காட்டும் இரண்டு பிற அடையாளச்சீட்டுகளுடன் கொண்டு செல்லுங்கள். இவை settlement.org அல்லது findlink.at/hc-docs என்னும் இணையத்தளங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன.

என்னும் இணையத்தளங்களில் பட்டியலிடப்பட்டுள்ளன.

- Service Ontario வின் தகவல் தரும் 1-800-267-8097 என்ற எண்ணில் அழைத்திடுங்கள் அல்லது
- Service Ontario இணையதளமான serviceontario.ca க்கு அல்லது வருகை தாருங்கள்

இந்த காத்திருக்கும் காலத்தில் வரம்புக்குட்பட்ட சேவைகளுக்கான ஒரு சமுதாய ஆரோக்கிய மையத்தை நீங்கள் அணுக முடியும். மாற்றாக, நீங்கள் தனியார் ஆரோக்கியக் காப்பீட்டினை வாங்கிக் கொள்ளலாம். இந்த பக்கத்தின் பக்கவாட்டில் அந்த ஆதாரவளங்களைப் பாருங்கள்.

## காத்திருக்கும் காலத்துக்கான விதி விலக்கு

ஓஹிப் காப்புக்கு இனி ஒரு காத்திருப்புக் காலம் இல்லை. நீங்கள் தகுதி பெற்றிருந்தால், உங்களுக்கு உடனடி மருத்துவ காப்பீடு கிடைக்கும்.

## அகதிகளுக்கான மத்திய அரசின் ஆரோக்கியப்பராமரிப்பு

மத்திய அரசின் இடைக்கால ஆரோக்கியத் திட்டம், OHIPக்கு தகுதியற்ற அகதிகள் உள்ளடங்கலாக, தகுதியுள்ள அகதிகளுக்கு தற்காலிகமான ஆரோக்கியப் பராமரிப்பு ஆதாயங்களை வழங்குகின்றது. இந்தத் திட்டம் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளுக்கான காப்புறுதியையும் உள்ளடக்குகின்றது.

காப்புறுதிக்கான தகுதி மற்றும் காப்புறுதி வகைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து, canada.ca க்கு அல்லது findlink.at/ifhp க்கு வருகைதாருங்கள்.

## உங்கள் குடும்ப மருத்துவர்

உங்களது குடும்பத்தின் ஆரோக்கியம் மற்றும் நலத்தில் உங்களது குடும்ப மருத்துவர் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறார். நீங்கள் சுகவீனமுற்று இருந்தால் அல்லது உங்களுக்கு மருத்துவ அறிவுரை தேவைப்பட்டால் வழக்கமாக நீங்கள் தொடர்பு கொள்ளும் முதல் நபர் அவரே ஆவார்; தேவைப்பட்டால் அவர் உங்களை ஒரு மருத்துவ நிபுணருக்கு பரிந்துரை செய்து அனுப்புவார். இருப்பினும், ஒன்ராறியோவின் சில பகுதிகளில், குடும்ப மருத்துவர் ஒருவரைக் காண்பது சிரமமாக இருக்கக்கூடும். இதைத் தொடங்குவதற்கு இதோ
சில வழிகள்:

- உங்களது பகுதியில் குடும்ப மருத்துவர்களைக் கண்டுபிடிப்பதற்கு, Ontario Ministry of Health and Long-Term Care -இனால் அளிக்கப்படும் Health Care Connect service அணுகுங்கள். Health Care Connect உடனடித் தொலைபேசி எண்ணான 1-800-445-1822 ஐ அழைத்திடுங்கள் அல்லது ontario.ca என்ற இணையதளத்திற்கு அல்லது findlink.at/hc-connect என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்.
- ஒன்ராறியோ இணையதளத்தில் மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் கல்லூரியில் “மருத்துவர் தேடலை” உபயோகியுங்கள். cpso.on.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.
- உங்களது குடியமர்வு ஆலோசகரிடம் பேசுங்கள்.
- பரிந்துரைப்புக்களுக்கு உங்களது குடும்பத்தார் மற்றும் நண்பர்களிடம் கேளுங்கள்.

### Telehealth Ontario

அவசரக் காலமில்லாத ஆரோக்கிய அறிவுரை ஒன்றை ஒரு செவிலியரிடம் இருந்து பெறுவதற்கு, 1-866-797-0000 என்ற எண்ணை 24 மணி நேரமும் வாரத்தின் ஏழு நாட்களிலும் அழைத்திடுங்கள். இந்த சேவையானது ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு மற்றும் 110 பிற மொழிகளிலும் கிடைக்கிறது. (TTY)இணைப்பு உடல் செயலிழப்பு உள்ள நபர்களுக்கு கிடைக்கிறது: 1-866-797-0007.

### வருகை தரக்கூடிய Walk-in மருத்துவ மையங்கள்

உங்களுக்கு ஒரு குடும்ப மருத்துவர் இல்லா விட்டால் அல்லது மருத்துவரைச் சந்திப்பதற்கான நியமனத்துக்காக நீங்கள் காத்திருக்க முடியாது என்றால் ஒரு உள்ளூர் Walk-in சிகிச்சையகத்துக்கு வருகை தாருங்கள். உங்களது (OHIP) அட்டையை நீங்கள் காட்ட வேண்டியிருக்கும். உங்களுக்கு அருகில் உள்ள ஒரு சிகிச்சையகத்தை, Health Care Options ல் கண்டுபிடித்திடுங்கள்: ontario.ca அல்லது findlink.at/hcoptions என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### Community Health Centres

### மையங்கள்)

ஒரு சமூக ஆரோக்கிய மையத்தைக் கண்டுபிடிப்பதற்காகவும் கூடுதல் தகவல்களைப் பெறுவதற்காகவும் வருகை தாருங்கள்: ontario.ca அல்லது findlink.at/healthcare

### அல்லது

ஒன்ராறியோ பல் மருத்துவக் Ontario Dental Association-னால் வழங்கப்படும் Find a Dentist service பெற அணுகுங்கள்: youroralhealth.ca அல்லது



*டயங்கள்*

*எவ்வாறு ஒரு குடும்ப மருத்துவரைக் கண்டு பிடிப்பது?*

*எவ்வாறு ஒரு பல் மருத்துவரைக் கண்டு பிடிப்பது?*

*எனக்கு அருகில் உள்ள, னறிவிப்பில்லாமல் வருகை தரக்கூடிய (walk-in) மருத்துவ மையம் எங்கிருக்கிறது?*

*எனக்கு அருகில் உள்ள, சமூக ஆரோக்கிய மையம் எங்கிருக்கிறது?*

*OHIP -இனால் எந்த சேவைகள் உள்ளடக்கப் படுகின்றன?*

*OHIP இனால் உள்ளடக்கப்படாத சேவைகளுக்கு எவ்வளவு செலவு ஆகும்?*

*பல் மருத்துவம் மற்றும் / அல்லது பரிந்துரைக்கும் மருந்துகளின் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஒன்றை எனது பணியமர்த்துபவர் அளிக்கிறரா?*

*கனடாவுக்கு வெளியே நான் பயணம் செய்யும் பொழுது, OHIP ஆனது ஒன்ராறியோவில்*

## பல் மருத்துவம்

மருத்துவமனை ஒன்றில் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டிய பல் மருத்துவ சேவைகளுக்கான கட்டணத்தை OHIP செலுத்தி வந்தாலும் கூட, பொதுவாக OHIP ஆனது பல் மருத்துவச் சேவைகளை உள்ளடக்குவதில்லை.

உங்களது உள்ளூர் பொது ஆரோக்கிய அலகு மூலமாக 17 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு செலவில்லாமல் பல் மருத்துவ சேவைகள் சிலவற்றை நீங்கள் பெற முடியும். Healthy Smiles Ontario திட்டம் பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு 1-800-268-1153 என்ற எண்ணை அழைத்திடுங்கள் அல்லது ontario.ca என்ற அல்லது findlink.at/smiles-ont என்ற Ontario Ministry of Health and Long-Term Care இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களில் உள்ள,

## மருத்துவ அவசரக் காலங்கள்

உங்களுக்கு ஒரு அவசரமான, உயிருக்கு-அச்சுறுத்தலாகக்கூடிய மருத்துவ அவசரத்தேவை இருந்தால், எந்த நேரத்திலும் உங்களது தொலைபேசியில் 911 என்ற இலக்கத்தை அழையுங்கள். உங்களை அழைப்பை ஏற்பவர் உங்களது இருப்பிடத்திற்கு நோயாளர் ஊர்தியைஅனுப்பி வைப்பார். நோயாளர் ஊர்தியில் அவசரகால மருத்துவ ஊழியர்கள் இருப்பார்கள், அவர்கள் உங்களுக்கு உடனடி சிகிச்சை தர முடியும். அவசரக்கால அழைப்பு மையங்கள், 170க்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்ப்பாளர்களை அளிக்க முடியும்.

மேலும் அருகிலுள்ள மருத்துவமனையின் அவசரக்கால அறைக்கும் கூட நீங்கள் செல்ல முடியும்-இவை வழக்கமாக தினமும் 24 மணி நேரமும், வாரம் ஏழு நாட்களும் திறந்திருக்கும். உங்களுக்கு OHIP பாதுகாப்பு இல்லை என்றால், நீங்கள் பெறும் அனைத்துச் சேவைகளுக்கும் கட்டணம் செலுத்தத் தேவையிருக்கும்.

## தடுப்பு ஊசிகள்

பல்வேறு நோய்களில் இருந்து வயது வந்தவர்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக, ஒன்ராறியோவில் ***நோய்த் தடுப்பு*** (அல்லது ***தடுப்பு ஊசிமருந்து***) திட்டம் உள்ளது. உங்களுக்கு அல்லது உங்களது குழந்தைகளுக்கு தடுப்பு ஊசிகள் போடப்பட்டு இருந்தால், ஒன்ராறியோவுக்கு நீங்கள் வரும் பொழுது, உங்களது பதிவுகளைக் கொண்டு வாருங்கள்.

நீங்கள் அல்லது உங்களது குழந்தைகள் தடுப்பு ஊசிகள் பெற்றுக்கொள்ளாமல் இருந்தால், எந்த தடுப்பு ஊசிகள் உங்களுக்குத் தேவை என்று அறிந்து கொள்வதற்காக, உங்களது குடும்ப மருத்துவருடன் அல்லது ஒரு சமுதாய ஆரோக்கிய மையத்தில் உள்ள மருத்துவ ஊழியருடன் பேசுங்கள். உங்களது



குழந்தையின் பள்ளிக்கு ஒரு நோய்த் தடுப்பு பதிவை நீங்கள் அளிக்க வேண்டி இருக்கலாம்.

ஒன்ராறியோவின் நோய்த் தடுப்பு திட்டம் பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, Ministry of Health and Long-Term Care ontario.ca என்ற இணையத்தளத்திற்கு அல்லது findlink.at/immuneinfo என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

findlink.at/CanadaHealthCare

## உளநல ஆரோக்கியக் கவனிப்பு

மனநோய் மருத்துவர்களால் வழங்கப்படும் ஆரோக்கியக் கவனிப்பு சேவைகளை OHIP உள்ளடக்குகின்றது. உளநல ஆரோக்கிய நிறுவனம், மருத்துவமனை அல்லது சமூக ஆரோக்கியக் கவனிப்பு போன்ற அரசு-நிதியுதவியைப் பெறும் ஒரு முகவரமைப்பு வாயிலாக நீங்கள் அணுகினால் தவிர, உளவியலாளர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் பிற ஆலோசகர்கள் ஆகியோரால் வழங்கப்படும் சேவைகளை OHIP உள்ளடக்குவதில்லை

ஒன்ராறியோவில் உள்ள உளநல ஆரோக்கியக் கவனிப்பு சேவைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு, 1-866-531-2600 என்ற எண்ணில் ஒன்ராறியோ உளநல வைத்திய உதவி இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது connexontario.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

உளநலச் சுகவீனம் உள்ள, போதைப் பொருள் துஷ்பிரயோகம் செய்கிற, அல்லது சூதாடும் பிரச்சினைகள் கொண்ட மக்களுக்கான இலவச தொலைபேசி உதவியைப் பெற, ConnexOntario இணையதளத்திற்கு வருகை தாருங்கள்: connexontario.ca

## மருத்துவக் கண்காணிப்பு

கனடாவுக்கு குடியிருப்போராக வந்து சேர்வதற்கு முன்பாக நீங்கள் மருத்துவப் பரிசோதனையை செய்திருக்கலாம், இங்கு வந்து சேர்ந்த பிறகு மற்றொரு பரிசோதனை உங்களுக்கு தேவைப்படும் என்று அங்கு நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது மருத்துவக் கண்காணிப்பு என்று அழைக்கப்படுகிறது மற்றும் இது நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறீர்கள் என்பதை உறுதி செய்வதற்காகும்.

இது உங்களுக்கு பொருந்துமானால், ஒன்ராறியோவுக்கு நீங்கள் வந்த பிறகு 30 நாட்களுக்குள், உங்கள் பகுதியில் உள்ள

# நுகர்வோர் சேவைகள்

## எளிமையான விடயங்கள் அனைத்து மாற்றங்களையும் ஏற்படுத்தலாம. தொலைபேசி தொடர்பை பெறுதல், இணையத்தை அணுகுதல் மற்றும் மளிகைப் பொருட்களை வாங்கும் இடத்தை அறிதல் போன்றவை உங்களது குடியமர்வுச் செயல்முறையில் முக்கியமான விடயங்கள் ஆகும்.



### நுகர்வோர் விழிப்புணர்வு

ஒன்ராறியோவின் சந்தைகள் பயனுள்ள பெறுமான பொருட்கள் மற்றும் சேவைகளைக் அளிக்கின்றன. நுகர்வோர் மற்றும் வர்த்தகங்கள் இரண்டையுமே பாதுகாக்கின்ற சட்டங்களே பெரும்பாலான நுகர்வோர் பரிவர்த்தனைகளை மேலாண்மை செய்கின்றன.

நீங்கள் தகவல் அறிந்த நுகர்வோர் ஆவதற்கு உங்களுக்கு உதவிடும் வகையில் கனடாவின் நுகர்வோர் கையேடு ஒன்றை மத்திய அரசு, மாகாண மற்றும் பிரதேச அரசுகள் கூட்டாகத் தயாரித்துள்ளனர். இது இணையத்தில் பொருட்கொள்வனவு வங்கியியல், குடியிருப்பு மற்றும் வீடு புதுப்பித்தல்கள் போன்ற தலைப்புகளில் தகவல்களை அளிக்கிறது. ஒன்ராறியோவின் நுகர்வோர் சேவைகள் அமைச்சகமானது நுகர்வோரின் பாதுகாப்பை மேலாண்மை செய்கிறது. கூடுதல் விபரங்களுக்கு, ontario.ca என்ற அல்லது findlink.at/consrights என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்

### தொலைபேசி மற்றும் இணையச் சேவைகள்

நகர்ப்புறப் பகுதிகளில், தொலைபேசி மற்றும் இணையச் சேவைகளுக்கு பல விருப்பத் தேர்வுகள் உள்ளன. கிராமப் பகுதிகளில் ஒரு சில விருப்பத் தேர்வுகளே உள்ளன.

பல நிறுவனங்கள் இவற்றை ஒரு ***தொகுப்பாக*** அளிக்கின்றன, அல்லது உங்களது தொலைபேசி (செல் போன் அல்லது லேன்ட்லைன்), இணையம் மற்றும் கேபிள் சேவைகள் ஆகியவற்றை இணைத்து தள்ளுபடி செய்த ஒரு பொதியாக வழங்குகின்றன. செல் போன் சேவைகளைக் தொகுப்பாகவும் சிக்கனமாகவும் பெறுபவதற்கு குடும்பத் திட்டங்களைப் பெறுவது ஒரு சிறந்த வழியாகும். நீண்ட தூர மற்றும் பன்னாட்டு அழைப்பு அட்டைகளும் கூட விருப்பத் தேர்வுகள் ஆகும்.

நீங்கள் கையொப்பம் இடுவதற்கு முன்பாக, ஒப்பந்த விபரங்கள் அனைத்தையும் வாசித்து புரிந்து கொள்ளுங்கள்.

ஒன்ராறியோ நெடுகிலும் பல பொது நூலகங்கள், உங்களது நூலக அட்டையுடன் இலவச இணையச் சேவையை அளிக்கின்றன. மேலும், உங்களிடம் ஏற்கனவே ஒரு wireless மடிக் கணினி இருந்தால், இலவச வயர்லெஸ் இணைய அணுகலை (Wi-Fi hotspots என்றும் அழைக்கப்படுகிறது) அளிக்கின்ற தேனீர்ச்சாலைகள் மற்றும் உணவகங்கள் போன்றவற்றுக்கும் நீங்கள் செல்லலாம்.

### தபால் சேவை

கனடா போஸ்ட் என்பது, பெரும்பாலான பெருநகர்கள், நகரங்கள் மற்றும் கிராமப்புற மையங்கள் ஆகியவற்றில் சில்லரைக் கடைகள் கொண்ட ஒரு தேசிய தபால் சேவை ஆகும். இந்த இடங்கள் எவற்றில் இருந்தும் நீங்கள் பொதிகளை அனுப்பவும் பெறவும் முடியும். மின்பொதி உடன் உங்களது கட்டணச் சீட்டுக்களை மேலாண்மை செய்யவும் அவற்றுக்கான கட்டணத்தை இணையத்தில் செலுத்தவும் முடியும்.

### உணவுப்பொருள் வாங்குவது

மளிகைக் கடைகளில் பெரும் அளவுகளில் தேர்வு செய்யும் வகையில், புதிய உணவு மற்றும் பிற மளிகைப் பொருட்களும் கிடைக்கின்றன. மேலும் நீங்கள் உணவுகளை, மூலைக்கடை என்று அழைக்கக்கூடிய convenience stores (இங்கு பொதுவாக விலை கூடுதலாக இருக்கிறது) அல்லது சிறிய பழக்கடைகள் மற்றும் காய்கறிக் கடைகளிலும் வாங்கலாம். பல பிராந்தியங்களில் நீங்கள் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உழவர் சந்தைகளிலும் வாங்க முடியும்.

### டிப்ஸ் தருவது

பொதுவாக மக்கள் உணவகங்கள், மதுபானச்சாலைகள், விடுதிகள் மற்றும் வாடகை வண்டி ஆகியவற்றில் தங்களுக்கு சேவை அளிப்போருக்கு சிறிது பணத்தை ***மேலதிகமாக*** கொடுக்கிறார்கள். மேலதிகமாகப் பணம் கொடுப்பது கட்டாயமல்ல, ஆனால் சிறப்பான சேவைக்கு உங்களது பாராட்டைத் தெரிவிப்பதற்கு இது ஒரு வழியாகும். வழக்கமாக நீங்கள் மேலதிகமாகப் கொடுக்கும் தொகை என்பது உங்களது பில் தொகையில் 10 முதல் 15 சதவிகிதம் ஆகும்.

findlink.at/ConsumerProtection

**அவசர உணவுத் தேவைகள்**

**உணவை வாங்குவதற்கான பணம் கொடுக்க உங்களால் இயலாது என்றால். ஒரு உள்ளூர் உணவு வங்கியில் இலவச உணவை நீங்கள் பெற முடியும். உங்களது குடியமர்வு ஆலோசகருடன் பேசுங்கள் அல்லது ஒன்ராறியோ உணவு வங்கி கூட்டுச் சங்கத்தை** 1-866-220-4022 **என்ற எண்ணில் அழைத்திடுங்கள்.** feedontario.ca **என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள். குடியமர்வு ஆலோசகர் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு,** settlement.org **என்ற இணையத்தளம் செல்லுங்கள்**

**கையேடு**

consumerhandbook.ca

**Canada Post**

canadapost.ca
1-866-607-6301

**இணையச் சேவைகள்**

findlink.at/dailylife

**உழவர் சந்தைகள்**

farmersmarketsontario.com



# குடியிருப்பு

## புதிதாகக் குடியமர்வோர் அனைவருக்குமே உள்ள ஒரு முக்கிய கவலை குடியிருப்பு பற்றியதாகும். இல்லம் என்று அழைக்கக்கூடிய வகையில் கட்டுபடியாகக் கூடிய விலையில் வீடு ஒன்றைப் பெறுவது என்பது குடியமர்வின் ஒரு முக்கிய பாகமாகும்.

### தற்காலிக் குடியிருப்பு

கனடாவுக்கு நீங்கள் வந்து இறங்கியதும், வாடகைக்கு அலலது விலைக்கு என ஒரு அடுக்கு மாடி வீடு, கோன்டோ (condo) அல்லது வீட்டைப் பார்த்து வரும் வேளையில், நீங்கள் தங்கியிருப்பதற்காக ஒரு தற்காலிக இடம் தேவைப்படலாம். ஹோட்டலில் தங்கி இருப்பதற்கு ஒரு குறைந்த செலவிலான மாற்றாக இருப்பது விடுதி ஒன்றில் தங்குவது ஆகும். தனி அறைகள் அல்லது மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஒரு பெரிய அறையில் உள்ள படுக்கைகள் என இவற்றில் ஏதாவது ஒன்றை விடுதிகள் அளிக்கின்றன. குளியலறை மற்றும் சமையலறையைக்கூட நீங்கள் பகிர்ந்து கொள்ளலாம். விடுதி அல்லது ஹோட்டல் ஒன்றைக் கண்டு பிடிப்பதற்கு:

- yellow pages க்கு வருகை தாருங்கள்: yellowpages.ca
- நீங்கள் குடியமரும் பெருநகரம் அல்லது நகரத்திற்கான சுற்றுலா இணையத்தளம் சென்று தேடுங்கள் மற்றும் தங்கும் வசதி பற்றிய பட்டியலை வாசியுங்கள்.
- ஹோட்டல் மற்றும் ஹாஸ்டல் பட்டியல்கள் அடங்கிய கனடாவுக்கான ஒரு சுற்றுலா வழிகாட்டிப் புத்தகத்தை வாங்குங்கள்.

findlink.at/HousingInCanada



### ஒன்ராறியோவில் குடியிருப்பு வகைகள்

- வாடகை அடுக்கு மாடி வீடு-ஒரு கட்டிடம் அல்லது ஒரு வீட்டில் உள்ள ஒன்று, இரண்டு அல்லது மூன்று படுக்கை அறை கொண்ட அடுக்கு மாடி வீடு; ***தனிநபர் வசிக்கும்*** அலகுகளில் ஒற்றை அறை ஒன்று இருக்கும், அது வசிப்பிடமாகவும் படுக்கை அறையாகவும் விளங்கும். அனைத்து அடுக்கு மாடி வீடுகளிலும் ஒரு சமையலறை மற்றும் குளியலறை இருக்கிறது.
- வாடகை அறை- சில நேரங்களில் பெரிய வீடுகள் பல தனிநபர் படுக்கை அறைகளாக பிரிக்கப்பட்டு தனிநபர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன. அவர்கள் ஒரு சமையல் அறை மற்றும் ஒரு குளியல் அறையைப் பகிர்ந்து கொள்கின்றன; அவை சில நேரங்களில் ரூமிங் ஹவுஸ்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- கோன்டோமினியம் (கோன்டோ)- பெரும்பாலான கோன்டோக்கள் மிக உயரமான கட்டிடங்களில், பல யூனிட்டுகளுடன் உள்ளன. இதன் உரிமையாளர் இதன் பராமரிப்புக்காக ஒரு மாதாந்திர கட்டணத்தைச் செலுத்துகிறார்.
- வீடு-தனி வீடுகள், இவற்றைச் சுற்றிலும் இடம் இருக்கிறது. பகுதியாகப் பிரித்த தனி வீடுகள் ஒரு பக்கத்தில் அடுத்த வீட்டுடன் ஒரு சுவரைப் பகிர்ந்து கொள்கிறது. townhouses வீடுகள் தனது இரு பக்கங்களிலுமே சுவரைப் பகிர்ந்து கொள்கின்றன.

findlink.at/HousingInCanada

### வாடகைக்கு

வாடகை வீட்டைக் கண்டுபிடிப்பதற்கு மிகவும் பொதுவான வழி உங்களது சமூகச் செய்தித்தாளில் உள்ள விளம்பரங்களைப் பார்ப்பது தான்: findlink.at/newspapers

மேலும் நீங்கள் செய்யக்கூடியது:

- "அடுக்கு மாடி வீடு கிடைக்கும்" அல்லது "வாடகைக்கு" என்ற விளம்பரங்கள் கொண்ட அறிவிப்புகள் உள்ள கட்டங்களைப் பார்ப்பதற்காக நீங்கள் பார்க்கவிரும்பும் அக்கம் பக்கத்தில் நடவுங்கள்.
- நண்பர்கள், உறவினர்கள் மற்றும் உடன் பணியாற்றுபவர்களிடம் கேளுங்கள்
- நூலகங்கள், மளிகைக் கடைகள் மற்றும் சமுதாய மையங்கள் ஆகியவற்றில் உள்ள அறிவிப்புப் பலகைகளைப் பாருங்கள்.

- viewit.ca என்ற இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்

ஒன்றாறியோவில் வாடகைக் குடியிருப்பு பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, இந்த பக்கத்தின் பக்கவாட்டில் உள்ள தகவல் பட்டையில் பட்டியலிடப்பட்டுள்ள இணையத்தளங்களுக்கு வருகை தாருங்கள்.

**வீட்டு வாடகை என்பது மாகாணம் தோறும் வித்தியாசப்படும். பொதுவாக பெரிய நகர்ப்புறப் பகுதிகளில் குடியிருப்புச் செலவுகள், சிறிய நகரங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கின்றன. ரொறன்றோ போன்ற பெரு நகரங்களில் அக்கம் பக்கத்து இடங்களுக்கு இடையே கூட வாடகை வித்தியாசங்கள் பெருமளவில் இருக்கலாம். குடியிருப்புச் செலவுக்காக உங்களது வருமானத்தில் இருந்து 30 சதவிகிதத்திற்கு அதிகமாக நீங்கள் செலவழிக்கக் கூடாது எனப் பெரும்பாலான கனேடிய நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர்.**

## குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பம் இடுவது

பல நில உடமையாளர்களுக்கு குத்தகை ஒப்பந்தம் என்னும் ஒரு சட்டப்படியான ஒப்பந்தம் தேவைப்படுகிறது. உங்களது குத்தகையானது உங்களது வாடகை ஒப்பந்த காலம் (வழக்கமாக 12 மாதங்கள்), வாடகைத் தொகை மற்றும் உங்களது வாடகையில் அடங்குபவையான வாகன நிறுத்தம், கேபிள், மின்சாரம் அல்லது இயற்கை வாயு போன்றவற்றைக் குறிக்க வேண்டும்.

பல நில உடமையாளர்களுக்கு, ஒரு மாத வாடகைக்குச் சமமான ஒரு வைப்புத் தொகையும் தேவைப்படுகிறது. இந்த வைப்புத் தொகையானது உங்களது கடைசி மாத வாடகை என கருதப்படும்.

## வாடகை செலுத்தல்

வழக்கமாக, உங்களது வாடகையை ஒவ்வொரு மாதமும் முதல் நாளன்று இந்த மூன்று வழிகளில் ஒன்றின் மூலம் செலுத்துவீர்கள்:

- நீங்கள் செலுத்தும் முழு தொகைக்கும் பற்றுச்சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்யுங்கள்.
- பின் தேதியிட்ட காசோலைகள்-ஒரு எதிர்கால தேதி அதன் மீது எழுதப்பட்ட காசோலைகள், அந்த தேதி வரை அவை காசாக்கப்பட முடியாது. உங்களது குத்தகைக் காலம் முழுவதற்குமான பின் தேதியிட்ட காசோலைகளை அளிக்கும்படி உங்களது இட உரிமையாளர் கேட்கலாம்.
- அத்தாட்சி பெற்ற காசோலைகள்-உங்களது வங்கியால் அத்தாட்சி பெற்றுள்ள காசோலைகள். உங்களது முதலாவது மற்றும் கடைசி மாதத்தின் வாடகையானது அத்தாட்சி செய்யப்பட்டு இருக்க வேண்டும் என்று உங்களது இட உரிமையாளர் கேட்கலாம்.

p.93

## வாடகை உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

ஒன்றாறியோவில் குடியிருப்பை மேலாண்மை செய்வது The Residential Tenancies Act (RTA) என்னும் சட்டம் ஆகும். உங்களது வாடகையை எவ்வளவால், எவ்வளவு காலத்துக்கு ஒருதடவை அதிகரிக்க முடியும், மற்றும் நீங்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற விரும்பினால் அதற்கு முன்பாக எவ்வளவு கால அறிவிப்பு கொடுக்க வேண்டும் போன்றவை உள்ளடங்கலாக நில உடமையாளர்களும் வாடகைக்கு குடியிருப்போர்களும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய அனைத்து விதிகளையும் இந்த சட்டம் உள்ளடக்குகின்றது.

- RTA பற்றி வாசிப்பதற்கு, Ministry of Municipal Affairs and Housing பற்றிய ontario.ca என்ற இணையதளத்திற்கு அல்லது findlink.at/rtact என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்
- நில உடமையாளர்கள் மற்றும் வாடகைக்கு குடியிருப்போர் ஆகிய இருவரும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய பற்றிய சட்டங்கள் பற்றிய தகவலுக்கு, நில உடமையாளர்கள் மற்றும் வாடகைக்கு குடியிருப்போர் சபையை (Landlord and Tenant Board) 1-888-332-3234 என்ற எண்ணில் அழைத்திடுங்கள் அல்லது ltb.gov.on.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## அரசின் நிதி ஆதரவு அளிக்கப்படும் குடியிருப்பு

ஒன்றாறியோவில் உள்ள பெரும்பாலான நகரங்களில் சில, அரசின் நிதி உதவி அளிக்கப்படும் குடியிருப்புகளில் (***மானியம் பெற்றவை*** என்று பெரும்பாலும் அழைக்கப்படுகிறது), உங்களது வருமானத்தின் அடிப்படையில் வாடகை விதிக்கப்படுகிறது. இத்தகைய குடியிருப்பைப் பெறுவதற்கு காத்திருக்கும் காலம் நீண்டதாக இருக்கக் கூடும்-சில நேரங்களில் பல வருடங்கள் ஆகக் கூடும்.

உங்கள் பகுதியில் மானியம் பெற்ற குடியிருப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கு, உங்களது குடியமர்வு ஆலோசகருடன் பேசுங்கள்.

## லாப-நோக்கில்லாத கூட்டுறவுக் குடியிருப்பு

கூட்டுறவுக் குடியிருப்பு அங்கு வசிக்கும் மக்களுக்குச் சொந்தமானது மற்றும் அவர்களால் மேலாண்மை செய்யப்படுகிறது. லாப-நோக்கில்லாத

### ஒன்றாறியோ நகராட்சி விடயங்கள் மற்றும் அமைச்சகம்

ontario.ca என்ற இணையத்தளத்தில் அல்லது findlink.at/ont-mmah என்ற இணையத்தளத்தில் இந்த அமைச்சகத்தின் குடியிருப்பு யுக்திகளை வாசியுங்கள்

### Canada Mortgage & Housing Corporation


வாசியுங்கள் ***கனடாவில் உள்ள உங்களது முதலாவது இல்லத்தை வாடகைக்கு விடுவது : புதிதாக வருபவர்கள் அறியத் தேவையானது:*** cmhc.ca அல்லது

### Settlement.org

ஒன்றாறியோவில் குடியிருப்பு பற்றிய விவரமான தகவலுக்கு: settlement.org or findlink.at/housinginf

### குடியிருப்பு உதவி கூட்டுறவு

வீடில்லாத மக்களுக்கான அல்லது வீடற்றவர்களாகக் கூடிய மக்களுக்கான சேவைகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள்: findhousinghelp.ca





விடயங்கள்

*நான் வசிக்க விரும்பும் பகுதியில் லாப-நோக்கில்லாத குடியிருப்பு கூட்டுறவு ஒன்று இருக்கிறதா? எவ்வாறு நான் விண்ணப்பிக்க வேண்டும்?*

*அரசின் நிதி உதவி அளிக்கப்படும் டியிருப்புக்கான காத்திருக்கும் பட்டியலில் எவ்வாறு நான் இடம் பெறுவது?*

*வீடு ஒன்றை வாங்குவதற்கு நான் முடிவு செய்தால், எந்த வங்கி அல்லது கடன் ஒன்றியம் எனக்கு ஒரு அடமானக்கடன் தரும்?*

*வீடு வாங்குவதற்கு நான் முடிவு செய்தால், முதல் தவணைக்காக எவ்வளவு பணத்தை நான் சேமித்து வைக்க வேண்டும்?*

*எனது வாடகையில் எந்தெந்த செலவுகள்*

கூட்டுறவுக் குடியிருப்புகளின் வாடகை பெரும்பாலும் சராசரியைக் காட்டிலும் குறைவாகும். கூட்டுறவு உறுப்பினர்கள் தங்களது கூட்டுறவை மேலாண்மை செய்வதிலும் பராமரிப்பதிலும் உதவுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறார்கள். கூட்டுறவுக் குடியிருப்புக்காகக் காத்திருக்கும் காலம் பொதுவாக நீண்டதாக இருக்கிறது. பொதுவாக இரண்

டு முதல் நான்கு வருடங்களாக இருக்கிறது. உங்களது பகுதியில் உள்ள கூட்டுறவுக் குடியிருப்புகளின் பட்டியல் ஒன்றைக் காண்பதற்கு non-profit co-op Housing ***(லாப-நோக்கில்லாத கூட்டுறவுக் குடியிருப்பு)*** என்ற தேடுதல் வார்த்தைகளை இட்டு ஒரு இணையத்தளத் தேடல் செய்யுங்கள்.

findlink.at/HousingInCanada

## வீடு வாங்கல்

வீடு வாங்குவதற்கு நிறைய திட்டமிடல் தேவையாகும், எனவே முடிந்த வரை விரைவிலேயே தகவல்களைச் சேகரிக்கத் தொடங்குவது ஒரு நல்ல யோசனை ஆகும்.

முதல் தடவையாக வீடு வாங்குபவர்கள், புதிதாக வந்திருக்கும், வீடு வாங்க நினைப்பவர்களுக்கான Canada Mortgage and Housing Corporation வழிகாட்டியை cmhc.ca என்ற இணையத்தளத்தில் அல்லது findlink.at/cmhcnc என்ற இணையத்தளத்தில் வாசியுங்கள்

வீடு வாங்குவதற்காக ஒரு அடமானக் கடனைப் பெறுவதற்கு நீங்கள் முயற்சி செய்கையில், ஒரு நல்ல கிரெடிட் வரலாறு இருப்பது அவசியம் ஆகும். புதிதாக வந்திருக்கும் ஒருவர் என்ற முறையில், கனேடிய வங்கிகள் அங்கீகரிக்கக்கூடிய ஒரு கிரெடிட் வரலாறு உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம். எனவே உங்களால் முடிந்த வரை விரைவில், அதை உருவாக்க வேண்டும். ஒரு கிரெடிட் வரலாற்றை எவ்வாறு நிறுவுவது என்று ஒரு வாடிக்கையாளர் சேவைப் பிரதிநிதியிடம் பேசுங்கள்.

வீடு வாங்குவதற்காக ஒரு விருப்பறிவுப்பு செய்வதற்கு நீங்கள் தயாராக இருக்கும் பொழுது, வீட்டை வாங்குவதற்கு முன்பாக ஒரு தொழில்முறை நிபுணர் அந்த வீட்டைச் சோதித்துப் பார்ப்பதை நிபந்தனையாக வைப்பது புத்திசாலித்தனமானது. அந்த ஆய்வாளர் அந்த வீட்டிற்கு பழுதுபார்ப்பது தேவைப்படும் என்று கண்டுபிடித்தால், நீங்கள் அதை ரத்து செய்ய முடியும் அல்லது விருப்பறிவிப்பை மாற்ற முடியும்.

findlink.at/HousingInCanada

## இரண்டாம்நிலைக் கல்விக்குப் பிந்தைய மாணவர் குடியிருப்பு

பல பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகள் தங்களது மாணவர்களுக்கு குடியிருப்புகளை அளிக்கிறார்கள். கூடுதல் தகவலுக்கு, நீங்கள் போக விரும்பும் பல்கலைக் கழகத்தின் அல்லது கல்லூரியின் குடியிருப்புத் துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்.

கோடை காலத்தில் மாணவர்கள்

அல்லாதவர்களுக்கு சில நேரங்களில் பல்கலைக் கழக மற்றும் கல்லூரிக் குடியிருப்புகள் கிடைக்கின்றன. புதிதாக வந்தவர்கள் மற்றும் பயணம் செய்பவர்கள் தங்குவதற்கு அவை ஒரு சிக்கனமான

இடமாக இருக்கக் கூடும்.

## அவசரக்காலக் குடியிருப்பு (காப்பகங்கள்) (ஷெல்டர்கள்)

வீடற்ற அல்லது நெருக்கடி நிலையில் இருக்கும் மக்களுக்கு காப்பகங்கள் குறுகிய கால குடியிருப்புகளை அளிக்கின்றன. உங்களது வீட்டில் இருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டால் அல்லது வீட்டில் நீங்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கூடிய அபாயத்தில் இருக்கிறீர்கள் என்றால், நீங்கள் ஒரு காப்பகத்தில் குடியிருக்கலாம். உள்ளூர் காப்பகங்களுக்கான தொலைபேசி இலக்கங்கள், உங்களது தொலைபேசி புத்தகத்தின் தொடக்கத்தில், பிற அவசரக்கால எண்களுடன் பட்டியல் இடப்பட்டு உள்ளன. நீங்கள் 211 என்ற எண்ணையும் அழைக்கலாம்.

findlink.at/HousingInCanada

## முதியோருக்கான குடியிருப்பு

உள்ளூரில் அரசு உதவியுடன் கூடிய, முதியோருக்கான குடியிருப்பினை நீங்கள் உங்களது தொலைபேசி புத்தகத்தின் நீல நிறப் பக்கங்களில் காணலாம். தனிப்பட்ட முதியோர் குடியிருப்புகளுக்கு, மஞ்சள் பக்கங்களில் பாருங்கள் அல்லது yellowpages.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

முதியோருக்கான குடியிருப்பு உட்பட்ட பல வகையான சேவைகள் பற்றிய தகவலுக்கு, 1-888-910-1999 என்ற இலக்கத்தில் Ontario Seniors' Secretariat அழைத்திடுங்கள் அல்லது findlink.at/seniorguid என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## ஒன்ராறியோவின் மனித உரிமைகள் நடத்தை விதி மற்றும் குடியிருப்பு

***ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதியின்*** கீழ், உங்களது இனம், வம்சமரபு, பிறப்பிடம், நிறம், இனம் சார்ந்த தோற்றுவாய், குடியுரிமை, மதம், வயது, பாலினம், பால் நாட்டம், குற்றங்களின் பதிவு, திருமணநிலை, ஒத்த-பால் உறவுப் படிநிலை, குடும்ப நிலைமை அல்லது இயலாமை காரணமாக உங்களைப் பாகுபடுத்த முடியாது.

உங்களது உரிமைகள் பற்றி கூடுதலாகத் தெரிந்து கொள்வதற்கு, Ontario Human Rights Commission ohrc.on.ca என்ற அல்லது findlink.at/ohrhousing என்ற

இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்



# சமூகப் பங்கேற்பு

சமூக மற்றும் பொழுது போக்குத் திட்டங்கள் மக்களைச் சந்திப்பதற்கும், உங்களது மொழித்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும் மற்றும் ஓய்வுநேரச் செயல்பாடுகளை நீங்கள் அனுபவிப்பதற்கும் உதவ முடியும். உங்களுக்கும் உங்களது குடும்பத்தாருக்கும் கிடைக்கக்கூடிய சமூகச் செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

## சமூகப் பொழுதுபோக்கு மையங்கள்

ஒன்ராறியோவில் உள்ள ஒவ்வொரு நகரத்திற்கும் சமூகத் திட்டங்கள் மற்றும் பொது பொழுதுபோக்கு மையங்கள் உள்ளன. சமூக மக்கள் சந்திக்கும் வகையில் அனைத்து மையங்களிலும் இடவசதி உள்ளது. மேலும் பல மையங்களில் ஸ்கேட்டிங் தளங்களும், நீச்சல் குளங்களும், உடற்பயிற்சி நிலையங்களும் விளையாட்டுத் திடல்களும் உள்ளன. திட்டங்கள் மற்றும் வசதிக்கூடங்கள் இலவசமானவை அல்லது குறைந்த கட்டணம் கொண்டவையாகும்.

உங்களது உள்ளூர் சமூக பொழுதுபோக்கு மையத்தில் உள்ள செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் பற்றிக் கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, உங்களது குடியிருப்பு ஆலோசகருடன் பேசுங்கள், 211 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள், உங்களது தொலைபேசிப் புத்தகத்தில் நீலப் பக்கங்களில் பாருங்கள் அல்லது Community Recreation Centre + Name of Your Town. ***(சமுதாய பொழுதுபோக்கு மையம் +உங்களது நகரத்தின் பெயர்)*** என்ற வார்த்தைகளை இட்டு இணையத்தில் தேடுங்கள்.

## பொது நூலகங்கள்

உங்களது உள்ளூர் பொது நூலகத்தில், புத்தகங்கள், CD, DVD க்கள், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் உள்ள சஞ்சிகைகள் மற்றும் செய்தித்தாள்களை நீங்கள் பெறலாம். பெரும்பாலான நூலகங்கள் இலவசமான இணைய வசதியையும் கூட அளிக்கின்றன. வயது வந்தவர்கள் மற்றும் குழந்தைகள் ஆகிய இருவருக்குமே பல வகையான திட்டங்களை நூலகங்கள் அளிக்கின்றன, அவற்றில் வாசிப்பு மற்றும் கதை சொல்லும் கிளப்கள், புதிதாக வந்தவர்களுக்கான மொழி வகுப்புகள் மற்றும் எழுத்தாளர்களால் வாசிக்கப்படுவது போன்றவையும் அடங்கும். சில நூலகங்கள் வேலை வாய்ப்புத் தகவல்களையும் ஆதரவுகளையும் கூட அளிக்கின்றன.

உங்களது உள்ளூர் பொது நூலகத்தைக் கண்டு பிடிப்பதற்கு, சுற்றுலா கலாச்சாரம் மற்றும் விளையாட்டுக்கான அமைச்சகத்தின் ontario.ca என்ற அல்லது findlink.at/opl என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

நூலக அட்டை ஒன்றைப் பெறுவதற்கு, அதிகாரப்பூர்வமான அடையாளச் சீட்டு ஒன்று (கடவுச்சீட்டு அல்லது வாகன ஓட்டுநர் உரிமம்) மற்றும் உங்களது முகவரிச் சான்று ஒன்று (தொலைபேசி, தண்ணீர் அல்லது கேபிள் ரசீது போன்றவை) உங்களுக்குத் தேவைப்படும்.

## வழிபாட்டு இடங்கள்

***உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சாசனத்தின்*** கீழ் கனேடியருக்கு தங்களது மதத்தைக் கடைப்பிடிப்பதற்கு சுதந்திரம் இருக்கிறது. ஒன்ராறியோ என்பது ஒரு மத சார்பற்ற சமூகமாக இருக்கும் பொழுது, ஒன்ராறியர்கள் தேவாலயங்கள், சினகோக்குகள், மசூதிகள், கோவில்கள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்களில் கூடுவதன் மூலமாக தங்களது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறார்கள்.

உங்களுக்கு அருகில் உள்ள வழிபாட்டு இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு, வழிபாட்டு இடங்கள்+ உங்களது நகரத்தின் பெயர் என்ற வார்த்தைகளை இட்டு இணையத்தில் தேடுங்கள்.

## தன்னார்வத் தொண்டு செய்தல்

போற்றத்தக்க காரணத்திற்காக உங்களது நேரத்தை தானமளித்தல் மக்களைச் சந்திக்கவும் உங்களது சமூகத்தைச் சிறந்த முறையில் அறிந்து கொள்வதற்கும் ஒரு சிறந்த வழியாகும். தன்னார்வத்துடன் தொண்டு செய்வது நீங்கள் வேலை தேடும் பொழுது பயனளிக்கக்கூடும், ஏன் என்றால் அதில் நீங்கள் மதிப்பு மிக்க தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள் மற்றும் அதை உங்களது பணி அனுபவமாகவும் நீங்கள் சேர்த்துக் கொள்ளவும் முடியும். சில நிறுவனங்கள் உங்களை தன்னார்வத் தொண்டராக ஏற்பதற்கு முன்பாக, காவல் துறை பின்புலச் சோதனைக்கு ஆளாகுமாறு உங்களைக் கேட்கலாம்.

- தன்னார்வத் தொண்டு பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கும் மற்றும் உங்கள் பகுதியில் ஒரு தன்னார்வத் தொண்டு மையத்தைக் கண்டுபிடிப்பதற்கும் ஒன்ராறியோ தன்னார்வத் தொண்டு மையத்தின் நெட்ஒர்க் ovcn.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்
- Ministry of Labour, Immigration, Training and Skills Development: findlink.at/mci-active என்னும் இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்
- உங்கள் பகுதியில் தன்னார்வத் தொண்டு செய்வதற்கான வாய்ப்புகள் பற்றி உங்களது குடியமர்வு ஆலோசகரிடம் கேளுங்கள்.
- 211 என்ற எண்ணை அழைத்திடுங்கள்.



# போக்குவரத்து

நீங்கள் பணிக்குச் செல்வதாக இருந்தாலும் சரி, உங்களது புதிய அக்கம் பக்கத்தில் இருக்கும் பகுதியைச் சுற்றிப் பார்க்கச் செல்வதாக இருந்தாலும் சரி அல்லது உங்களது குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்வதாக இருந்தாலும் சரி, உங்களது நகருக்குள் பல்வேறு இடங்களுக்கும் எளிதில் செல்ல முடிவதே உங்களது சமுதாயத்தில் நீங்கள் குடியமர்வதற்கான முக்கிய கூறாகும்.

## பொதுப் போக்குவரத்து

ஒன்றாறியோவில் உள்ள பெரும்பாலான நகரங்களில் ஓரளவுக்கு மலிவான பொதுப் போக்குவரத்து அமைப்புகள் உள்ளன. பெரிய நகரங்களில் நன்கு வளர்ச்சி அடைந்த பொதுப் போக்குவரத்து அமைப்புகள் உள்ளன, அவற்றில் பேருந்துகள், புகை வண்டிகள், சுரங்க ரயில்கள் (சப்வேக்கள்) மற்றும் தண்டுர்திகள் (ஸ்ட்ரீட்கார்ஸ்) ஆகியவை அடங்கும். பெரும்பாலும் மாதாந்திர நுழைவுச்சீட்டுகளை வாங்கிக் கொள்வது அல்லது பயணச்சீட்டுகளை /டோக்கன்களை மொத்தமாக வாங்கிக் கொள்வது மலிவாக இருக்கும்.

உங்களது பகுதியில் பொதுப் போக்குவரத்துப் பற்றி அறிந்து கொள்வதற்கு, உங்களது தொலைபேசிப் புத்தகத்தின் நீலப் பக்கங்களைப் பாருங்கள் அல்லது ontario என்ற என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## வாடகையுந்துகள் (டாக்ஸிகள்)

ஒன்றாறியோவின் பெரும்பாலான பகுதிகளில், உங்களது இடத்திற்கு வந்து அழைத்துச் சென்று நீங்கள் போகும் இடத்திற்கு கொண்டு போய்விடும் வகையில் டாக்ஸியை வாடகைக்கு எடுக்கலாம். டாக்ஸி கட்டணம் கூடுதலாக இருக்கலாம், எனவே உங்களது பயணத்தைத் துவக்குவதற்கு முன்பாக, உங்களது ஓட்டுநரிடம் சுமாரான கட்டணத்தைக் கேட்டுக் கொள்வதை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். மீட்டரைத் தெளிவாகப் பார்க்க கூடியதாயிருப்பது அவசியம் (அது அந்த பயணத்தின் கட்டணத்தைக் காட்டுகிறது).

உங்களது உள்ளூர் டாக்ஸி நிறுவனத்தைக் கண்டுபிடிப்பதற்கு, உங்களது தொலைபேசி புத்தகத்தின் மஞ்சள் பக்கங்களைப் பாருங்கள் அல்லது yellowpages.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## கார் வாடகைக்கு எடுப்பது

உங்களுக்குச் சொந்தமாக கார் இல்லை என்றால், வாடகைக்குப் பெறுவது மிகவும் வசதியாக இருக்கும். கையொப்பம் இடுவதற்கு முன்பாக, வாடகை ஒப்பந்தத்தைக் கவனமாகப் படித்திடுங்கள். உங்களுக்கு கண்டிப்பாக காப்பீட்டுப் பாதுகாப்பு இருக்க வேண்டும்.

பல பெரிய நகரங்களில், போன்ற (Zipcar) கார்-பகிர்வுச் சேவை ஒன்றில் நீங்கள் இணைந்து கொள்ள முடியும், இது குறுகிய காலங்களுக்கு, உள்ளூரில் சிறுசிறு தொலைவுகளுக்கு சென்று வருவதற்கு, கார் ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறது. இந்த சேவைகளில் பொதுவாக, காரை எடுக்கும் மற்றும் விட்டுச் செல்லும் (பிக்-அப் மற்றும் டிராப்-ஆஃப்) வசதியான இடங்கள் உள்ளன.

உள்ளூரில் கார்-வாடகை நிறுவனங்கள் மற்றும் கார் பகிரும் சேவைகளைக் கண்டுபிடிப்பதற்கு, உங்களது உள்ளூர் தொலைபேசிப் புத்தகத்தின் மஞ்சள் பக்கங்களைப் பாருங்கள் அல்லது yellowpages.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## உங்களது ஓட்டுநர் உரிமம் பெறுதல்

உங்களது தாய்நாட்டில் பெறப்பட்ட ஒரு ஓட்டுநர் உரிமம் உங்களிடம் இருக்கிறது என்றால், அது கனடாவுக்கு நீங்கள் வருகை தந்த 60 நாட்களுக்குச் செல்லுபடியாகும். அதன் பிறகு, உங்களுக்கு ஒரு ஒன்றாறியோ ஓட்டுநர் உரிமம் தேவைப்படும்.

ஒன்றாறியோ உரிமம் பெறுவதற்காக நீங்கள் விண்ணப்பிக்கும் பொழுது, உங்களது முன்னைய வாகான ஓட்டல் வரலாறு கருத்தில் கொள்ளப்படும். முன்னதாக உங்களுக்கு உரிமம் இருந்தாலும் சரி இல்லை என்றாலும் சரி, ஒன்றாறியோவின் போக்குவரத்து விதிகள் பற்றிய எழுத்துத் தேர்விலும் மற்றும் ஒன்று அல்லது இரண்டு சாலை சோதனைகளிலும் நீங்கள் கண்டிப்பாகத் தேர்ச்சி பெற வேண்டியிருக்கும்.

ஒரு ஓட்டுநர் உரிமம் என்பது அதிகாரப்பூர்வமான அடையாளம் ஆகும்.

ஓட்டுநர் உரிமத்தைப் பெறுவதற்கு நீங்கள் விரும்பாமல் அதிகாரப்பூர்வமான அடையாளத்தைப் பெறுவதற்கு நீங்கள் விரும்பினால், நீங்கள் ஒன்றாறியோ புகைப்பட அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். இதுவும் அதிகாரப்பூர்வமான அடையாளம் என்று கருதப்படுகிறது.

இதற்கு விண்ணப்பிப்பதற்கு, உங்களது சட்டப்படியான பெயரையும், பிறந்த தேதியையும் உங்களது கையெழுத்தையும் காட்டுகின்ற அசல் அடையாளத்தைக் காட்ட வேண்டும். ஒரு விண்ணப்பப் படிவத்தையும் நீங்கள் நிரப்ப வேண்டியிருக்கும். இந்த அட்டைக்கான கட்டணம் $35.00 ஆகும். கூடுதல் தகவலுக்கு serviceontario.ca என்ற அல்லது findlink.at/on-photoid என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

**தயவுசெய்து குறித்துக் கொள்ளுங்கள்: உங்களிடம் ஓட்டுநர் உரிமமும் ஒன்றாறியோ புகைப்பட அட்டையும் இருக்கக் கூடாது-ஏதாவது ஒன்றை மட்டுமே நீங்கள் தேர்வு செய்ய வேண்டும்.**




### ஓட்டுநர் உரிமம்

உங்களது ஒன்றாறியோ ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான தகவலுக்கு, drivetest.ca என்ற அல்லது findlink.at/driverinfo என்ற இணையத்தளத்திற்கு

### மையங்கள்


உங்களது உள்ளூர் ஓட்டுநர் சோதனை மையத்தை, தொலைபேசிப் புத்தகத்தின் மஞ்சள் பக்கங்களில் கண்டுபிடியுங்கள், drivetest.ca என்ற அல்லது findlink.at/testcentre என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### ஓட்டுநரின் கையேடு

ontario.ca என்ற அல்லது findlink.at/dhandbook என்ற இணையத்தளத்திற்குச் சென்று சாலை விதிகளைப் படியுங்கள் மற்றும் உங்களது எழுத்துத் தேர்வுக்குத் தயாராகுங்கள். அனைத்து ஓட்டுநர் சோதனை மையங்களிலும் மற்றும் பல சில்லறைக் கடைகளிலும் இந்த கையேட்டின் அச்சிட்ட ஒரு பிரதியை நீங்கள் வாங்க முடியும்.

### மிதிவண்டி ஓட்டுவது மற்றும் பாதுகாப்பு

1-800-267-8097 என்ற இலக்கத்தில் ServiceOntario அழைத்திடுங்கள் அல்லது ontario.ca என்ற அல்லது findlink.at/cycling என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்



## வாகனம் ஓட்டும் விதிகள்

வாகன ஓட்டும் விதிகளை மீறுவதற்க்கான அபராதங்கள் மிக அதிகமாகும். மிக முக்கியமான விதிகள் சில இங்கு தரப்படுகின்றன:

- வாகனம் ஓட்டுவதற்கு உங்களிடம் கண்டிப்பாக ஒரு ஓட்டுநர் உரிமம் இருக்க வேண்டும் மற்றும் எப்பொழுதுமே அது உங்கள் கைவசம் இருக்க வேண்டும்.
- உங்களுக்கு கண்டிப்பாக வாகனக் காப்பீடு இருக்க வேண்டும்.
- காருக்குச் சொந்தக்காரர் நீங்கள் என்ற சான்று கண்டிப்பாக வேண்டும்-அதை காரில் வைத்திருங்கள்.
- அறிவிக்கப்பட்ட வேக அளவுக்கு அதிக வேகத்தில் ஒருபொழுதும் ஓட்டாதீர்கள். அதிவேகத்திற்கான அபராதங்கள் மிக அதிகம் மற்றும் அதனால் காப்பீட்டுச் செலவுகள் அதிகமாகும் வாய்ப்பு உள்ளது.
- நீங்கள் மற்றும் உங்களுடன் பயணிக்கும் அனைவரும் சீட்பெல்ட்கள் அணிந்திருக்க வேண்டும்.
- ஒருபொழுதும் மது அருந்தி விட்டு வாகனம் ஓட்டாதீர்கள். நீங்கள் வாகனம் ஓட்டும் பொழுது, உங்களது இரத்தத்தில் மதுபான அளவானது, சட்ட அளவிற்கு அதிகமாக இருக்கிறது என்று போலீஸ் கண்டறிந்தால், அபராதங்கள் மோசமாக இருக்கும்.
- வாகனம் ஓட்டும் பொழுது ஒரு பொழுதும் செல் போனில் பேசாதீர்கள், அது கைகளைக் கொண்டு இயக்கத் தேவையில்லாதது என்றால் ஒழிய.
- குழந்தைகளும் சிறு குழந்தைகளும் இருக்க வேண்டும் ஒரு சிறப்பு கார் இருக்கையில் கொண்டு செல்லப்படுகிறது.
- கையடக்க தகவல்தொடர்பை ஒருபோதும் பயன்படுத்த வேண்டாம் அல்லது வாகனம் ஓட்டும்போது பொழுதுபோக்கு சாதனங்கள் அது பாதுகாப்பாக ஏற்றப்பட்டாலோ அல்லது கட்டப்பட்டாலோ தவிர உங்கள் வாகனத்தின் டாஷ்போர்டு.
- உண்ணுதல், குடித்தல், சீர்ப்படுத்துதல், புகைபிடித்தல், பொருள்களைப் படிப்பதும் அடைவதும் முடியும் கவனக்குறைவான அல்லது ஆபத்தான வாகன ஓட்டத்திற்கு காரணமாக அமைக்கலாம்.
- கஞ்சாவைப் பயன்படுத்திய பிறகு ஒருபோதும் வாகனம் ஓட்ட வேண்டாம். ஓட்டுநர் ஒரு நீங்கள் கஞ்சாவால் பாதிக்கப்படும்போது வாகனம் சட்டவிரோதமானது மற்றும் ஆபத்தானது. தீவிர உள்ளன அபராதம் மற்றும் உங்கள் உரிமம் இருக்கலாம் இடைநீக்கம். மேலும் அறிய செல்க: canada.ca/cannabis

findlink.at/DrivingInCanada

## காப்பீடு

ஒன்ராறியோவில் தவறு எதுவும்-இல்லாத காப்பீட்டுத் திட்டம் ஒன்று உள்ளது. இதன் பொருள் என்ன என்றால் உங்களுக்கு காப்பீடு அளிப்பவர், உங்களது காருக்கு நேரிடும் சேதம் எதற்கும் பணம் தருவார், அந்த சேதம் உங்களது பிழையால் நேர்ந்தது என்றாலும் சரி அல்லது மற்றொரு ஓட்டுநரின் பிழையாக நேர்ந்தது என்றாலும் சரி.

தவறு எதுவும்-இல்லாத காப்பீட்டுத் திட்டம் பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, Insurance Bureau of Canada, findlink.at/nofault என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

காருக்கான காப்பீட்டுக் கட்டணம் நிறுவனத்திற்கு நிறுவனம் மாறுபடுகிறது. மேற்கோள் ஒன்றைப் பெறுவதற்கு பல நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளுங்கள், அல்லது ஒரு காப்பீட்டு புரோக்கரைத் தொடர்பு கொள்ளுங்கள், அவர் உங்களுக்கு சிறந்த பேரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சி பெறுவார். புரோக்கர்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களின் தொடர்புத் தகவல்களை, yellowpages.ca ல் அல்லது இணையத்தில்

தேடுவதன் மூலம் கண்டுபிடியுங்கள்.

### மிதிவண்டி செலுத்துதல்

மிதிவண்டி செலுத்துவது என்பது உங்களது புதிய சமுதாயத்தில் சுற்றி வருவதற்கு ஒரு சிறப்பான வழியாகும். சில நகரங்களில் மிதிவண்டிகள் செலுத்துவதற்கென்றே ஒதுக்கப்பட்ட சில பாதைகள் உள்ளன. மற்றும் பல இடங்களில் பொழுது போக்காக மிதி வண்டி செலுத்துவதற்கான பாதைகள் உள்ளன. ஒரு மிதிவண்டி ஓட்டுநர் என்ற முறையில், ***ஒன்ராறியோ நெடுஞ்சாலைப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ்***, ஒரு வாகன ஓட்டுநர் என்றே நீங்கள் கருதப்படுகிறீர்கள். இதன் பொருள் என்ன என்றால், நீங்கள் கண்டிப்பாக சாலை விதிகள் அனைத்திற்கும் கீழ்ப்படிந்து ஓட்ட வேண்டும் என்பதாகும்.

18 வயதுக்கு உட்பட்ட, மிதிவண்டி செலுத்தும் ஒவ்வொருவரும் சட்டப்படி, அங்கீகரிக்கப்பட்ட மிதிவண்டி தலைக்கவசம் (helmet) ஒன்றை அணிந்திருக்க வேண்டும் என்பதைத் தயவுசெய்து குறித்துக் கொள்ளுங்கள்.

**விடயங்கள்**

*ஒன்ராறியோ ஓட்டுநர் உரிமம் ஒன்றைப் பெற நான் விரும்பவில்லை எனில் அதற்குப் பதிலாக எந்த வகையான அரசு-வழங்கிய புகைப்பட அடையாளத்தை நான் பயன்படுத்துவேன்?*

*புதிய அல்லது பயன்படுத்திய கார் ஒன்றை வாங்குவதற்கு நான் எவ்வளவு செலவு செய்ய வேண்டியிருக்கும்? காப்பீடு மற்றும் வாகனப் பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்கு எவ்வளவு செலவு பிடிக்கும்?*

# சட்ட உரிமைகள் மற்றும் சேவைகள்

மத்திய அரசு மற்றும் மாகாண அல்லது பிரதேசச் சட்டங்கள் இரண்டுமே, சுதந்திரம் மற்றும் சமத்துவம் போன்ற தனி நபரின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்கின்றன. எமது சட்ட அமைப்பானது சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

### உரிமைகள் மற்றும் சுதந்திரத்திற்கான கனேடிய சாசனம்

ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்குமே ஒரே மாதிரியான உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை ***கனேடியசாசனத்தின் உரிமைகள் மற்றும் சுதந்திரம்*** பாதுகாக்கின்றது

- உங்களது நம்பிக்கைகள் மற்றும் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்.
- உங்களது நம்பிக்கைகள் மற்றும் அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்.
- உங்களது மதத்தைக் கடைப்பிடிப்பதற்கான சுதந்திரம்.
- கனடாவில் எந்த பாகத்திலும் வாழ்வதற்கான உரிமை
- சட்டவிரோதமான அல்லது நியாயமற்ற கைது அல்லது தடுத்து வைக்கப்படுவது ஆகியவற்றில் இருந்து பாதுகாத்திடும் உரிமை, மற்றும் உரிய சட்டச் செயல்முறைக்கான உரிமை. இதன் பொருள் என்ன என்றால், சட்டத்தின் கீழுள்ள உங்களது உரிமைகள் அனைத்தையும் அரசாங்கம் கண்டிப்பாக மதிக்க வேண்டும் என்பதாகும்.
- ஒருவரின் இனம், தேசிய அல்லது வம்சமரபு, நிறம், மதம், பாலினம், வயது அல்லது உளவியல் அல்லது உடல் செயல்திறனிழப்பு போன்ற எதன் அடிப்படையிலும் பாரபட்சம் இல்லாது சட்டத்தின் சமமான பாதுகாப்பு மற்றும் சம பலன் பெறுவதற்கான உரிமை
- ஆங்கிலம் அல்லது ஃபிரெஞ்சு ஏதாவது ஒன்றில் மத்திய அரசிடமிருந்து சேவைகளைப் பெறுவதற்கான உரிமை.

மத்திய அரசின் Department of Justice சாசனம்: justice.gc.ca என்ற அல்லது findlink.at/constiacts என்ற இணையதளத்தில் படிக்கவும்

### ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதி

***ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதியானது*** ஒன்ராறியா வாழும் அனைத்து மக்களையும் வேலை வாய்ப்பு, குடியிருப்பு மற்றும் சேவைகள் போன்ற துறைகளில் நியாயமற்று நடத்தப்படுவதில் இருந்து பாதுகாக்கிறது. இனம், வம்சமரபு, பிறப்பிடம், நிறம், இனஞ்சார்ந்த தோற்றுவாய், பால் நாட்டம், குற்றங்களின் பதிவு, திருமண நிலை, ஒத்த பால் உறவுப் படிநிலை, குடும்பப் படிநிலை அல்லது திறனிழப்பு ஆகியவை காரணமாக பாகுபாடு காண்பித்தல் அல்லது தொல்லை கொடுத்தல் சட்டவிரோதம் ஆகும். Ontario Human Rights Commission பற்றி அறிந்து கொள்வதற்கு ohrc.on.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தருக

### பெரும்பான்மைக்கான வயது மற்றும் சம்மதத்திற்கான வயது

ஒன்ராறியோவில், அகவை அடைவதற்கான வயது 18 ஆகும். ஒருவர் வயது வந்தவர் என்று சட்டரீதியில் கருதப்படுவது அப்பொழுது தான். பாலியல் செயல்பாட்டுக்கு சம்மதம் தருவதற்கான வயது 16 வருடங்கள் ஆகும். சம்மதம் இல்லாமல் நடத்தப்படும் பாலியல் செயல்பாடு அனைத்துமே ஒரு குற்றம் ஆகும். சம்மதம் தருவதற்கான வயது பற்றிய கூடுதல் தகவலுக்கு, justice.gc.ca என்ற அல்லது findlink.at/ageconsent என்ற

இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### ஒரு வழக்கறிஞரைக் கண்டறிதல்

- உங்களது குடியமர்வு ஆலோசகர், உங்களுக்குத் தேவையான அனுபவத்துடன் கூடிய ஒரு வழக்கறிஞரைக் கண்டறிவதற்கு உதவ முடியும்.




- உங்களது உள்ளூர் தொலைபேசிப் புத்தகத்தில் உள்ள மஞ்சள் பக்கங்களைப் பாருங்கள் அல்லது yellowpages.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்
- ஒன்ராறியோவில் உள்ள வழக்கறிஞர்கள் மற்றும் சட்ட உதவியாளர்களின் தொகுப்பைப் பார்க்க, Law Society of Upper Canada lso.ca என்ற என்ற இணையத்தளத்தில் பாருங்கள்
- குறைந்த வருமானம் உள்ள மக்களுக்கு சட்ட சேவைகளை வழங்குகிறது Legal Aid Ontario. 1-800-668-8258 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது legalaid.on.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## குடிவரவு மற்றும் கஞ்சா

*கனடாவில் கஞ்சாவைப் பயன்படுத்துவது சட்டப்பூர்வமானது. பொழுதுபோக்கு கஞ்சாவை வாங்கும் மற்றும் பயன்படுத்தும் போது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய, ஒன்டாரியோ அரசு சில விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. பொழுதுபோக்கு கஞ்சாவை வாங்க, பயன்படுத்த, வைத்திருக்க மற்றும் வளர்க்க நீங்கள் 19 மற்றும் அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும் மற்றும் ஒன்ராறியோ கஞ்சா ஸ்டோர் (OCS) அல்லது ஒன்ராறியோ கேமிங் கமிஷன் ஆஃப் ஒன்ராறியோ (AGCO) உரிமம் பெற்ற கடையில் ஆன்லைனில் வாங்கிய எந்த நேரத்திலும் அதிகபட்சம் 30 கிராம் உலர்ந்த கஞ்சாவை (அல்லது அதற்கு சமமான) பொதுவில் வைத்திருக்க முடியும். புகையிலை புகைக்க அனுமதிக்கப்பட்ட இடங்களில் நீங்கள் புகைபிடிக்கலாம் மற்றும் கஞ்சாவை துடைக்கலாம். கனடாவின் தேசிய எல்லைகள் வழியாக கஞ்சாவைக் கொண்டு செல்வது சட்டவிரோதமானது. உள்நாட்டில் கஞ்சா பயன்பாட்டைக் கட்டுப்படுத்த உங்கள் நகராட்சிகளுக்கு பைலாக்கள் இருக்கலாம். மேலும் அறிய செல்க:*

*சட்டத்திற்கு எதிராக செயல்படும் நபர்கள், கூட்டாட்சி கஞ்சாச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையை எதிர்கொள்ளலாம். இதன் விளைவாக, நிரந்தர வதிவாளர்கள் தங்கள் அந்தஸ்தை இழக்கக்கூடும், மேலும் தற்காலிக வதிவாளர்கள் கனடாவுக்குள் நுழையவோ அல்லது தங்கவோ முடியாமல் போகலாம். அபராதங்கள் பற்றி மேலும் அறியவும்: canada.ca*



**மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம்**

பாரபட்சம் காட்டப்பட்டு இருப்பதாக உணர்கின்ற மக்களுக்கு துணை புரிகிறது மற்றும் பிரதிநிதித்துவம் செய்கிறது: hrlsc.on.ca

**Ombudsman of Ontario**

ஒன்ராறியோவின் முறையீட்டு மன்றத் தீர்ப்பாயம், ஒன்ராறியோ அரசால் நீதியற்ற முறையில் நடத்தப்பட்டு இருப்பதாக உணர்கின்ற மக்களுக்கு உதவுகிறது: ombudsman.on.ca

**Justice Ontario**

ஒன்ராறியோவின் சட்ட அமைப்பு பற்றிய தகவலுக்கு, 12 மொழிகளில்: ontario.ca or findlink.at/on-justice

**Settlement.org**

கனடாவின் சட்ட அமைப்பு மற்றும் சட்ட சேவைகள் பற்றிய தகவலுக்கு: settlement.org or findlink.at/legal-serv

**Community Legal Education Ontario**

மக்கள் தங்களது சட்ட உரிமைகளைப் புரிந்து கொள்வதற்கும் பயிற்சி செய்வதற்கும் உதவுவதற்காக சட்டத்தை எளிய மொழியில் விளக்குகின்ற தகவல் புத்தகங்கள் போன்றவற்றை உருவாக்குகிறது: cleo.on.ca

# குடியமர்வுத் திட்டம்

## ஆரோக்கியப் பராமரிப்பு

- [ ] உங்களது OHIP அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்வதற்கு, ஒரு Service Ontario மையத்திற்கு வருகை தாருங்கள்.
- [ ] கனடாவில் உங்களது முதல் மூன்று மாதங்களுக்கான ஆரோக்கியக் காப்பீட்டை வாங்குங்கள்.
- [ ] ஒரு குடும்ப மருத்துவரைக் கண்டறியுங்கள்.
- [ ] அருகில் உள்ள மருத்துவமனை மற்றும் முன் அறிவிப்பில்லாமல் செல்லக்கூடிய மருத்துவ மையம் எங்கிருக்கிறது என்று கண்டறியுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## நுகர்வோர் சேவைகள்

- [ ] உணவுக்கு எவ்வளவு செலவாகிறது என்று கண்டறிவதற்காக, மளிகைக் கடைகள் மற்றும் சந்தைகளில் ஆராயுங்கள்
- [ ] உங்களை எட்டக்கூடிய வகையில் ஒரு தொலைபேசி இலக்கத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்
- [ ] தேவைப்பட்டால் இணைய வசதியை எங்கு பெறுவது என்று அறிந்துக்கொள்ளுங்கள்.
- [ ] 

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க //தகவல்

ஆதாரங்கள்

## குடியிருப்பு

- ☐ உங்களது நிதி வசதிக்கேற்ற குடியிருப்பைக் கண்டறியுங்கள்
- ☐ குடியிருப்பு தொடர்பான செலவுகள், காப்பீடு, சாதனங்கள் மற்றும் சொத்து வரிகள் உட்பட்டவற்றைத் திட்டமிடுங்கள்
- ☐ நீங்கள் வாடகைக்கு குடியிருக்கிறீர்கள் என்றால், ஒரு குடியிருப்பாளர் என்ற முறையில் உங்களது உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகளை விளங்கிக்கொள்ளுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## சமூகப் பங்கேற்பு

- ☐ உங்களது உள்ளூர் சமூக மையத்தில் இருக்கும் நிகழ்வுகள்/திட்டங்கள் மற்றும் வசதிகள் பற்றி கண்டறியுங்கள்.
- ☐ உங்களது அக்கம்பக்கத்தில் உள்ள பொது நூலகம் இருக்கும் இடத்தைக் கண்டறியுங்கள் மற்றும் ஒரு நூலக அட்டையைப் பெறுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## போக்குவரத்து

- [ ] உங்களது சமூகத்தில் கிடைக்கக்கூடிய பொதுப் போக்குவரத்து விருப்பத் தேர்வுகள் பற்றி அறிந்து கொள்ளுங்கள்
- [ ] ஒன்ராறியோ ஓட்டுநர் உரிமத்துக்கு விண்ணப்பியுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## சட்ட உரிமைகள் மற்றும் சேவைகள்

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

# கல்வி மற்றும் பயிற்சி

இந்தப் பகுதி குழந்தை பராமரிப்பு முதல் முதுகலைப் பட்டப் படிப்பு வரை கல்வி மற்றும் பயிற்சிகளுக்கான வாய்ப்புகள் பற்றிய தகவல்களை அளிக்கிறது. மேலும் இது வயது வந்தோருக்கான கல்வி, தொடர் கல்வி மற்றும் மொழிப் பயிற்சி ஆகியவற்றையும் அறிமுகம் செய்கிறது.




**30**
பிள்ளை பராமரிப்பு

**31**
ஆரம்ப நிலை மற்றும்
இரண்டாம்நிலைக் கல்வி

**33**
இரண்டாம்நிலைக்கு
மேற்பட்ட கல்வி

**34**
தொடர் கல்வி

**35**
மொழிப் பயிற்சி

**36**
குடியமர்வுத் திட்டம்



# பிள்ளைப் பராமரிப்பு

ஒன்ராறியவோவில் பிள்ளை பராமரிப்புக்கு என (daycare என்றும் அழைக்கப்படுகிறது) பல விருப்பத் தரேவுகள் உள்ளன. உங்களது குடும்பத்திற்கு மிகவும் பொருத்தமான ஒரு சவேயைில் உங்களது பிள்ளயைைச் சரே்க்கலாம்.

**விடயங்கள்**

*பிள்ளைப் பராமரிப்பு வழங்குநர் ஒருவரிடம் நேர்காணால் செய்யும் பொழுது நான் கேட்க வேண்டிய கேள்விகள் எவை?*

*எனது பிள்ளைப் பராமரிப்பு வழங்குபவருக்கு இசைந்து கொடுக்கக்கூடிய நேரங்கள் உள்ளனவா?*

*எனது பிள்ளை அங்கு செல்லாத நாட்களுக்கு நான் கட்டணம் செலுத்த வேண்டுமா?*

*எனது பிள்ளையைக் கூட்டிச் செல்ல வருவதற்கு தாமதமாகி விட்டால் என்ன நடக்கும் ?*

## உரிமம் பெற்ற மற்றும் உரிமம் பெறாத பிள்ளைப் பராமரிப்பு

ஒன்ராறியோவில் இரண்டு வகையான பிள்ளைப் பராமரிப்புகள் உள்ளன: உரிமம் பெற்றவை (சில நேரங்களில் முறைசார் என்று அழைக்கப்படுகிறது) மற்றும் உரிமம் பெறாதது (சில நேரங்களில் ***முறைசாரா*** என்று அழைக்கப்படுகிறது).

பத்து வயதுக்குக் குறைவான, ஐந்துக்கு மேற்பட்ட உறவில்லாத பிள்ளைகளைக் கவனித்துக் கொள்ளும் பராமரிப்பாளர்கள், ***பகல் நேர பாலர் பாடசாலைச் சட்டத்தின்*** கீழ், கல்வி அமைச்சகத்திடமிருந்து ஒரு உரிமத்தைக் கண்டிப்பாகப் பெற வேண்டும். உரிமம் பெற்ற பிள்ளைப் பராமரிப்பு திட்டங்கள், குறிப்பிட்ட மாகாணத் தராதரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

உரிமம் பெறாத பிள்ளைப் பராமரிப்பு என்பது, பராமரிப்பு தருபவர் ஒருவருக்கும் பெற்றோர் ஒருவருக்கும் இடையே செய்யப்பட்ட ஒரு தனிப்பட்ட ஏற்பாடு ஆகும். ஐந்து அல்லது அதற்குக் குறைவான, உறவற்ற பிள்ளை களைக் கவனித்துக் கொள்ளும் பராமரிப்பு தருபவர்கள் உரிமம் பெறத் தேவையில்லை.

பிள்ளைப் பராமரிப்பு அளிப்பவர் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான விதிகள் உள்ளன. சிலருக்கு உங்களது பிள்ளை முழு நேரமும் சமூகமளிக்க வேண்டிய தேவை இருக்கலாம். மற்றவர்கள் பகுதி நேர பிள்ளைப்பராமரிப்பு வழங்குபவர்களாகவோ வீட்டிற்கு வந்திருந்து பிள்ளை யைப் பராமரிப்பவர்களாகவோ இருக்கிறார்கள். நீண்ட காத்திருக்கும் பட்டியல்கள் இருக்கக்கூடும், மற்றும் கட்டணங்கள் பரவலாக வேறுபடுகின்றன.

Ministry of Education இருந்து, பிள்ளைப் பராமரிப்புக்கான உங்களது விருப்பத் தேர்வுகள் பற்றி கூடுதலாக அறிந்து கொள்ளுங்கள்: ontario.ca அல்லது findlink.at/childcare

## பிள்ளைப் பராமரிப்புக்கான மானியங்கள்

பிள்ளைப் பராமரிப்புக் கட்டணங்களைச் செலுத்த முடியாத குடும்பங்களுக்கு உதவும் வகையில் சில மானியங்கள் கிடைக்கின்றன. இதற்கு நீங்கள் தகுதியானவரா என்று கண்டறிவதற்கும் மற்றும் எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதற்கும் உங்களது Ministry of Education இணையத்தளத்திற்கு ontario.ca அல்லது findlink.at/payingchc என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## மழலைகளுக்கான ஒன்ராறியோ மையங்கள்

அரசின் நிதி உதவி பெற்ற Ontario early years Centre-களில், ஆறு வயது வரையான குழந்தைகள் விளையாடவும் கற்றுக் கொள்ளவும் முடியும். ஒரு பெற்றோர் அல்லது காப்பாளர் அந்த குழந்தையுடன் கலந்து கொள்ள வேண்டும். இந்த மையங்கள் பெற்றோர்களுக்கும் பல சேவைகளை அளிக்கின்றன. இதில் கலந்து கொள்வதற்கு கட்டணம் எதுவும் கிடையாது.

உங்களுக்கு அருகில் இருக்கும் Ontario early years Centre ஒன்றைக் கண்டறிவதற்கு, Service Ontario 1-800-268-1153 என்ற இலக்கத்தில் அழைத்திடுங்கள் அல்லது ontario.ca என்ற அல்லது findlink.at/earlyyearc என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்



# ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலைக் கல்வி

அரசாங்கப் பாடசாலையில் உங்களது பிள்ளை இலவசமாகச் சேர்ந்து கொள்ளலாம். அரசாங்கப் பாடசாலைகள் ஆரம்பநிலை (இளைய பாலர் வகுப்பு முதல் தரம் 8 வரை) மற்றும் இரண்டாம்நிலைப் பாடசாலைகள் (தரம் 9 முதல் 12 வரை) எனப் பிரிக்கப்பட்டுள்ளன. உங்கள் குழந்தை ஒரு தனியார் பாடசாலையிலும் சேரலாம், அங்கு நீங்கள் கல்விக் கட்டணம் செலுத்துவீர்கள். Ontario Secondary School Diploma -வுக்கான கிரெடிட் அளிப்பவர்கள், Ontario Ministry of Education-ஆல் ஆய்வு செய்யப்படுகின்றனர்.

### ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலைப் பாடசாலைகள்

பெரும்பாலான குழந்தைகள் நான்கு அல்லது ஐந்து வயதாகும் பொழுது பாலர் வகுப்பு ஒன்றில் பள்ளியை ஆரம்பிக்கின்றனர். ஒன்ராறியோ சட்டத்தின் கீழ், ஆறு முதல் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் கட்டாயமாக பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

இரண்டாம்நிலைப் பாடசாலைகள், இரண்டாம்நிலைக்கு மேற்பட்ட கல்விக்கு (கல்லூரி, பல்கலைக் கழகம் மற்றும் தொழிற்பயிற்சிப் பருவங்கள்) மாணவர்களைத் தயார் செய்கின்றன அல்லது மாணவர்கள் பட்டம் பெற்ற உடனே வேலைக்குத் தயார் ஆகும் வகையில் தொழிற்பயிற்சி போன்ற திட்டங்களையும் அளிக்கின்றனர்.

குழந்தைகள் உள்ளூர் பாடசாலைச் கள் அல்லது பாடசாலைச் சபைகளில் கண்டிப்பாகப் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், குழந்தைகள், தாங்கள் வசிக்கும் இடத்தின் அடிப்படையிலேயே பாடசாலை களில் சேர்கின்றனர்.

### பாடசாலைச் சபைகள்

ஒன்ராறியோவில் இருக்கும் ஒவ்வொரு சமூகமும் ஒன்று அல்லது மேற்பட்ட பொது நிதி உதவி பெறும் பாடசாலைச் சபைகள் அல்லது பாடசாலை ஆணையங்கள் மூலம் சேவை பெறுகின்றன. மாகாணம் முழுவதுமாக ஆங்கில மொழி மற்றும் பிரெஞ்சு மொழி பள்ளி சபைகள் காணப்படுகின்றன. பெரும்பாலான பிரதேசங்களில் பொது நிதி உதவியைப் பெறும் ஒரு கத்தோலிக்க பாடசாலைச் சபையும் உள்ளது.

உங்களது பகுதியில் உள்ள, பாடசாலை களை நிர்வகிக்கும் பாடசாலைச் சபைகள் அல்லது ஆணையங்களை நீங்கள் அறிந்திருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களது குழந்தையின் பாடசாலையிலும் மற்றும் உங்களது சமூகத்திலும் உங்களை ஈடுபடச் செய்வதற்கான பல வழிகளையும் இவை அளிக்கின்றன.

### மாணவர்களைச் சேர்த்தல்

உங்களது குழந்தைகளை பாடசாலையில் முதல் முறையாகச் சேர்ப்பதற்கு, நீங்கள் உங்களது உள்ளூர் பாடசாலைச் சபையைத் தொடர்பு கொள்ள வேண்டும். எந்த வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கண்டறிவதற்காக உங்களது பிள்ளையை மதிப்பிடுவார்கள், மற்றும் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு போன்ற கூடுதல் ஆதரவு தேவையா என்றும் மதிப்பிடுவார்கள்.

findlink.at/EducationInCanada



**Ministry of Education**

ஒன்ராறியோவின் அரசாங்கப் பாடசாலைகள் பற்றிய உங்களது ஆராய்ச்சியை, Ministry of Education இணையத்தளத்தில் தொடங்குங்கள்: ontario.ca

**Settlement.org**

ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை பள்ளிக்கல்விக்கான வழிகாட்டிகளை: settlement.org or findlink.at/educinfo ஆரம்பநிலை மற்றும் இரண்டாம்நிலை பள்ளிக்கல்விக்கான வழிகாட்டிகளை

**சபைகள்**

ஒன்ராறியோவில் உள்ள அனைத்து பாடசாலைச் சபைகள் மற்றும் ஆணையங்களின் ஒரு பட்டியலுக்கு, ontario.ca என்ற அல்லது findlink.at/boardlist என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

**பிரெஞ்சு மொழிக் கல்வி**

பிரெஞ்சு மொழிக் கல்வியானது, 12 பாடசாலைச் சபைகளால், பிரெஞ்சு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள பெற்றோர்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிறது. அது பற்றி கூடுதலாக ontario.ca அல்லது findlink.at/fsl என்ற இணையத்தளத்தில் அறிந்து கொள்ளுங்கள்



விடயங்கள்

*அடுத்த பள்ளி ஆண்டுக்காக எனது குழந்தையை எந்த தேதியில் நான் பதிவு செய்து கொள்ள வேண்டும்?*

*எனது குழந்தைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனரா மற்றும் ஒரு வகுப்பில் வைக்கப்பட்டு இருக்கின்றனரா ?*

*என் குழந்தை பள்ளிக்கு எவ்வாறு செல்வான்? பேருந்துச் சேவை உள்ளதா?*

*எனது குழந்தைக்கு சிறப்புத் தேவைகள் இருந்தால், உள்ளூர் பள்ளிகள் மற்றும் பாடசாலைச் சபைகள் எந்த வகையான ஆதரவை அளிக்கின்றன?*

*எனது பாடசாலைச் சபை பிரெஞ்சு மொழி மூலமான கல்வி அளிக்கிறதா? அதற்கு நான் எவ்வாறு விண்ணப்பிப்பது?*

## மொழிக் கல்வி

ஆங்கிலம்-சில மாணவர்கள், அவர்கள் ஆரம்பநிலை அல்லது இரண்டாம்நிலைப் பள்ளியில் சேரும் பொழுது முதல் முறையாக ஆங்கிலம் கற்றுக் கொள்ளத் தொடங்குவார்கள். முதல் மொழி ஆங்கிலம் இல்லாத மாணவர்களுக்கு மொழி ஆதரவுகள் கிடைக்கின்றன.

பிரெஞ்சு-பிரெஞ்சு மொழியை ஒரு இரண்டாம் மொழியாகக் (FSL)கொண்ட திட்டங்கள் ஆங்கில மொழி பாடசாலைச் சபைகளிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. அந்த திட்டங்களில் பின்வருபவை அடங்குகின்றன:

- அடிப்படை பிரெஞ்சு- மாணவர்கள் பிரெஞ்சினை ஒரு பாடமாகப் படிப்பவர்கள்
- விரிவுபடுத்தப்பட்ட பிரெஞ்சு- மாணவர்கள் பிரெஞ்சினை ஒரு பாடமாகப் படிப்பார்கள் மற்றும் குறைந்தது ஒரு பிற பாடம் பிரெஞ்சு மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுகிறது. பொதுவாக விரிவுபடுத்தப்பட்ட பிரெஞ்சு திட்டங்கள் தரம் ஏழில் தொடங்குகின்றன.
- பிரெஞ்சு மொழி மூலம்-மாணவர்கள் பிரெஞ்சினை ஒரு பாடமாகப் படிக்கிறார்கள் அத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் பிரெஞ்சு மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுகிறது. பொதுவாக பிரெஞ்சு மொழி மூலம் திட்டங்கள் பாலர் வகுப்பில் தொடங்குகிறது.

FSL பற்றி Ministry of Education ontario.ca என்ற அல்லது findlink.at/onfsl என்ற இணையத்தளத்தில் அறிந்து கொள்ளுங்கள்

அரசாங்கப் பாடசாலைகளில் பிரெஞ்சு மொழி மூலம் மற்றும் விரிவுபடுத்தப்பட்ட பிரெஞ்சு திட்டங்கள் வழங்கப்படுவதில்லை. உங்களது பகுதியில் எந்த பள்ளிகளில் இந்த் திட்டங்கள் இருக்கின்றன என்ற கண்டறிவதற்கு, உங்களது உள்ளூர் பாடசாலைச் சபையை அல்லது ஆணையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**பாரம்பரிய மொழித் திட்டங்கள்**
இந்த திட்டங்கள் பல்வேறு வயதுள்ள குழந்தைகளுக்கு, ஒரு பரந்த வகையிலான மொழிகளில் கல்வி மற்றும் செயல்பாடுகளை வழங்குகின்றன. அவை பொதுவாக வழக்கமான பள்ளி நேரங்களுக்கு வெளியே நடைபெறுகின்றன. உங்களது உள்ளூர் பள்ளி, பாடசாலைச் சபை அல்லது பள்ளி ஆணையத்திடம் கேட்டு உங்களது பகுதியில் எந்த விருப்பத் தேர்வுகள் கிடைக்கின்றன என்று பாருங்கள்.

## முழு நேர பாலர் பள்ளி

பல ஒன்றாறியோ பள்ளிகள் தற்பொழுது, நான்கு மற்றும் ஐந்து வயதுள்ள குழந்தைகளுக்கு, முழு நேரப் பாலர் பள்ளியை நடத்துகின்றன. செப்டம்பர் 2014ம் வாக்கில், அனைத்து அரசாங்கப் பள்ளிகளும் அதையே அளித்திடும்.

பெற்றோரிடம் இருந்து போதிய ஆர்வம் இருக்கும் பொழுது, பள்ளிகள், பள்ளிக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிகழ்வுகளை காலையில் சுமார் 7:00 முதல் 9:00 வரையும் மற்றும் பிற்பகல் 3:30 முதல் 6:00 வரை அளிக்கின்றன. இந்த நிகழ்வுகள் பொதுவாக முழு நேரப் பாலர் பள்ளிக் குழந்தைகளுக்கு நடத்தப்படுவதாகும் மற்றும் அவை ஒரு நியாயமான கட்டணத்தில் அளிக்கப்படுகின்றன.

முழு நாள் பாலர் பள்ளி பற்றியும், பள்ளிக்கு முந்தைய மற்றும் பிந்தைய  நிகழ்வுகளைப் பற்றியும் Ministry of Education ontario.ca என்ற அல்லது findlink.at/full-dayk என்ற இணையத்தளத்தில் கண்டறிந்திடுங்கள்

## சிறப்புத் தேவைகள்

நடத்தை தொடர்பான, தொடர்பாடல் தொடர்பான, அறிவாற்றல் தொடர்பான மற்றும் /அல்லது உடல் ரீதியான தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு, அவர்களது பள்ளி அனுபவங்களில் இருந்து முழுமையான பயன் கிடைப்பதற்கு உதவும் வகையில் புரோக்ராம்கள் மற்றும் ஆதரவுகள் கிடைக்கின்றன

இந்த புரோக்ராம்கள் பற்றி Ministry of Education ontario.ca என்ற அல்லது findlink.at/speceduc என்ற இணையத்தளத்திற்கு வருகை தந்து அறிந்து கொள்ளுங்கள்

# இரண்டாம்நிலைக்கு மேற்பட்ட கல்வி

ஒன்ராறியோவில் உள்ள மாணவர்கள் தங்களது இரண்டாம்நிலைக்கு மேற்பட்ட கல்வியை அல்லது தொழிற்பயிற்சியை கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களில் தொடர்கின்றனர். வெளிநாடுகளில் பயின்ற, ஏற்கனவே இரண்டாம்நிலைக்கு மேற்பட்ட ஆவணங்கள் கொண்டவர்களுக்கு பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் பல வகையான முதுகலைப் பட்டப்படிப்பு சான்றிதழ்களை அளிக்கின்றன.

### கல்லூரிகள்

ஒன்ராறியோ கல்லூரிகள் தொழிலை இலக்காகக் கொண்ட பாடத்திட்டங்களைஅளிக்கின்றன, அவை தொழில் நுட்பம், ஆரோக்கியம், வர்த்தகம், விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா போன்ற துறைகள் உட்பட பல வகையான தொழிற்களங்களில் வேலை பெறும் வகையில் மாணவர்களைத் தயார் செய்கின்றன. கல்லூரிகள் சான்றிதழ் மற்றும் பட்டயம் பெறும் பாடத்திட்டங்களையும் தொழிற் பயிற்சிப் பழகுநர் திட்டங்களையும் (மற்றும் நடைமுறைப் பயன்பாட்டுக்கு ஏற்ற படிப்புகளில் சில பட்டப்படிப்பு புரோக்ராம்கள்) வழங்குகின்றன.

பொதுவாக ஒரு கல்லூரியின் சான்றிதழ் படிப்புக்கு ஒரு வருடப் படிப்பு அல்லது அதற்கு குறைந்த காலம் தேவைப்படுகிறது. ஒரு கல்லூரியின் பட்டப் படிப்புக்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள், முழு நேரப் படிப்பு தேவைப்படுகிறது.

### பல்கலைக் கழகங்கள்

பல்கலைக் கழகங்களில் உள்ள மாணவர்கள் இளநிலைப் பட்டத் திட்டங்களில் (bachelor's degree) மற்றும் உயர்நிலைப் பட்டத்திட்டங்களில் (master's and Ph.D. degrees) பயில்கின்றனர். கலைகள், அறிவியல் ஆகிய பாடத்திட்டங்களையும் கல்வி, மருத்துவம், சட்டம் மற்றும் பொறியியல் போன்ற குறிப்பிட்ட தொழிற் கல்விகளையும் அளிக்கின்றன.

பொதுவாக, பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் விண்ணப்பதாரர்கள் இரண்டாம்நிலைப் பள்ளிச் சான்றிதழை அல்லது அதற்குச் சமமானதை வைத்திருக்க வேண்டும் என்று கேட்கிறது. இருப்பினும், நீங்கள் இரண்டாம்நிலைப் பள்ளியில் இருந்து பட்டம் பெற்றிருக்கா விட்டால், நீங்கள் 19 அல்லது அதற்கு அதிக வயதுள்ளவராகவும் ஒரு கனேடிய பிரஜையாகவும் அல்லது குடியேறிய குடிவரவாளராகவும் இருந்தால்ஒரு முதிர்ந்த மாணாக்கராக நீங்கள் விண்ணப்பிக்க இயலும்.

பல்கலைக் கழகம் மற்றும் கல்லூரி நாட்காட்டிகள், தங்களது பாடத்திட்டங்கள் மற்றும் அனுமதித் தேவைப்பாடுகள் பற்றிய தகவல்களை அளிக்கின்றன. நீங்கள் கனடாவுக்கு வெளியே கற்றிருந்தால், உங்களது கல்விசார் ஆவணங்கள் மதிப்பீடு செய்ய வேண்டியிருக்கும். ஒவ்வொரு பள்ளிக்கும் அதற்கே உரிய மதிப்பீட்டுத் தராதரங்களும் செயல்முறைகளும் உள்ளன. நீங்கள் வெளிநாட்டில் படிப்பை முடித்திருந்தால், முன்னேறிய தரநிலை, பாட விலக்களிப்புகள் அல்லது உங்களது முந்தைய கல்விக்கான பிற கிரெடிட்டுகள் போன்றவற்றை நீங்கள் பெறுவதற்கு தகுதியானவராக நீங்கள் இருக்கலாம். உங்களது கல்வி ஆவணங்களின் அங்கீகாரம் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, பள்ளியின் அனுமதிகள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள்.


### நிதி உதவி

இரண்டாம்நிலைக்கு மேற்பட்ட கல்வித் திட்டங்களுக்கான கல்விக் கட்டணங்கள், நீங்கள் தேர்வு செய்யும் திட்டத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. இரண்டாம்நிலைக்கு மேற்பட்ட கல்விக்கான நிதி உதவிக்கான முக்கிய ஆதாரம் என்பது ஒன்ராறியோ மாணவர் உதவித் திட்டம் (OSAP) ஆகும். கனடா மாணவர் கடன் திட்டம் வாயிலாக மத்திய அரசும் சிறிது நிதி அளிக்கிறது.

ஒவ்வொரு கல்லூரி மற்றும் பல்கலைக் கழகமும் அதற்குச் சொந்தமான புலமைப் பரிசுத் தொகைகள் மற்றும் ஊக்கத் தொகைகளைக் கொண்டுள்ளது. இவை பற்றிய கூடுதல் தகவல்களை அறிந்து கொள்வதற்கு, அந்த பள்ளியின் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது அதன் நிதி உதவி அலுவலகத்தை தொலைபேசியில் அழைத்திடுங்கள்.

### தொழிற் பயிற்சி

தொழிற்பயிற்சிப் பழகுநர் என்பவர், கூடுதல் அனுபவம் உள்ள பணியாளர்களின் மேற்பார்வையின் கீழ் ஒரு திறன்சார் தொழிலை பணியிடத்தில் கற்கும் ஒருவர் ஆவார். தொழிற்பயிற்சிப் பழகுநர்கள் தங்களது பயிற்சியின் ஒரு பகுதியாக, வகுப்பறைக் கற்றலை நிறைவு செய்கின்றனர். ஒரு தொழிற்பயிற்சிப் பழகுநர் என்ற முறையில், நீங்கள் ஒரு ஊழியராவீர்கள் மற்றும் உங்களது தொழிலைக் கற்கும் பொழுது சம்பளத்தைப் பெறுவீர்கள். 150க்கு மேற்பட்ட திறன்சார் தொழில்களை, தொழிற்பயிற்சிப் பழகுநர் பயிற்சி மூலம் கற்றுக் கொள்ள முடியும். இந்த பக்கத்தின் பக்கவாட்டில் அதன் ஆதாரங்களைப் பாருங்கள்.



**மற்றும்**
**பல்கலைக் கழகங்கள்**

ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களை ontario.ca என்ற அல்லது findlink.at/findschool என்ற இணையத்தளத்தில் கண்டறிந்திடுங்கள்

**பிரெஞ்சு மொழிக் கல்லூரிகள்**

**கழகங்கள்**

ஒன்ராறியோவின் பிரெஞ்சுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களை ontario.ca அல்லது findlink.at/frenschool என்ற இணையத்தளத்தில் கண்டறிந்திடுங்கள்

**உதவி**

osap.gov.on.ca என்ற இணையத்தளத்திற்குச் சென்று OSAP க்கு நீங்கள் தகுதியானவரா என்று கண்டறிந்திடுங்கள். கனடா மாணவர் கடன்கள் திட்டம் பற்றி canlearn.ca என்ற இணையத்தளத்தில் அறிந்திடுங்கள்.

**தொழிற்பயிற்சித் திட்டங்கள்**

Ministry of Training, Colleges and Universities ontario.ca என்ற இணையத்தளம் அல்லது findlink.at/trades என்ற இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்

# தொடர் கல்வி

## கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் பாடசாலைச் சபை ஆகியவை பல வகையான தொடர் கல்வித் திட்டங்களை அளிக்கின்றன, பெரும்பாலும் அவை மாலை வேளைகளிலும் வார இறுதியிலும் நடைபெறுகின்றன.

### தொடர் கல்வி

பெரும்பாலும் மக்கள் பட்டங்கள் அல்லது பட்டயங்களைப் பெற்ற பிறகு, தோட்டவேலை அல்லது புகைப்படக் கலை- போன்ற தங்களது தனிப்பட்ட ஆர்வங்களை மேன்மைப் படுத்துவதற்காக அல்லது தங்களது பணி-தொடர்பான இலக்குகளை எட்டுவதற்கு உதவுவதற்காக தொடர் கல்விப் பாடத்திட்டங்களை எடுத்துக் கொள்கின்றனர்-. இவை ஒரு சிறந்த கற்கும் அனுபவமாக இருப்பதுடன், உங்களது சமுதாயத்தில் உள்ள மக்களை அறிந்து கொள்ளவும் உங்களுக்கு உதவிடும்.

தொடர் கல்விப் பாடத்திட்டங்கள் பற்றிய தகவலுக்கு, கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் பாடசாலைச் சபை ஆகியவற்றின் இணையத்தளங்களுக்குச் செல்லுங்கள்.

- உங்களது உள்ளூர் பாடசாலைச் சபையைத் தெரிந்து கொள்வதற்கு, உங்களது தொலைபேசிப் புத்தகத்தின் நீல நிறப் பக்கங்களில் பாருங்கள் அல்லது ontario.ca என்ற அல்லது findlink.at/schoolinfo என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்
- ஒன்ராறியோ கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களை, Ministry of Training, Colleges and Universities (MTCU) பாருங்கள்: ontario.ca அல்லது findlink.at/findschool
- மேலும் தொடர் கல்விப் பாடத்திட்டங்கள் தங்களது வாசிப்பு, எழுதுவது மற்றும் கணிதத் திறன்களை மேம்படுத்திக் கொள்ள விரும்புகின்ற, வயது வந்தவர்களுக்கும் கிடைக்கின்றன. இந்த திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ள MTCU யின் இணையத்தளமான ontario.ca அல்லது findlink.at/adultlearn என்ற இணையத்தளம் செல்லுங்கள்

### வயதுவந்தவர் என்ற முறையில் ஒரு உயர் பள்ளிப் பட்டயத்தைப் பெறுதல்

நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருந்து, ஒரு உயர் பள்ளிப் பட்டயத்தைப் பெற விரும்பினால், பல இலவசத் திட்டங்கள் கிடைக்கின்றன.

- கூடுதல் தகவலுக்கு, Ministry of Education ontario.ca என்ற அல்லது findlink.at/ossd என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்
- சுயேச்சையாகக் கற்றுக் கொள்ளும் மையமானது, பல உயர் பள்ளி கிரடிட் பாடத்திட்டங்களை அளிக்கின்றன, அவற்றை நீங்கள் இணையத்தில் நிறைவு செய்ய முடியும். ilc.org என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்



# மொழிப் பயிற்சி

ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியைக் கற்பது என்பது, கனடாவில் குடியமர்வின் ஒரு முக்கியமான பாகமாகும். கனடாவின் அதிகாரப்பூர்வமான மொழிகளில் ஒன்று அல்லது இரண்டிலுமே நீங்கள் நிபுணத்துவத்துடன் இருந்தால், அது இங்குள்ள வாழ்க்கையின் பல பகுதிகளிலும் பயனளிக்கும்.

## மொழி வகுப்புகள்

ஆங்கிலம் மற்றும் பிரெஞ்சு வகுப்புகளை இலவசமாக அளிக்கும் வகையில், மத்திய அரசு மற்றும் மாகாண அரசுகள் ஆகியவை பாடசாலைச் சபை, கல்லூரிகள் மற்றும் சமுதாய முகவரமைப்புகள் ஆகியவற்றுக்கு நிதி அளிக்கின்றன.


கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் தனியார் மொழிப் பள்ளிகள் ஆகியவையும் கட்டணத்துக்கு, மொழி வகுப்புகளை நடத்துகின்றன.

பின்வருபவை உட்பட, ஒன்ராறியோவில் பல வித்தியாசமான வகைகளில் ஆங்கில மற்றும் பிரெஞ்சு மொழி வகுப்புகள் கிடைக்கின்றன:

- English Literacy Development (ELD)
- English and French as a Second Language(ESL and FSL)
- Language Instruction for Newcomers to Canada (LINC)
- Cours de langue pour les immigrants au Canada (CLIC)
- Occupation-specific Language Training(OSLT)
- Enhanced Language Training (ELT)
- Specialized Language Training (SLT)

## மொழி மதிப்பீடு

மொழிப் பயிற்சித் திட்டம் ஒன்றில் நீங்கள் சேர்வதற்கு முன்பாக, உங்களது மொழித் திறன்களை மதிப்பிடப்பட வேண்டியிருக்கலாம். உங்களது பகுதியில் உள்ள ஒரு மதிப்பீட்டு மையத்திற்கு உங்களை வழிகாட்டும்படி உங்களது குடியமர்வு ஆலோசகரைக் கேளுங்கள் அல்லது



### மொழி மதிப்பீடு

உங்களது மொழி மதிப்பீடு பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு, findlink.at/clb-assess என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### மொழி வகுப்புகள்

கிடைக்கக்கூடிய பல வகையான மொழி வகுப்புகளின் விவரங்களைப் பார்ப்பதற்கு, findlink.at/eslprogram என்ற இணையத்தளத்திற்கு செல்லுங்கள்

### மொழி வகுப்புகளைக் கண்டுபிடியுங்கள்

உங்களது பகுதியில் உள்ள ஒரு மொழி வகுப்பைக் கண்டறிவதற்கு Ontario Immigration, ontario.ca என்ற அல்லது findlink.at/onlinetool என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள் என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள் கனடாவுக்கு புதிதாக வருபவர்களுக்கான மொழிக் கல்வி பற்றி அறிவதற்கு, 211 என்ற எண்ணை அழைத்திடுங்கள் அல்லது 211ontario.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### வீட்டில் இருந்து படிப்பது (ஹோம் ஸ்டடி)

வீட்டில் இருந்து நீங்கள் செய்யக்கூடிய LINC பயிற்சி பற்றி அறிந்து கொள்வதற்கு findlink.at/homestudy

### தொழில் குறிப்பான மொழிப் பயிற்சி (OSLT)

குறிப்பான தொழில்களுக்கான தகவல் தொடர்பு திறன்களை, ஒன்ராறியோ கல்லூரிகளில் (OSLT) இலவச வகுப்புகளை அளிக்கின்றன. இது பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு co-oslt.org வருகை தாருங்கள்

# குடியமர்வுத் திட்டம்

## குடியமர்வுத் திட்டம்

☐ குழந்தைப் பராமரிப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## ஆரம்ப நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி

☐ எந்த பள்ளியில் (பள்ளிகளில்) உங்கள் குழந்தைகள் சேர்வார்கள் என்று அறிந்திடுங்கள்.

☐ பள்ளியில் உங்களது குழந்தைகளைப் பதிவு செய்வதற்கான கடைசி தேதியைத் தெரிந்து கொள்ளுங்கள்.

☐ பள்ளிக்கும் பள்ளியில் இருந்து வீட்டுக்கும் செல்வதற்கான உரிய போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

☐ பள்ளியில் உங்களது குழந்தைகளைப் பதிவு செய்வதற்குத் தேவையான ஆவணங்கள் அனைத்தையும் பெற்றிடுங்கள்.
- ☐ வயதுச் சான்று
- ☐ முகவரிச் சான்று
- ☐ காப்பாளர் சான்று
- ☐ தடுப்பு ஊசிகள் பதிவு

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்வி

- [ ] உங்களுக்கு அல்லது உங்களது குழந்தைகளுக்கான கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்துக்கான விண்ணப்ப கடைசி தேதிகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- [ ] பொதுவான அனுமதித் தேவைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்.
- [ ] கிடைக்கக்கூடிய நிதி ஆதரவுகளுக்கு விண்ணப்பியுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## தொடர் கல்வி

- [ ] உங்களது ஆர்வங்கள் அல்லது தொழில் தொடர்பான தொடர் கல்வித் திட்டங்களை அளிக்கும் கல்லூரி, பல்கலைக்கழகம் அல்லது பாடசாலைச் சபை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

## மொழிப் பயிற்சி

- [ ] உங்களது கல்வித் திறன்களை மதிப்பீடு செய்து கொள்ளுங்கள்.
- [ ] உங்களது தேவைகளுக்கு சிறந்த முறையில் உகந்த மொழித் திட்டத்தை அடையாளம் கண்டறியுங்கள்.
- [ ] உங்களது தொழில் குறிப்பான மொழிப் பயிற்சி பற்றி அறிவதற்கு ஆலோசகருடன் பேசுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

# பணி புரிதல் மற்றும் வணிகம்

ஒன்ராறியோவின் உழைப்புச் சந்தையைப் புரிந்து கொள்வதற்கும் அதை அணுகுவதற்கும் உதவக்கூடிய தகவல்களை இந்தப் பகுதி அளிக்கிறது. ஒன்ராறியோவில் பணி புரிவதற்குத் தயார் ஆவது பற்றியும், உங்களது பன்னாட்டுப் பயிற்சி மற்றும் வேலை அனுபவத்திற்கும் அங்கீகாரம் பெறுவது பற்றியும், திறம்பட ஒரு வேலை தேடிக் கொள்வது பற்றியும் மற்றும் உங்களுக்குச் சொந்தமாக வணிகம் தொடங்குவது பற்றியும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.




40 பணிக்குத் தயார் ஆவது

42 வேலை தேடுவது

44 பணியிட உரிமைகள்

46 உங்களது சொந்த வணிகம் தொடங்குவது

47 குடியமர்வுத் திட்டம்



# பணிக்குச் செல்ல தயாராவது

## சமூகக் காப்பீட்டு எண் (SIN)

கனடாவில் நீங்கள் பணி செய்வதற்கு முன்பாக, உங்களுக்கு கண்டிப்பாக ஒரு சமூகக் காப்பீட்டு இலக்கம் இருக்க வேண்டும். (பெரும்பாலும் ஒரு SIN என்று அழைக்கப்படுகிறது). ஒரு வேலை கிடைக்கும் பொழுது, பணியமர்த்தும் செயல்முறையை நிறைவு செய்வதற்கு, உங்களது பணியமர்த்துபவர் உங்களிடம் உங்களது SIN ஐ கேட்பார். உங்களது வரிப் படிவங்களை பூர்த்தி செய்வதற்கும், குறிப்பிட்ட அரசுச் சேவைகளுக்காக விண்ணப்பிப்பதற்கும் நீங்கள் இந்த இலக்கத்தை உபயோகிப்பீர்கள். உங்களது SIN ஐ ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும்.

## ஒன்ராறியோவில் வேலைகள்

ஒன்ராறியோவில் பல வேறுபட்ட பணிகள், தொழிற் பணிகள் மற்றும் வர்த்தகங்கள் உள்ளன. அவற்றில் சில ஒழுங்குபடுத்தப்பட்டவை மற்றவை ஒழுங்குபடுத்தப்படாதவை அல்லது சுயமாக-ஒழுங்குபடுத்தப்பட்டவை ஆகும்.

## வெளிநாட்டுக் கல்வி ஆவணங்கள் மதிப்பீடு

நீங்கள் வெளிநாட்டில் பெற்ற கல்வி ஆவணங்களை மதிப்பீடு செய்யத் தேவையிருக்கிறதா என்பதை முதலில் கண்டறிவது முக்கியமாகும். சில சுயமாக-ஒழுங்குபடுத்தப்பட்ட அல்லது ஒழுங்குபடுத்தப்படாத வேலைகளுக்கு இது தேவையில்லை, மற்றும் இது அந்த பணியமர்த்துபவரின் தீர்மானத்தின்படி இருக்கும்.

உங்களது வேலைக்கு குறிப்பான கல்வித் தேவைகள் இருக்கின்றன என்ற காரணத்தால், ஒரு மதிப்பீடு உங்களுக்குத் தேவைப்படுகிறது என்றால், உங்களது கல்விசார் ஆவணங்கள் அதற்குச் சமமான கனடாவின் கல்வியுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்பட வேண்டும். ஒன்ராறியோவில் நீங்கள் விரும்பும் அந்த வேலைக்கு, உங்களுக்குக் கூடுதலாக பயிற்சி அல்லது கல்வி தேவைப்படுகிறதா என்று இது அறியப்படுத்தும். இந்த பக்கத்தின் பக்கவாட்டில் உள்ள ஆதாரங்களைப் பாருங்கள்.

## ஒழுங்குபடுத்தப்படாத அல்லது சுயமாக ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைகள்

ஒன்ராறியோவில் பணி புரிவதற்கு, பெரும்பாலான தொழில்கள் மற்றும் வர்த்தகங்களுக்கு ஒரு சிறப்பு உரிமம் அல்லது சான்றிதழ் தேவையில்லை. இவை ***ஒழுங்குபடுத்தப்படாத வேலைகள்*** என்று அழைக்கப்படுகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத வேலைகளில் நிதி மேலாளர்கள், பொருளாதார நிபுணர்கள், கணினி நிரல்களை உருவாக்குபவர்கள்,

கணக்காளர்கள், System Analyst, பொது தச்சர்கள், சமையல்காரர்கள் மற்றும் இன்னும் பலபேர் அடங்குவார்கள்

ஒன்ராறியோவில் வேலை பார்ப்பதற்கு சான்றளிப்பு தேவைப்படாத சில வேலைகள் இருக்கின்றன. இவை ***சுயமாக-ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைகள்*** என்று அழைக்கப்படுகின்றன. இதற்கு ஒரு உதாரணம் மனித ஆதார வள ஆலோசகர் ஆவார்.

**உங்களது சமூகக்காப்புறுதி விண்ணப்பித்தல்**

உங்களது (SIN) க் காக எவ்வாறு விண்ணப்பிப்பது என்று கண்டறியுங்கள், Service Canada servicecanada.gc.ca என்னும் அல்லது findlink.at/sin என்னும் இணையத்தளத்தில் சென்று பாருங்கள்

**மதிப்பீடு**

Canadian Information Centre for International Credentials, cicic.ca அல்லது என்ற இணையதளத்திற்குச் சென்று பாருங்கள்.

**ஒன்ராறியோவின் உலகளாவிய அனுபவம்**

ஒன்ராறியோவில் உள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில்கள் பற்றி கண்டறிவதற்கு 1-866-670-4094 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள், அல்லது findlink.at/globalexpe என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

**படை**

நீங்கள் பன்னாட்டு அளவில் கல்வி பயின்ற ஆரோக்கிய நிபுணர் ஒருவர் என்றால், 1-800-596-4046 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது healthforceontario.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

**இணைப்புத் திட்டங்கள்**

இணைப்புத் திட்டங்கள் பற்றிய தகவலுக்கு, உங்களது குடியமர்வு ஆலோசகருடன் பேசுங்கள் அல்லது findlink.at/training என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.


## ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைகள்

ஒன்ராறியோவில் உள்ள பல தொழில்முறை வேலைகள் மற்றும் வர்த்தகங்களுக்கு, சமூகப்பணி, செவிலியர் பணி, மின் பொருள் வர்த்தகங்கள் மற்றும் பிளம்பிங் ஆகியவை உட்பட்டவற்றுக்கு நீங்கள் பதிவு செய்து கொள்ளத் தேவையிருக்கிறது, அல்லது ஒரு ஒழுங்குபடுத்தும் அமைப்பினால் உரிமம் தரத் தேவையிருக்கிறது. இவை ஒழுங்கு செய்யப்பட்ட வேலைகள் என்று அறிவிக்கப்படுகின்றன. ஒழுங்கு செய்யப்பட்ட வேலை ஒன்றில் பணி செய்ய நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் உரிமம் பெறத்தேவையா அல்லது பதிவு செய்ய வேண்டுமா என்று தெரிந்து கொள்வதற்காக பணி செய்வோரின் ஒன்ராறியோ ஒழுங்குபடுத்தும் அமைப்பில் நீங்கள் கண்டறிந்திட வேண்டும்.

உலகளாவிய அனுபவம் ஒன்ராறியோ (Global Experience Ontario) (GEO) என்பது, ஆரோக்கியம் சம்பந்தமில்லாத பணிகள் மற்றும் திறன் வாய்ந்த வர்த்தகங்களில் பணி செய்வதற்கு விரும்பும், பன்னாட்டளவில் பயிற்சி பெற்ற, புதிதாக வருபவர்களுக்கான இலவச தகவல் மற்றும் உதவியை அளித்திடும் ஒரு அணுகல் மையம் ஆகும். ஆரோக்கியப் பணிகளுக்கு, பன்னாட்டளவில் கல்வி பயின்ற ஆரோக்கிய நிபுணர்களுக்கு, Health Force Ontario என்பதே ஒரு முக்கிய முகவரமைப்பு ஆகும்.

## இணைப்புத்திட்டங்கள்

ஒன்ராறியோவின் இணைப்புப் பயிற்சித் திட்டங்கள் ஆனவை, பயிற்சி அளித்தும், திறன்களை மேம்படுத்தியும், குறிப்பிட்ட தொழில்துறையில் வேலை தேடும் உதவி அளித்தும் மற்றும் வேலை வாய்ப்பு ஆதரவுகள் அளித்தும் நீங்கள் பணிக்கு தயார் ஆவதற்கு உதவுகின்றன. சில இணைப்புப் பயிற்சித் திட்டங்கள், ஒரு ஒழுங்கு செய்யப்பட்ட தொழிலில் பயிற்சி செய்வதற்கான உரிமத்தைப் பெறுவதற்கு உங்களைத் தயார் செய்கின்றன. மற்றவை, பணி அமர்த்தல்கள், நம்பிக்கையான அறிவுறுத்தல்கள், மற்றும் பணியமர்த்துபவர்களுடன் தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றின் மூலமாக உங்களது தொழிற்களத்தில் உள்ள வாய்ப்புகளைப் பெறுவதற்கான அணுகல்களை உங்களுக்கு அளிக்கின்றன. எதிர் பக்கத்தில் உள்ள ஆதாரங்களைப் பாருங்கள்.



### விடயங்கள்

*நான் தெரிவு செய்த பணி ஒழுங்குபடுத்தப்பட்டதா அல்லது ஒழுங்குபடுத்தப்படாததா?*

*ஒழுங்குபடுத்தப்பட்டது என்றால், உரிமம் பெறச் செய்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?*

*எனது கல்விசார் ஆவணங்களை மதிப்பீடு செய்யத் தேவையான அனைத்துப் பத்திரங்களும் என்னிடம் இருக்கிறதா? ஏதேனும் ஆவணங்கள் இல்லை என்றால் யாரை நான் தொடர்பு கொள்ள வேண்டும்?*

*எனது பணிக்கு குறிப்பிட்ட அளவுக் கல்விக்கான சான்று தேவைப்படுகிறதா? இதற்கு ஒரு குறிப்பிட்ட துறைக் கல்வி தேவைப்படுகிறதா?*

*என்னிடம் தேவையான கல்வி ஆவணங்கள் இருக்கின்றனவா?*

# வேலை தேடுதல்

நீங்கள் விரும்புகின்ற வேலையைத் தேடிப் பெறுவது என்பது காலநேரம் எடுக்கக்கூடியது மற்றும் திட்டமிட வேண்டிய ஒன்று ஆகும். ஒன்ராறியோவில் வேலை தேடுவது என்பது சில புதிய சவால்களைக் கொண்டது. சுயகுறிப்புகளை வித்தியாசமாக தயாரிக்க வேண்டி வரலாம் மற்றும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது என்பது உங்களது வேலை தேடலில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. உங்களுக்கு உதவுவதற்காக பல்வேறு முகவரமைப்புகள் மற்றும் ஆதரவுகள் இருக்கின்றன.

**விடயங்கள்**

*எனது வேலையில் நான் வெற்றி பெறுவதற்கு, குறித்த தொழில் சம்பந்தப்பட்ட தொடர்புத் திறன்களில் கூடுதலாகப் பயிற்சி எனக்குத் தேவையா?*

*எனது தற்குறிப்பு (resume) மற்றும் cover letter பற்றிய பின்னூட்டத்தையும் வேலை தேடும் ஆதரவையும் நிபுணர்களிடம் இருந்து நான் எங்கிருந்து பெறுவது?*

*எனது களத்தில் பணி புரியும் மக்களை நான் எங்கே சந்திக்க முடியும்?*

*ஒன்ராறியோவில் எனக்குப் பிடித்தமான வேலையில் சராசரி சம்பளம் எவ்வளவு?*

*ஒன்ராறியோவில் எனக்குப் பிடித்தமான தொழில் மற்றும் வேலையில் சமீப காலத்தில் நேர்ந்த முக்கியமான மாற்றங்கள் என்ன?*

## வேலை தேடல் ஆதரவுகள்

ஒன்ராறியோவில் புதிதாக வருபவர்கள் இதன் வேலைச் சந்தை பற்றி அறிந்து கொள்வதற்கும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கும் உதவுவதற்காக பல திட்டங்களும் இணையதளங்களும் உள்ளன. பின்வரும் ஏதேனும் ஒன்றின் உதவியால் நீங்கள் உங்களது தேடலைத் தொடங்கலாம்:

- ஒன்ராறியோ வேலைச் சந்தை பற்றி ontario.ca என்ற அல்லது findlink.at/lmi என்ற ணையத்தளத்திற்குச் சென்று அறிந்து கொள்ளுங்கள்
- வேலை தேடுவதில் உதவும் வகையில் தகவல்கள் மற்றும் குறிப்புகளுக்காக Employment Ontario தொடர்பு மையத்தை 1-800-387-5656 என்ற இலக்கத்தில் அழைத்திடுங்கள் அல்லது Employment Ontario வின் ontario.ca என்ற அல்லது findlink.at/etlanding என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்
- ஒரு Employment Ontario ஒன்ராறியோ சேவை அளிப்பவர் எவ்வாறு உங்களுக்கு உதவலாம் என்று ontario.ca என்ற அல்லது findlink.at/ineedajob என்ற இணையத்தளத்திற்குச் சென்று அறிந்திடுங்கள்
- கனடா அரசினால் உருவாக்கப்பட்ட "கனடாவில் வேலை பார்ப்பது" என்ற ஒரு கருவியை இந்த இணையத்தில் ஆராயுங்கள்: workincanada.gc.ca
- settlement.org அல்லது findlink.at/employInfo என்ற இணையத்தளத்தில் பயனுள்ள வேலை-தேடல் கட்டுரைகளைப் படித்திடுங்கள்
- ஒன்ராறியோ நெடுகிலும் மற்றும் கனடாவிலும் கிடைக்கக்கூடிய வேலைகள் பற்றிய Service Canada தகவல் தளத்தினை ஆன்லைனில் இந்த இணையத்தளத்தில் அணுகுங்கள் jobbank.gc.ca

## வேலைப் படையுடன் இணைந்து கொள்வது

கனேடிய வேலைப் படையுடன் இணைந்து கொள்வதற்கு, தன்னார்வத் தொண்டு புரிவது ஒரு சிறந்த வழியாகும். 211 என்ற எண்ணை அழைத்திடுங்கள் மற்றும் உங்களது உள்ளூர் தன்னார்வத் தொண்டர் மையத்தின் இருப்பிடம் பற்றிக் கேளுங்கள், அல்லது ஒன்ராறியோ தன்னார்வத் தொண்டர் Employment Ontario மையத்தை ovcn.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

தொழில் இணைப்புப் பாலம் (Career Edge) ஆனது, திறனுள்ள குடியேற்றவாசிகளுக்கு வணிக நிர்வாகம், வேதியியல், தகவல் தொடர்பு, சுற்றுச்சூழல் படிப்புகள், மற்றும் நிதி ஆகியவை உட்பட்ட பலவகையான ஒழுங்கு செய்யப்படாத தொழிற்களங்களில் உள்ளகப் பயிற்சியை வழங்குகிறது. கூடுதல் தகவல்களைப் பெறுவதற்கு மற்றும் விண்ணப்பிப்பதற்கு, 1-888-507-3343 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது careeredge.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்





## வேலைக்கு விண்ணப்பித்தல்

நீங்கள் பொதுவாக ஒரு தற்குறிப்பை (இது “curriculum vitae” அல்லது CV என்றும் அழைக்கப்படுகிறது) அனுப்பி வேலைக்கு விண்ணப்பிக்கிறீர்கள். ஒரு தற்குறிப்பு என்பது உங்களது தகுதிகள் மற்றும் வேலை அனுபவத்தின் ஒரு பட்டியல் ஆகும். ஒரு cover letter என்பது அந்த வேலைக்கு நீங்களே எவ்வளவு பொருத்தமானவர் என்பதற்கு ஒரு சிறு விளக்கமாக அமைகிறது.

பணி அமர்த்துபவர்கள் சிலருக்கு மற்றொரு நாட்டில் உங்களது முந்தைய அனுபவம் பற்றி அந்த தற்குறிப்பில் குறிப்பிடப்பட்டு இருந்தால் அதன் மதிப்பு நிச்சயமாகத் தெரிவதில்லை. ஒன்ராறியோவின் பணி அமர்த்துபவருக்கு உங்களது முந்தைய அனுபவம் எவ்வாறு பலனளிக்கும் என்பதை உங்களது தற்குறிப்பிலும் கவர் கடிதத்திலும் காட்டப்படுவதை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். தற்குறிப்புகள் மற்றும் கவர் கடிதங்களை தயாரிப்பது பற்றிய தகவல்களையும் வேலைக்கான நேர்முகங்களுக்காகத் தயார்படுத்திக் கொள்வது பற்றியும் workincanada.gc.ca என்ற அல்லது jobbank.gc.ca என்ற இணையத்தளத்தில் அறிந்து கொள்ளுங்கள்

findlink.at/EmploymentInCanada

## ஒன்ராறியோவின் வேலையிடக் கலாச்சாரம்

வேலையிடக் கலாச்சாரம் என்பது நாட்டுக்கு நாடு மாறுபடக்கூடும், மற்றும் பணிக்கு பணியும் கூட மாறுபடலாம். பொதுவாக, ஒன்ராறியோவில் உள்ள பணியமர்த்துபவர்கள் தொடர்பாடல் திறனுக்கு ஒரு முக்கிய இடம் தருகின்றனர். ஒன்ராறியோவின் பணியிடக் கலாச்சாரம் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவும் வகையில் உங்களது உள்ளூர் குடியமர்வு முகவரமைப்பு மற்றும் பிற அரசு நிபுணர்கள் உதவக்கூடும். சில மொழிப் பயிற்சி வகுப்புகள், பணியிடக் கலாச்சாரம் மற்றும் தகவல் தொடர்பு பற்றிய பயிற்சிகளை அளிக்கின்றன.



# பணியிட உரிமைகள்

## பணியிடச் சமத்துவம்

***ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதி*** ஆனது, பணியிடத்தில் பாரபட்சத்தை தடை செய்கிறது. ஒன்ராறியோவில் பணி புரியும் பொழுது அல்லது வேலை ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் பொழுது, அவரது இனம், வம்சமரபு, பிறப்பிடம், நிறம், இனஞ்சார்ந்த தோற்றுவாய், குடியுரிமை, மதம், வயது, பாலினம், பால் நாட்டம், குற்றங்களின் பதிவு, திருமணநிலை, ஒத்த-பால் உறவுப்படிநிலை, குடும்பப் படிநிலை அல்லது திறனிழப்பு காரணமாக, பாரபட்சமாக நடத்தப்படக் கூடாது அல்லது தொந்தரவு செய்யப்படக் கூடாது. பணியிடத்தில் உங்களது சமத்துவ உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு, Ontario Human Rights Commission ohrc.on.ca என்ற அல்லது findlink.at/ohrcemploy என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## ஒன்ராறியோ வேலைவாய்ப்பு தராதரங்கள் சட்டம்

ஒன்ராறியோவில் உள்ள பணியாளர்கள் ஒரு நியாயமான மற்றும் பாதுகாப்பான பணியிடத்திற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். பணியமர்த்துபவர்கள் மற்றும் பணியாளர்கள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய குறைந்தபட்ச தராதரங்களை, Employment Standards Act (ESA) வகுத்துள்ளது.

## ஊதியங்கள்

செயல்திறமிக்க 2025 இல், பொது குறைந்தபட்ச ஊதியம் ஒரு மணி நேரத்திற்கு $17.60, மற்றும் மாணவர் குறைந்தபட்ச ஊதியம் ஒன்றுக்கு $16.60 மணி.[5] மேலும் விவரங்களுக்கு, ◌ார்வையிடவும் தொழில், குடிவரவு, பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் இணையத்தளம்: ontario.ca என்ற அல்லது findlink.at/minwage என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## பணி நேரங்கள்

பொதுவாக ஊழியர்களை நாளில் எட்டு மணி நேரங்களுக்கு மேலாகவும், பிரதி வாரம் மொத்தம் 48 மணி நேரத்திற்கு அதிகமாகவும் பணி புரிவதற்கு கேட்க முடியாது, சில விதிவிலக்குகள் இருக்கலாம். அதிகபட்ச மணி நேரங்களை, எழுதப்பட்ட ஒப்பந்த அடிப்படையிலும் மற்றும் ஒன்ராறியோவின் Employment Standards இயக்குநரின் அங்கீகாரத்தின் பேரிலும் அதிகரிக்கலாம்.

## பொது விடுமுறைகள்

ஒவ்வொரு ஆண்டிலும் ஒன்ராறியோவில் ஒன்பது பொது விடுமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. தகுதி பெற்ற ஊழியர்கள் இந்த நாட்களை விடுமுறையாக எடுக்கும் உரிமையைப் பெறுகின்றனர். அந்த நாட்களில் அவர்களுக்குப் பொது விடுமுறை ஊதியம் வழங்கப்படுதல் அவசியம் ஆகும். ஒன்ராறியோவின் பொது விடுமுறைகளாவன: புத்தாண்டு தினம், குடும்ப தினம், புனித வெள்ளி, விக்டோரியா தினம், கனடா தினம், தொழிலாளர் தினம், நன்றிகூறும் தினம், நத்தார் தினம் மற்றும் Boxing day.

## விடுமுறைக் காலம்

பொதுவாக, வேலை செய்யும் ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் குறைந்தது இரண்டு வாரங்கள் விடுமுறைக் காலத்தைப் பெறும் உரிமையை ஊழியர்கள் கொண்டுள்ளனர். சம்பளம் தரப்பட்ட விடுமுறைக் காலத்திற்குப் பதிலாக, ஊழியர்கள் தங்களது மொத்த ஊழியத்தின் குறைந்தபட்சம் நான்கு சதவீதத்தை விடுமுறைச் சம்பளமாகப் பெறும் உரிமையையும் கொண்டுள்ளனர்.

[5] இந்த வீதமானது 18 வயதுக்கு கீழ் இருக்கின்ற மாணவர்களுக்கு, பள்ளி நடந்து கொண்டிருக்கும் பொழுது அல்லது பள்ளி விடுமுறையின் பொழுது அல்லது கோடை விடுமுறைகளின் பொழுது, பிரதி வாரத்திற்கு 28 மணி நேரங்கள் அல்லது அதற்குக் குறைவாகப் பணி புரிகின்ற மாணவர்களுக்குப் பொருந்துகிறது.

## உங்கள் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளல்

பணியமர்த்துபவர்கள் கண்டி ப்பாக ஒரு ஒழுங்கான, தொடர்ச்சியான முறையில் வருகின்ற சம்பள நாளில் ஊழியர்களுக்கு சம்பளம் அளிக்க வேண்டும் மற்றும் அந்தந்த சம்பளக் காலவரைகளுக்கான அவர்களது சம்பளத்தையும் கழிவுகளையும் காட்டுகின்ற ஒரு அறிக்கையையும் தர வேண்டும்.

## பேறுகால மற்றும் பெற்றோர் விடுமுறை

வேலை செய்யும் தாயார் மற்றும் தந்தையர்கள் குழந்தை பிறப்பை எதிர்நோக்கும் பொழுது அல்லது சமீபத்தில் ஒரு குழந்தை பிறந்திருந்திருக்கும் பொழுது, அவர்களுக்கு வேலையில் இருந்து தற்காலிகமான சம்பளமில்லாத விடுமுறைக்கு உரிமை உள்ளது. தகுதியான பெற்றோருக்கு Employment Insurance (EI) பயன்களை அளிக்கிறது.

Employment Standards Act கீழ், உங்களது உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, Ministry of Labour-ன் Employment Standards Information Centre -ஐ 1-800-531-5551 என்ற இலக்கத்தில் அழைத்திடுங்கள் (23 மொழிகளில் தகவல்களை அளிக்கின்றன) அல்லது Ministry of Labour -ன் ontario.ca அல்ல findlink.at/on-esa என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள். மேலும் நீங்கள் மத்திய அரசின் தொழிலாளர் பிரச்சினைகளுக்கான அதிகாரி ஒருவருடன் பேச Service Canada க்குப் போகவும் முடியும். அதன் அமைவிடங்களைக் கண்டறிவதற்கு, உங்களது தொலைபேசி புத்தகத்தின் நீலநிறப்பக்கங்களில் பாருங்கள் அல்லது servicecanada.gc.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

findlink.at/EmploymentInCanada

## ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

ஒன்றாறியோவின் தொழிலாளர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினைக் காப்பதற்காக, ஒன்றாறியோ தொழில்ரீதியான ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு சட்டமானது தராதரங்களை அமைத்திருக்கிறது. இது ஒன்றாறியோவில் உள்ள அனைத்து வர்த்தக துறைகளுக்கும் பொருந்துகிறது, சில விதிவிலக்குகள் உள்ளன.

- பணியில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக, உங்களது மற்றும் உங்களது பணியமர்த்துபவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றி, ***பணியாளரின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு விழிப்புணர்வு*** 4 ***படிகளில்*** என்னும் பணிப்புத்தகத்தை வாசித்திடுங்கள். இந்த பணிப்புத்தகம் the Ministry of Labour -ன் ontario.ca என்ற அல்லது findlink.at/hsawarenes என்ற இணையத்தளத்தில் கிடைக்கிறது. மேலும் நீங்கள் அந்த செயல்முறைப்புத்தகத்தை உங்களுக்குத் தபாலில் அனுப்பும்படி 1-800-267-8097 என்ற இலக்கத்தில் அழைக்கலாம்.
- தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக Ministry of Labour -ன் யுக்திகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, ontario.ca என்ற அல்லது findlink.at/hsafety என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்
- பணியில் ஒரு பாதுகாப்புக் கரிசனை பற்றிப் புகார் தெரிவிப்பதற்கு, the Health and Safety Contact Centre -ஐ 1-877-202-0008 என்ற இலக்கத்தில் அழைத்திடுங்கள்.

## ஒன்ராறியோ பணியிட பாதுகாப்பு மற்றும் காப்பீட்டு சபை

Ontario Workplace Safety and Insurance Board (WSIB) ஒன்ராறியோவின் பிழையில்லாத பணியிடக் காப்பீட்டுத் தொகையை, பணியமர்த்துபவர்கள் மற்றும் அவர்களது பணியாளர்களுக்காக நிர்வகிக்கின்றது. இந்த சபைக்கான நிதியானது பணியமர்த்துபவர்களின் பங்களிப்பில் இருந்து கிடைக்கிறது. இது திறனிழப்புப் பயன்களை அளிக்கிறது, பணியாளர்கள் பெறுகின்ற ஆரோக்கியப் பராமரிப்பின் தரத்தைக் கண்காணிக்கிறது மற்றும் வேலையின் பொழுது காயப் பட்டிருக்கும் பணியாளர்களுக்குத் துணை புரிகிறது.

பணி செய்யும் பொழுது நீங்கள் காயம் அடைந்திருக்கீர்கள் என்றால் அல்லது பணியிடப் பாதுகாப்பு மற்றும் காப்பீடு பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, 1-800-387-0750 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது (WSIB) யினை அதன் wsib.on.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்





# உங்களது சொந்த வர்த்தகத்தை தொடங்குதல்

ஒன்ராறியோவில் உங்களது சொந்த வர்த்தகத்தைத் தொடங்குவதற்கான பரபரப்பான வாய்ப்புகள் உள்ளன. ஒன்ராறியோவில் 2012ம் ஆண்டில், 2.9 மில்லியனுக்கும் மேலான மக்கள் சிறிய மற்றும் மத்திம அளவுள்ள நிறுவனங்களால் பணியில் அமர்த்தப்பட்டார்கள். இந்த வர்த்தக நிறுவனங்கள் ஒன்ராறியோவின் வர்த்தகஙகளில் 98 சதவிகிதம் ஆகும்.[6]

ஒன்ராறியோவில் வர்த்தகம் தொடங்குவது பற்றி அறிந்து கொள்வதற்கு, Ministry of Economic Development, Employment and Infrastructure -ன் ontario.ca என்ற அல்லது findlink.at/business என்ற இணையத்தளத்திற்கு வாருங்கள்

ஒன்ராறியோவின் அரசானது சிறிய வர்த்தக தொழில்முனைவோர் மையங்களை உருவாக்கியிருக்கிறது, இது மாகாணம் முழுவதிலும் அமைந்திருக்கிறது. இங்கு, நீங்கள் வெற்றிகரமான சிறிய வர்த்தகங்களைத் தொடங்குவது, சொந்தமாக்கிக் கொள்வது மற்றும் நடத்துவது தொடர்பான தகவல்கள் மற்றும் சேவைகளைப் பெற முடியும். இது பற்றி மேலும் தெரிந்து கொள்வதற்கு 1-800-567-2345 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது ontario.ca என்ற அல்லது findlink.at/sbec என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

கனடா அரசானது பல கனடா வர்த்தகச் சேவை மையங்களை அமைத்திருக்கிறது, அதில் உங்களுக்குச் சொந்தமான வர்த்தகத்தைத் தொடக்குவதற்கு உதவிடுகின்ற தகவல்கள் மற்றும் ஆதரவினை நீங்கள் பெற முடியும். கூடுதல் தகவலுக்கு 1-888-576-4444 என்ற இலக்கத்தை அழைத்திடுங்கள் அல்லது canadabusiness.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

[6] ஆதாரம்: Ministry of Economic Development and Trade, ontariocanada.ca அல்லது findlink.at/onmedte

# குடியமர்வுத் திட்டம்

## வேலைக்குத் தயார் ஆவது

- [ ] உங்களது சமூகக் காப்பீட்டு எண்ணிற்கு (SIN) விண்ணப்பம் செய்யுங்கள்.
- [ ] உங்களது வேலை ஒன்ராறியோவில் ஒழுங்குபடுத்தப்பட்டதா என்று கண்டறியுங்கள்.
- [ ] உங்களது கல்விசார் ஆவணங்களை மதிப்பீடு செய்யுங்கள்.
- [ ] உங்களது வாழ்க்கைத் தொழில் இலக்குகள் தொடர்பான, உங்களது பகுதியில் உள்ள இணைப்புத் திட்டங்கள் எங்கிருக்கின்றன என்று கண்டறியுங்கள்.

1. பணி ______ நிறைவு செய்யுங்கள் / /

தகவல் ஆதாரங்கள் ______

2. பணி ______ நிறைவு செய்யுங்கள் / /

தகவல் ஆதாரங்கள் ______

3. பணி ______ நிறைவு செய்யுங்கள் / /

தகவல் ஆதாரங்கள் ______

## வேலை தேடல்

- [ ] உங்களது வேலை-தேடல் தேவைகள் பற்றியும் அடுத்த நடவடிக்கைகள் பற்றியும் ஒரு குடியமர்வு ஆலோசகரிடம் அல்லது ஒரு பணியமர்த்தும் ஆலோசகரிடம் பேசுங்கள்.
- [ ] உங்களுக்கு விருப்பமான வேலையின் ஒன்ராறியோ பணியிடக் கலாச்சாரத்தின் அடிப்படைப் புரிதல் ஒன்றைப் பெறுங்கள்.
- [ ] résumé மற்றும் cover letter தயாரியுங்கள்.
- [ ] தொடர்புகளைத் திறன்மிக்க முறையில் தொடங்கிடுங்கள் மற்றும் உள்ளூர்த் தொடர்பாளர்களின் பட்டியல் ஒன்றை உருவாக்குங்கள்.
- [ ] உங்களுக்கு நிபுணத்துவம் உள்ள வேலைகளுக்கான மேலதிக அனுபவத்தைப் பெறுவதற்கு கிடைக்கக்கூடிய தன்னார்வத் தொண்டர் திட்டங்கள் அல்லது கட்டணமில்லாத பயிற்சித் திட்டங்கள் இருக்கும் இடங்களை உங்கள் பகுதியில் கண்டறிந்திடுங்கள்

1. பணி ______ நிறைவு செய்யுங்கள் / /

தகவல் ஆதாரங்கள் ______

2. பணி ______ நிறைவு செய்யுங்கள் / /

தகவல் ஆதாரங்கள் ______

3. பணி ______ நிறைவு செய்யுங்கள் / /

தகவல் ஆதாரங்கள் ______

# பணம் மற்றும் தனிப்பட்ட நிதிகள்

இந்த பகுதி உங்களது பணம் சம்பந்தமான முக்கிய விடயங்களை விளக்குகிறது. வங்கிக் கணக்கு திறப்பது, கடன் பெறுவது மற்றும் வரி செலுத்துவது மற்றும் பயன்கள் மற்றும் சமூக உதவி ஆகியவை பற்றிய தகவல்களை நீங்கள் இதில் காணலாம்.




**50** பணம் மற்றும் வங்கியியல்

**51** கடன் பெறுவது

**52** வரிகள்

**53** பயன்கள் மற்றும் சமூக உதவி

**54** குடியமர்வுத் திட்டம்

# பணம் மற்றும் வங்கியியல்

ஒன்ராறியோவில் வசிப்பவர்கள் வழக்கமாக தங்களது பணத்தை வங்கியில், கடன் ஒன்றியங்களில் அல்லது டிரஸ்ட் நிறுவனங்களில் வைத்திருக்கின்றனர். இந்த நிதி நிறுவனங்கள் பாதுகாப்பானவை மற்றும் வசதியானவை. பெரும்பாலான நிதி நிறுவனங்கள், Canadian Deposit Insurance Corporation உறுப்பினர்கள் ஆகும், இதன் பொருள் என்ன என்றால் அரசானது உங்கள் கணக்கில் உள்ள பணத்திற்கு அதிகபட்சமாக $100,000 அளவுக்கு காப்பீடு செய்கிறது என்பதாகும்.

## பணம்

கனடாவின் நாணயம் பற்றிய மற்றும் வெளிநாட்டு பணத்தை கனடாவின் பணமாக மாற்றுவது பற்றிய தகவலுக்கு, Welcome to Canada வாசியுங்கள்.

ஒரு பொழுதும் ரொக்கப் பணத்தை தபால் மூலமாக அனுப்பாதீர்கள். அதற்குப் பதிலாக, ஒரு காசோலையை, money order (வங்கி ஒன்றில் வாங்கப்பட்டது) அல்லது postal order (ஒரு தபால் அலுவலகத்தில் வாங்கியது) உபயோகப்படுத்துங்கள்.

findlink.at/Money-Finances

## வங்கிச் சேவைகள்

உங்களுக்கு வேலை இல்லா விட்டாலும் கூட அல்லது உடனே போடக்கூடிய அளவில் பணம் எதுவும் இல்லா விட்டாலும் கூட, வங்கிக் கணக்கு ஒன்றை நீங்கள் ஆரம்பிக்க முடியும். பெரும்பாலான வங்கிகள் பின்வரும் சேவைகளை அளிக்கின்றன:

- செக் புத்தகம் அளிப்பது மற்றும் சேமிப்புக் கணக்குகள்
- debit card
- 24 மணி நேர இணையம் மற்றும் தொலைபேசி வங்கிச் சேவை
- கடன்வசதி மற்றும் கிரெடிட் கார்டுகள்
- முதலீட்டுப் பொருட்கள் மற்றும் திட்டமிடல்
- நிதி ஆலோசனை

கனடாவின் வங்கிகள் மிகவும் பாதுகாப்பானவை என்று கருதப்பட்டாலும் கூட, உங்களது நிதி ரீதியான நலன்களைக் காத்துக் கொள்ளும் வகையில் நல்ல முறையில் தகவல்களை அறிந்திருப்பது அவசியம் ஆகும். debit card மோசடி போன்ற சூழ்ச்சிகரமான செயல்பாடுகளில் இருந்து உங்களையும் உங்களது நிதிகளையும் காத்துக் கொள்வது எப்படி என்பது பற்றிய குறிப்புகள் மற்றும் தகவலுக்கு, தொழில்துறை கனடாவின் இணைய ***நுகர்வோர் கையேட்டினை*** consumerhandbook.ca என்ற இணையத்தளத்தில் வாசித்திடுங்கள்

findlink.at/Money-Finances

## கணக்கு ஆரம்பித்தல்

கணக்கு ஆரம்பிப்பதற்கு முன்பாக, பல நிதி நிறுவனங்கள் பற்றி ஆராய்ச்சி செய்வது ஒரு நல்ல யோசனை ஆகும். வங்கிப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் வட்டி விகிதங்கள் மாறுபடலாம். கட்டணம் இல்லாத வங்கிக் கணக்குகள் பற்றி கேளுங்கள், அவை மிகவும் பிரபலம் அடைந்து வருகின்றன. மேலும் குறிப்பாக புதிதாக வருபவர்களுக்கான சேவைகள் பற்றி கேளுங்கள்.

உங்களது பணியமர்த்துபவர் உங்களது சம்பளத்தை நேரடியாக உங்களது கணக்கில் வைப்புச் செய்கிறார் என்றால், ஒரு நடைமுறைக் கணக்கு உங்களுக்கு தேவைப்படும். சேமிப்பு மற்றும் முதலீட்டுக் கணக்குகள் பணத்தைச் சேமிப்பதற்கு பயனுள்ளதாகும். ஏன் என்றால் அவை நடைமுறைக் கணக்கைக் காட்டிலும் அதிக வட்டி தருகின்றன. இருப்பினும், அதில் நீங்கள் குறிப்பிட்ட வகையான அல்லது ஒரு வரம்புக்கு உட்பட்டு பணப் பரிவர்த்தனைகள் செய்யவே நீங்கள் அனுமதிக்கப்படலாம். சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிக்கும் பெரும்பாலான நுகர்வோர்களிடம், அன்றாட வங்கி வசதிக்காக செக் வசதியுள்ள கணக்குகளும் உள்ளன.

ஒரு வங்கியில், கடன் ஒன்றியம் அல்லது டிரஸ்ட் நிறுவனத்தில் ஒரு கணக்கை ஆரம்பிப்பதற்கு, நீங்கள் இரண்டு அடையாளங்களைக் காட்ட வேண்டும், கடவுச்சீட்டு போன்றவை ஒன்று மற்றும் ஒரு சமூக காப்பீட்டு எண் (SIN) கார்டு. பொதுவாக அதில் ஒன்றில் உங்களது புகைப்படம் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

நீங்கள் வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும் பொழுது, ஒரு வங்கி அட்டையை பெறுவீர்கள் (அது debit card என்றும் அழைக்கப்படும்). பெரும்பாலான கடைகள், உணவு விடுதிகள் மற்றும் பிற வர்த்தக இடங்களில் ரொக்கத்திற்குப் பதிலாக இந்த அட்டையை நீங்கள் பயன்படுத்த முடியும். வங்கி எந்திரங்களில் (ATM) பரிவர்த்தனைகள் செய்யவும் இந்த அட்டை உங்களை அனுமதிக்கிறது.

findlink.at/Money-Finances

**விடயங்கள்**

*எந்த வங்கிகள் சிறப்புச் சேவைகளை புதிதாக வருபவர்களுக்கு அளிக்கிறது?*

*ஒரு சேமிப்புக் கணக்கு மற்றும் செக் புக் தரக்கூடிய கணக்கு எனக்கு தேவையா?*

*ஒரு வங்கியில் இருந்து பெறப்பட்ட ஒரு டெபிட் கார்டினை நான் மற்றொரு வங்கியின் ATM ல் பயன்படுத்தினால், அதன் சேவைக் கட்டணம் எவ்வளவு?*

# கடன் வசதி பெறுவது

## கடன்

கிரெடிட் என்பது பணத்தைக் கடன் வாங்குவதைக் குறிக்கிறது. கடன்களில் மிகவும் பொதுவான வகைகளாக கிரெடிட் கார்டுகள் மற்றும் வங்கிக் கடன்கள் உள்ளன. வழக்கமாக கடன் பெறுபவர்கள் தங்களது கடன்களை ஒழுங்கான தவணைகளில் திருப்பிச் செலுத்துகிறார்கள். அந்த கடன் அல்லது கிரெடிட் அளிக்கப்படும் பொழுது, பணம் திருப்பிச் செலுத்துவதற்கான அளவு மற்றும் எத்தனை தவணை என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

நீங்கள் ஒரு வங்கிக் கடனைப் பெறும் பொழுது அல்லது ஒரு கிரெடிட் கார்டினைப் பயன்படுத்தும் பொழுது, நீங்கள் ***வட்டி*** செலுத்துகிறீகள். வட்டி என்பது கடன் பெறுபவரிடமிருந்து கடன் தருபவர் (வழக்கமாக ஒரு வங்கி) வசூலிக்கும் பணம் ஆகும். இந்த வட்டி வீதமானது கடன் பெறப்பட்ட மொத்த தொகையின் சதவீதத்தை, ஒரு கால அளவில் வட்டியாக நீங்கள் திருப்பிச் செலுத்துவதைக் குறிக்கிறது. சில கடன்கள் மற்றும் கிரெடிட் கார்டுகளுக்கு மிக உயர்வான வட்டி வீதங்கள் உள்ளன. எனவே வங்கி ஒன்றில் இருந்து ஒரு வங்கிக் கடன் அல்லது கிரெடிட் கார்டு வடிவில் நீங்கள் கடன் பெறும் பொழுதெல்லாம், உங்களது வட்டி வீதம் என்னவாக இருக்கும் என்று நீங்கள் கேட்க வேண்டும்.

பல்வேறு வகையான கிரெடிட் மற்றும் கடன்களைப் பற்றியும் கிரெடிட் கார்டு ஒன்றை எவ்வாறு தேர்வு செய்வது மற்றும் விண்ணப்பிப்பது பற்றியும் கூடுதலாகத் தெரிந்து கொள்வதற்கு Welcome to Canada வாசியுங்கள்.


findlink.at/Money-Finances

## கடன் வரலாற்றை உருவாக்குவது

கடனை நீங்கள் எப்பொழுதெல்லாம் வாங்குகிறீர்களோ அல்லது ஒரு கிரெடிட் கார்டினை பயன்படுத்துகிறீர்களோ, ஒரு தெரிவிக்கும் முகவரமைப்பானது, நீங்கள் உரிய காலத்தில் பணத்தைத் திருப்பிச் செலுத்துகிறீர்களா மற்றும் நீங்கள் கடன் பெற்ற தொகையை திருப்பிச் செலுத்துவதற்கு எவ்வளவு காலம் ஆகிறது என்பது பற்றியும் தகவல்களைச் சேகரிக்கிறது. இந்த தகவல்கள், உங்களது ***கடன் வரலாற்றின்*** பாகம் ஆகிறது.

பல பேர் தங்களது கிரெடிட் வரலாற்றை கிரெடிட் கார்டுகளுடன் உருவாக்கத் தொடங்குகின்றனர். புதிதாக வந்தவர்களுக்கான கிரெடிட் கார்டு திட்டங்கள் பற்றி உங்களது நிதி நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருடன் பேசுங்கள். ஒப்பந்தம் ஒன்றில் நீங்கள் கையொப்பம் இடுவதற்கு முன்பாக, அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகளை மீளாய்வு செய்யுங்கள்.

கிரெடிட் பற்றி Financial Consumer Agency of Canada -விடம் சில பயனுள்ள குறிப்புகள் மற்றும் தகவல்கள் fcac-acfc.gc.ca என்ற இணையதளத்தில் உள்ளன






**விடயங்கள்**

***எனது கிரெடிட் கார்டுக்கு வட்டி வீதம் என்ன?***

***எனது தற்பொழுதைய கிரெடிட் ரேட்டிங் என்ன என்பது பற்றி எவ்வாறு நான் அறிய முடியும்?***

***எனது கிரெடிட் வரலாற்றினை உருவாக்க நான் என்ன செய்ய வேண்டும்?***

ஒன்ராறியோவில் ஒரு கிரெடிட் வரலாற்றை உருவாக்குவது முக்கியமானது ஆகும். கிரெடிட் கார்டு, கடன் அல்லது அடமானம் ஒன்றைப் பெறுவதற்காக, நீங்கள் விண்ணப்பிக்கும் பொழுது, உங்களது நிதி நிறுவனமானது, உங்களது நிதிகளை கடந்த காலத்தில் நீங்கள் எவ்வாறு மேலாண்மை செய்திருக்கிறீர்கள் என்று உங்களது கிரெடிட் வரலாற்றினை ஆய்வு செய்யும். உங்களது கிரெடிட் வரலாற்றின் அடிப்படையில், உங்களது நிதி நிறுவனமானது, நீங்கள் விரும்பும் கிரெடிட்டை அளிக்கலாமா அல்லது வேண்டாமா என்று முடிவு செய்யும்.



# வரிகள்

கனடாவில், மூன்று மட்டத்திலான அரசுகளாலும் வரிகள் வசூலிக்கப்படுகின்றன: அவை மத்திய அரசு, மாகாண மற்றும் நகராட்சி என்பவையாகும். கல்வி, ஆரோக்கியப் பராமரிப்பு, போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் திறன்கள் பயிற்சி போன்ற அரசு நிதி உதவித் திட்டங்களுக்கு வரிகளே ஆதரவு தருகின்றன.

**விடயங்கள்**

*எனது வரிகள் பற்றிய கேள்விகளை நான் எங்கு கேட்கலாம்?*

*எனது வருமான வரி மீளப்பெறலை நிறைவு செய்வதற்கு வேண்டிய உதவியை எங்கே நான் பெற முடியும்?*

*கனடாவின் குழந்தை வரி பயனைப் பெறுவதற்கு நான் தகுதியானவரா?*

## வரிகளின் வகைகள்

வசூலிக்கப்படும் மிக முக்கியமான வகை வரிகளாக வருமான வரி, விற்பனை வரி, சொத்து வரி மற்றும் வர்த்தக வரி ஆகியவை உள்ளன.

வரி தொடர்பான நோக்கங்களுக்காக, வருடம் முழுவதும் நீங்கள் பெற வேண்டிய பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பிற ஆவணங்கள் பற்றி நீங்கள் விழிப்புடன் இருப்பதை நிச்சயித்துக் கொள்ளுங்கள்.

பல்வேறு வகை வரிகளின் விளக்கம் ஒன்றை, Ministry of Finance -ன் ontario.ca என்ற அல்லது findlink.at/finance என்ற இணையத்தளத்தில் பாருங்கள்

## வருமான வரி

கனேடியர்கள் தங்களது வருமான வரி மீளப்பெறல்களை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 30க்குள் சமர்ப்பித்து விடுகின்றனர். வெளிநாடுகளில் இருந்து கிடைத்தாலும் கூட, உங்களது வருமானம் அனைத்தையும் நீங்கள் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும்.

உங்களது வருமான வரி திரும்பப்பெறுவதை நிறைவு செய்வதற்கான இலவச உதவியை, சமுதாய தன்னார்வத் தொண்டர் வருமான வரி திட்டம் மூலமாகப் பெறலாம். Canada Revenue Agency (CRA) cra-arc.gc.ca என்ற அல்லது findlink.at/incometax என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## ஒத்திசைவான விற்பனை வரி கிரெடிட் (HARMONIZED SALES TAX CREDIT – HST)

ஒன்ராறியோவில் குடியிருக்கும் அனைவரும் பெரும்பாலான நுகர்வோர் பொருட்களுக்கு சீரமைக்கப்பட்ட விற்பனை வரியைச் (HST) செலுத்துகின்றனர். குறைவான வருமானம் உள்ள மக்களுக்கு, Canadian Revenue Agency (CRA) ஆனது இந்த வரி அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை ஒரு வரி வரவு மூலமாகத் திருப்பித் தருகிறது. உங்களது வரி திரும்பப் பெறும் பக்கம் ஒன்றில் உள்ள HST வரவு விண்ணப்பத்தை நிறைவு செய்வதன் மூலமாக, இந்த கிரெடிட்டிற்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும். நீங்கள் தகுதியானவர் என்று CRA முடிவு செய்தால், காசோலை ஒன்றை நீங்கள் பெறுவீர்கள்.

கூடுதல் தகவலுக்கு cra-arc.gc.ca என்ற அல்லது findlink.at/gst-hst என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

## கனடா குழந்தை வரி ஆதாயம்

உங்களுக்கு 18 வயதுக்கு கீழ் இருக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால், கனடா குழந்தை வரி பயனை நீங்கள் பெறக்கூடியதாக இருக்கலாம். தகுதியானவர் என்றால், உங்களது குழந்தையை வளர்ப்பதற்கான செலவுகளுக்காக கனடா அரசிடமிருந்து நீங்கள் ஒரு மாதாந்திர தொகையைப் பெறுவீர்கள். இந்த தொகையின் அளவானது, உங்களது வருமானம் மற்றும் உங்களைச் சார்ந்திருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது.

நீங்கள் தகுதியானவரா என்று கண்டறிவதற்கும் விண்ணப்பிப்பதற்கும், Canada Revenue Agency, cra-arc.gc.ca என்ற அல்லது findlink.at/cra-bnfts என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

# ஆதாயங்கள் மற்றும் சமூக உதவி

## ஒன்ராறியோவில், நிதி உதவி தேவைப்படுகின்ற மக்களுக்கு உதவும் வகையில் மாகாண மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் இருக்கின்றன.

### வேலைக்காப்பீடு (EI)

உங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாலான சூழ்நிலைகளால் உங்களது வேலையை நீங்கள் இழந்துள்ளீர்கள் என்றால், -உதாரணமாக, வேலைகளின் தட்டுப்பாடு, அல்லது பருவகாலத்திற்குரிய அல்லது பெரும் அளவில் வேலைநீக்கம் செய்யப்படுதல் போன்றவை நேரிட்டால், EI பலன்களைப் பெறுவதற்கு நீங்கள் தகுதியானவராக இருக்கலாம். தகுதியாக இருப்பதற்கு, நீங்கள் கண்டிப்பாக கனடாவில் முந்தைய 52 வாரங்களில், போதிய காப்பீடு தரக்கூடிய மணி நேரங்களைச் சேர்த்திருக்க வேண்டும்.

EI பலன்களைப் பெறுவதற்கு நீங்கள் தகுதியானவரா என்று கண்டறிவதற்கு, உங்களது குடியமர்வு ஆலோசகரிடம் பேசுங்கள் அல்லது Service Canada servicecanada.gc.ca என்ற அல்லது findlink.at/ei-app என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### கனடா ஓய்வூதியத் திட்டம் (CPP)

ஒன்ராறியோவில் நீங்கள் வேலை பார்த்து வரும் பொழுது, உங்களைப் பணியமர்த்துபவர் உங்களது சார்பில் CPP க்கு பங்களிப்பதற்காக உங்களது சம்பளக் காசோலைகளில் இருந்து பணத்தை தானியங்கி முறையில் கழிக்கிறார்.

பின் வருமாறு இருந்தால், ஒரு CPP ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்கள்:

- நீங்கள் கனடாவில் பணி செய்திருக்றீர்கள், மற்றும் CPP க்கு குறைந்தபட்சம் ஒரு பங்களிப்பை (பணம் செலுத்துதல்) செய்திருக்கிறீர்கள்.
- உங்களுக்கு குறைந்தது 65 வயதாகிறது, அல்லது நீங்கள் 60 மற்றும் 64 வயதுக்கு உட்பட்டவர் மற்றும் நீங்கள் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டபடி பணம் ஈட்டும் மற்றும் பங்களிப்பு தேவைப்பாடுகளை நிறைவு செய்கிறீர்கள்.

CPP பற்றி கூடுதலாக கண்டறிவதற்கு, Service Canada வின் servicecanada.gc.ca என்ற அல்லது findlink.at/cpp என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### வயது முதிர்ந்தவர்களுக்கான பாதுகாப்பு ஓய்வூதியம் (ஓஏஎஸ்) (OAS)

(OAS) என்பது 65 அல்லது அதற்குக் கூடுதலாக வயதான கனடா நாட்டவருக்கு வழங்கப்படும் ஒரு மாதாந்திர உதவித்தொகை ஆகும். தகுதி பெறுவதற்கு, நீங்கள் கண்டிப்பாக, 18 வயது ஆன பிறகு, குறைந்தது 10வருடங்கள் கனடாவில் வசித்திருக்க வேண்டும்.

கூடுதலாக கண்டறிவதற்கு, Service Canada -வின் servicecanada.gc.ca என்ற அல்லது findlink.at/oldagesecu என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### சமூக உதவி

Ontario Works(OW)என்பது, தற்காலிக பணத் தேவையில் இருக்கும் ஒன்ராறியோ வாசிகளுக்கு உதவிடும் ஒரு திட்டம் ஆகும். இது இரு சேவைகளை அளிக்கிறது: நிதி உதவி மற்றும் ஒரு வேலையைக் கண்டறிய உதவுவது.

நீங்கள் தகுதி பெற்றால், Ontario Works(OW) ஆனது, உணவு மற்றும் குடியிருப்பு போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான செலவுகளை ஈடுகட்ட உதவிடும். இந்த திட்டம் பற்றியும் தகுதிக்கான தேவைப்பாடுகள் பற்றியும் கூடுதலாக கண்டறிவதற்கு, சமுதாய மற்றும் சமூக சேவைகளின் அமைச்சகத்தின் ontario.ca என்ற அல்லது findlink.at/socialassi என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

### ஒன்ராறியோ வலுவிழப்பு ஆதரவுத் திட்டம் (ODSP)

நிதி தேவைகள் உள்ள, செயலிழப்புகள் கொண்ட மக்களுக்கு ODSP உதவுகிறது. இந்த திட்டமானது, தகுதியான விண்ணப்பதாரர்கள் வேலைகளைக் கண்டறிவதற்கு உதவுகிறது மற்றும் அவர்களது உணவு மற்றும் குடியிருப்புச் செலவுகளை ஈடுகட்டுவதற்கான நிதி உதவி அளிக்கிறது.

ஓடிஎஸ்பி பற்றி கூடுதலாகக் கண்டறிவதற்கு, Ministry of Community and Social Services ontario.ca என்ற அல்லது findlink.at/ont-dsp என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்



# குடியமர்வுத் திட்டம்

## வங்கியியல், கடன் வசதி பெறுவது மற்றும் வரிகள்

- [ ] வங்கித் தெரிவுகள் பற்றியும் வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பிப்பது பற்றியும் ஆராய்ச்சி செய்யுங்கள்.
- [ ] புதிதாக வந்துள்ளவர்களுக்கான வங்கிச் சேவைகள் பற்றி வங்கிப் பிரதிநிதியிடம் பேசுங்கள்.
- [ ] ஒரு கிரெடிட் அட்டை கேட்டு விண்ணப்பியுங்கள்.
- [ ] கனடா குழந்தை வரி ஆதாயத்துக்கு (தகுதி இருந்தால்) விண்ணப்பியுங்கள்.

1. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்க / /

தகவல் ஆதாரங்கள்

# மக்கள் மற்றும் சுற்றுச்சூழல்

ஒன்ராறியோவின் பல வகைப்பட்ட சமூகத்தின் முக்கிய பெறுமானங்கள் சிலவற்றை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவக்கூடிய தகவல்களை இந்த பகுதி அளிக்கிறது. இவற்றில் பாலின சமத்துவம், ஒவ்வொருவரையும் சமமாக மரியாதையாக நடத்துவது மற்றும் மதிப்பது, குடும்பப் பிரச்சினைகளை வன்முறையற்ற முறையில் தீர்த்துக் கொள்வது மற்றும் சுற்றுச்சூழலைப் பேணிக் காப்பது ஆகியவை அடங்கும்.




56 உள்ளடங்கிய தன்மை

57 செயல் திறனிழப்புள்ள மக்கள்

58 குடும்ப உறவுகள்

59 சுற்றுச் சூழலைப் பேணிக்காப்பது

60 குடியமர்வுத் திட்டம்



# உள்ளடங்கிய தன்மை

ஒன்ராறியோ என்பது ஒரு பல்லினச் சமூகம் ஆகும், இங்கு மக்கள் ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்பதற்கும், ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்வதற்கும் மற்றும் திறந்த மனப்பான்மை உள்ள ஒரு கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் பாடுபடுகின்றனர். உங்களை விட வித்தியாசமான மக்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான பல வாய்ப்புகளை நீங்கள் பெறுவீர்கள். ஒவ்வொருவரும் தாங்கள் தங்களது இல்லத்தில் இருப்பது போன்று உணரும் ஒரு இடமாக-அடையக்கூடிய மற்றும் உள்ளடங்கிய தன்மை கொண்டதாக இருப்பதை ஒன்ராறியோ நோக்கமாகக் கொண்டுள்ளது.

**விடயங்கள்**

*கலாச்சார ரீதியில் தீர்மானிக்கப்பட்ட எனது சில மனோபாவங்கள் மற்றும் நம்பிக்கைகள் எவை?*

*பல வகையான கண்ணோட்டங்கள் உள்ள மக்களுடன் நான் எவ்வளவு சகிப்புத் தன்மை கொண்டுள்ளேன்?*

*பிற கலாச்சாரங்கள் பற்றி எனக்கு என்ன தெரியும்?*

*பிற கலாச்சாரங்கள் பற்றி எவ்வாறு நான் கற்றுக் கொள்வது?*

*எனது கலாச்சாரம் பற்றி மக்கள் என்ன பொதுமைப்படுத்தல் செய்கிறார்கள்?*

## பன்முகத்தன்மை மற்றும் உள்ளடங்கிய தன்மை

ஒன்ராறியோவின் மக்கள் தொகையில், பல வித்தியாசமான கலாச்சார மற்றும் மத பின்புலங்கள் கொண்ட, பல்வேறு திறன்கள் கொண்ட, பல்வேறு பாலியல் நாட்டங்கள் கொண்ட மற்றும் எல்லா வித வித்தியாசங்கள் கொண்ட மக்கள் அடங்கியுள்ளனர்.

இந்த அற்புதமான மக்கள் கலவையில் இருந்து பயனைப் பெறுவதற்கு, நாம் உள்ளடங்கிய தன்மை கொண்டிருக்க வேண்டும். உள்ளடங்கியது என்பதன் பொருள், எல்லா பின்புலங்கள் கொண்ட மக்களுடன் தீவிரமாக பழகுவது ஆகும். ஒன்ராறியோவில் வாழ்வதன் எல்லா அம்சங்களிலும் பங்கேற்பதற்கான சமமான வாய்ப்புகளை ஒவ்வொருவரும் பெறுவதை நிச்சயப்படுத்துவது என்பதும் இதன் பொருள் ஆகும்.

Ontario Public Service (OPS) ஐ ஒரு அதிக உள்ளடங்கிய பணியிடமாக ஆக்குவதற்கு, Ontario Public Service இடம் ஒரு திட்டம் உள்ளது. இது பற்றி கூடுதலாகக் கண்டறிவதற்கு, mgs.gov.on.ca என்ற அல்லது findlink.at/omgs என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

ஒன்ராறியோ மனித ***உரிமைகள் நடத்தை விதியானது***, நியாயமற்ற முறையில் மக்களை நடத்துவது சட்ட விரோதம் என ஆக்குவதன் மூலமாக, உள்ளடங்கிய தன்மைக்கு ஒரு அடித்தளம் தருகிறது. இது பற்றி கூடுதலாக அறிவதற்கு, ஒன்ராறியோ மனித உரிமைகள் ஆணையத்தின் ohrc.on.ca என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்

## ஆண் பெண் சமத்துவம்

கனடாவில், ஆண் பெண் இடையே சமத்துவம் என்பது ஒரு அடிப்படை மதிப்பு ஆகும். பெண்களின் உரிமைகளை இல்லாமல் ஆக்கும் அல்லது ஊறு விளைவிக்கும் கலாச்சார முறைகள் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது.

## எல்ஜிபிடிக்யூ (LGBTQ) சமுதாயம்

LGBTQ என்பது பெண்ணும் பெண்ணும் உறவு கொள்வது, ஆணும் ஆணும் உறவு கொள்வது, இரு-பாலியல், திருநங்கை, வினோதமான (Queer) ஆகியவற்றின் சுருக்கம் ஆகும். LGBTQ மக்கள் ஒன்ராறியோ சமூகத்தின் பெருமிதம் கொண்ட பங்கேற்பாளர்கள் ஆவார்கள். இவர்களது பாலியல் நாட்டம் காரணமாக இவர்களிடம் பாரபட்சம் காட்டுவது அல்லது தொந்தரவு கொடுப்பது, ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதியின் கீழ் சட்ட விரோதம் ஆகும்.

LGBTQ மக்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றி settlement.org என்ற அல்லது findlink.at/lgbtqservi என்ற இணையத்தளத்தில் அறியுங்கள். 211 என்ற இலக்கத்துக்கும் நீங்கள் அழைக்கலாதட அல்லது serviceontario.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

# திறனிழப்புகள் கொண்ட மக்கள்

ஒன்ராறியோவில் உள்ள ஏழில் ஒருவருக்கு உடல் திறனிழப்பு உள்ளது-சுமாராக 1.85 மில்லியன் ஒன்ராறியோவினர்.[7] இவர்களின் வயது அதிகரிக்கும் பொழுது, இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பங்கேற்கும் ஒரு இடமாக இருப்பதை ஒன்ராறியோ நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒன்ராறியோவின் வர்த்தகங்கள், நிறுவனங்கள் மற்றும் சமுதாயங்கள் ஆகியவை, திறனிழப்பு கொண்ட மக்கள் எளிதில் அணுகக்கூடியதாகவும் மற்றும் உள்ளடங்கியதாகவும் இருக்கும் வகையில் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

## திறனிழப்பு

***திறனிழப்பு*** என்பது பல்வேறு வகைகளிலும் அளவுகளிலும் இருக்கும் நிலைமைகளைக் குறிக்கிறது. சில திறனிழப்புகள் பிற மக்களுக்கு தெரியக் கூடியவை மற்றும் சில அப்படி இல்லை. ஒரு நபர் திறனிழப்புடன் பிறந்திருக்கலாம் அல்லது ஒரு விபத்து அல்லது சுகவீனம் காரணமாக திறனிழப்பு நேர்ந்திருக்கலாம். மக்களுக்கு உடல் ரீதியான, மன ரீதியான அல்லது கற்றுக் கொள்ளும் திறனிழப்புகள் இருக்கக்கூடும். காது கேட்கும் அல்லது பார்வைக் குறைபாடுகள், கால் கை வலிப்பு, மன ஆரோக்கிய திறனிழப்புகள் மற்றும் போதைக்கு அடிமையாதல், சுற்றுச்சூழல் உணர்வு திறன் கூடியவர்கள் மற்றும் பிற நிலைமைகள்.

திறனிழப்புள்ள மக்களின் தனிப்பட்ட அனுபவங்கள் பற்றி ஒன்ராறியோ மனித உரிமைகள் ஆணையத்தில் உள்ள கவிதைகள், கட்டுரைகள் மற்றும் வீடியோக்கள் மூலமாக அறிந்து கொள்ளுங்கள்: ohrc.on.ca அல்லது findlink.at/ohr-lrd

திறனிழப்புள்ள மக்களின் உரிமைகள் பற்றி ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதிகளின் கீழ் ohrc.on.ca என்ற அல்லது findlink.at/accssibact என்ற இணையத்தளத்தில் அறிந்து கொள்ளுங்கள்

## அணுகலுக்கான தராதரங்கள்

ஒன்ராறியோவின் 2005 சட்டமான, திறனிழப்புள்ள ஒன்ராறியோவினருக்கான அணுகல் தன்மை AODA) என்னும் சட்டமானது அணுகலுக்கான தராதரங்களை உருவாக்குவதற்கு அழைத்தது. திறனிழப்பு உள்ள மக்கள் ஒன்ராறியோ சமுதாயத்தில் முழுமையாகப் பங்கேற்பதை உறுதி செய்வதற்காக, அனைத்து வர்த்தகங்களும் நிறுவனங்களும் என்ன செய்ய வெண்டும் என்பதை இந்தத் தராதரங்கள் விளக்குகின்றன. இதன் இலக்கு என்பது 2025ம் ஆண்டு வாக்கில், ஒரு அணுகக்கூடிய ஒன்ராறியோவை உருவாக்குவது ஆகும்.

ஐந்து அணுகல் தராதரங்கள் உள்ளன:

1. வாடிக்கையாளர் சேவை-பொருட்கள் மற்றும் சேவைகளை அளித்திடும் அனைத்து நிறுவனங்களுக்கும், திறனிழப்பு உள்ள மக்களுக்கு வாடிக்கையாளர் சேவையை தாங்கள் எவ்வாறு அளிக்கப் போகின்றனர் என்று காட்டும் வகையில் ஒரு எழுதப்பட்ட திட்டம் கண்டிப்பாக இருக்க வேண்டும். இந்த திட்டத்தில், சேவை விலங்குகள் மற்றும் சக்கர நாற்காலிகள் போன்றவற்றை அனுமதிப்பது, துணைக்கு வரும் நபர்களை வரவேற்பது மற்றும் திறன்மிக்க அளவில் தொடர்பு கொள்வது போன்ற விஷயங்கள் உள்ளடங்கி இருக்க வேண்டும்.
2. வேலை வாய்ப்பு- திறனிழப்பு உள்ள மக்களைக் கண்டறிந்து, பணியில் அமர்த்தி ஆதரவு தருவதை அனைத்து நிறுவனங்களுமே கண்டிப்பாக உறுதிப்படுத்த வேண்டும். உதாரணமாக அவர்களுக்கு சிறப்பு உபகரணம் அல்லது பணிச்சூழ்நிலைகள் தருவது இதில் அடங்கும்.
3. தகவல் மற்றும் தொடர்பாடல்- நிறுவனங்கள், பிரசுரங்கள், இணையத்தளங்கள் மற்றும் கல்விப் பொருட்கள் போன்ற தங்களது தகவல்கள் அனைத்தையும் அவர்கள் பெறக்கூடியதாக இருக்கச் செய்ய வேண்டும்.
4. போக்குவரத்து-இந்த தராதரம் ஆனது பேருந்துகள், வாடகையுந்துகள், திறனிழப்பு உள்ள மக்களுக்கான சிறப்பு போக்குவரத்து, மருத்துவமனையில் இருந்து இங்குமங்கும் பயணம் செய்யும் பேருந்துகள், பள்ளிப் பேருந்துகள் மற்றும் சில படகுச் சேவைகள் ஆகியவற்றுக்குப் பொருந்துகிறது. உயர்த்தும் கருவிகள், ஏணிப்படிகள், பிடித்துக் கொள்ளும் கம்பிகள், ஒளி அமைப்புகள், சமிக்ஞை பலகைகள் மற்றும் இன்னும் அதிகமானவற்றை தேவைகள் உள்ளடக்குகின்றன
5. பொது இடங்கள்-இந்த தராதரமானது, விளையாட்டு மைதானங்க்ள, வாகனங்கள் நிறுத்தும் பகுதிகள் மற்றும் பிக்னிக் பகுதிகள் போன்ற கட்டிடங்கள் மற்றும் பொது இடங்களுக்குப் பொருந்துகிறது.

***திறனிழப்பு உள்ள ஒன்ராறியோவினர் அணுகும் தன்மை பற்றிய சட்டம்*** 2005 பற்றி ontario.ca என்ற அல்லது findlink.at/accssibact என்ற இணையத்தளத்தில் அறிந்திடுங்கள்

அணுகும் தன்மை பற்றிய தராதரங்கள் பற்றி ontario.ca என்ற அல்லது findlink.at/accsstandr என்ற இணையத்தளத்தில் அறிந்திடுங்கள்

திறனிழப்பு உள்ள மக்களுக்கான திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவலுக்கு, 211 என்ற எண்ணை அழைத்திடுங்கள், அல்லது Disability Doorway disabilitydoorway.com என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்


ஒன்ராறியோ திறனிழப்பு உள்ளவர்களுக்கான ஆதரவுத் திட்டம் ஆனது, திறனிழப்பு உள்ள மக்களுக்கு நிதி உதவி தேவைப்பட்டால் உதவுகிறது. இது பற்றி அறிவதற்கு mcss.gov.on.ca என்ற அல்லது findlink.at/ont-dsp என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

[7] ஆதாரம்: mcss.gov.on.ca or findlink.at/ont-dsp

**விடயங்கள்**

***எனது பணியிடமானது அணுகுவதற்கு எவ்வளவு எளிதாக உள்ளது?***

***என்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு உள்ள, கண்ணுக்குத் தெரியாத திறனிழப்புகள் எவை?***





# குடும்ப உறவுமுறைகள்

ஒன்ராறியோவில் நீங்கள் குடியமரும் பொழுது, குடும்பம் ஒரு முக்கியமான ஆதரவாக இருக்கக் கூடும். மத்திய அரசு மற்றும் மாகாணச் சட்டங்கள், குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பாதுகாக்கிறது

## திருமணம்

திருமணம் என்பது கனடா மற்றும் ஒன்ராறியோவில் உள்ள பல மக்களுக்கு குடும்ப வாழ்வின் அடிப்படையாகும். ஒரு சமயத்தில் நீங்கள் ஒரு நபருடன் மட்டுமே திருமணம் செய்து இருக்க முடியும். மற்றொரு நாட்டில் நீங்கள் யாரையேனும் திருமணம் செய்திருந்தால், ஒன்ராறியோவில் இருக்கும் ஒருவரை திருமணம் செய்வதற்கு முன்பாக, கண்டிப்பாக விவாகரத்துப் பெற வேண்டும். ஒரே-பாலின திருமணம் 2003 முதல் ஒன்ராறியோவில் சட்டப்படியானதாக இருக்கிறது. நீங்கள் உங்களது பங்குதாரருடன் வசித்து வருகிறீர்கள் ஆனால் திருமணம் செய்து கொள்ளவில்லை மற்றும், மூன்று வருடங்களுக்கு மேலாக நீங்கள் ஒரு திருமண உறவுமுறையில் இருந்து வந்திருக்கிறீர்கள் அல்லது உங்கள் இருவருக்கும் ஒரு குழந்தை இருந்து நீங்கள் ஒரு வருடமாக திருமண உறவுமுறையில் இருந்து வந்திருக்கிறீர்கள் என்றால் நீங்கள் "பொதுவான-சட்டப் பங்காளர்கள்" ("common-law partners") என்று கருதப்படுகிறீர்கள்.

findlink.at/RightsFreedoms

## விவாகரத்து

ஒரு நீதிமன்றம் மட்டுமே உங்களுக்கு ஒரு விவாகரத்து வழங்க முடியும். கணவர் அல்லது மனைவி இருவரில் யாராவது ஒருவர் (திருமணப் பங்குதாரர்) ஒரு விவாகரத்திற்காக விண்ணப்பிக்க முடியும். உங்களது திருமணம் முறிந்து போயிருக்கிறது என்பதற்கான சாட்சியத்தைக் கண்டிப்பாக நீங்கள் தர வேண்டும். உங்களது துணைவர் மற்றொரு நாட்டில் விவாகரத்து பெறுகிறார் மற்றும் உங்களது துணைவர் குறைந்தது ஒரு வருடத்திற்கு கனடாவுக்கு வெளியே இருந்திருக்கிறார் என்றால், இது ஒன்ராறியோவில் சட்டபூர்வமானது என்று வழக்கமாக கருதப்படுகிறது.

findlink.at/RightsFreedoms

## துணைவரைத் துன்புறுத்தல்

துணைவருக்கு, பொதுவான -சட்டப் பங்காளருக்கு எதிராக அல்லது ஏதேனும் பிற குடும்ப உறுப்பினருக்கு எதிராக நடத்தப்படும் எல்லா வகையான உடல் ரீதியான வன்முறைகளும் சட்ட விரோதமானவையாகும். இதில் விரும்பாத பாலியல் செயல்பாடும் அடங்குகிறது. யாருக்கேனும் ஊறு விளைவிக்கப் போவதாக அல்லது கொல்லப் போவதாக அச்சுறுத்துவது என்பதும் ஒரு குற்றமாகும். ஒரு குடும்ப உறுப்பினருக்கு எதிராக குடும்ப வன்முறை செய்த குற்றவாளி என ஒருவர் கண்டறியப்பட்டால், சிறைத் தண்டனை உட்பட்ட தீவிரமான தண்டனைகளுக்கு உள்ளாவார்.

findlink.at/RightsFreedoms

## கனடா சமூகத்தில் காவல் துறையின் பங்கு

காவல் துறையானது சமுதாயத்தில் மக்கள் பாதுகாப்பாக இருக்க உதவுகிறது மற்றும் ஒவ்வொருவரும் கனடா நாட்டுச் சட்டங்களைப் பின்பற்றுவதை உறுதி செய்கிறது. இல்லத்தில் வன்முறை, ஒரு விபத்து, ஒரு தனிப்பட்ட காயம் அடைதல் அல்லது ஒரு குற்றம் நேர்ந்திருக்கிறது போன்ற எல்லா வித நிலைமைகளிலும் நீங்கள் எப்பொழுதுமே உதவிக்காக போலீஸை அழைக்கலாம்.

நீங்கள் ஆபத்தில் இருந்தால், 911 என்ற எண்ணை அழைத்திடுங்கள் மற்றும் போலீஸ் ன்று கேளுங்கள்.

ஒரு குடும்ப உறுப்பினரால் துன்புறுத்தப்படும் அபாயத்தில் இருக்கும் பெண்கள், Assaulted Women's Helpline எண் 1-866-863-0511 ல், 24 மணி நேரமும், வாரத்தில் ஏழு நாட்களும் அழைக்க முடியும். இது தொலைபேசி நெருக்கடி ஆலோசனை அளிக்கிறது மற்றும் உங்களது சமுதாயத்தில் உள்ள ஆதரவுகள் மற்றும் சேவைகளுக்கான பரிந்துரைகளையும் அளிக்கிறது. awhl.org என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள். மேலும் Ministry of Community and Social Services -ன் ontario.ca என்ற இணையதளத்திற்கு அல்லது findlink.at/womenhelp என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்

உங்களது பகுதியில், குடும்ப ஆலோசனை அல்லது பெற்றோருக்கான செயல்முறை வகுப்புக்கள் போன்ற சேவைகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு நீங்கள் 211 என்ற எண்ணையும் அழைக்கலாம்.

## குழந்தைகளைத் துன்புறுத்தல் மற்றும் புறக்கணிப்பு

குழந்தை துஷ்பிரயோகம் என்பது ஒரு குழந்தை அல்லது இளைஞருக்கு காயம் அல்லது உணர்ச்சி ரீதியான சேதத்தை ஏற்படுத்தும் எந்த வகையான உடல், உணர்ச்சி ரீதியான

மற்றும்/அல்லது பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் அல்லது கவனிப்பு இல்லாமை ஆகும். குழந்தை-இளைஞர் துஷ்பிரயோகத்தின் வகைகளில்

உணர்ச்சி, உடல் அல்லது பாலியல் (தொடர்பு அல்லது தொடர்பு இல்லாத) துஷ்பிரயோகம், குடும்ப வன்முறைக்கு ஆளாகுதல்

மற்றும் புறக்கணிப்பு ஆகியவை அடங்கும். தங்குமிடம், உணவு, உடை, கல்வி, நல்ல சுகாதாரம், மேற்பார்வை, சுகாதாரம்

பராமரிப்பு, போதுமான ஓய்வு, தார்மீக வழிகாட்டுதல், உடற்பயிற்சி, பாதுகாப்பான சூழல் மற்றும் புதிய காற்று ஆகியவற்றை வழங்கத் தவறுவதன் மூலம் புறக்கணிப்பை அடையாளம் காணலாம்.

குழந்தை துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு பற்றி மேலும் அறிய இங்கே: findlink.at/protecchild

**Ontario women's Directorate**

குடும்ப அல்லது பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தகவல்களை ontario.ca என்ற அல்லது findlink.at/serviwomen என்ற இணையத்தளத்தில் கண்டறிந்திடுங்கள்.

**Victim Services– Ministry of the Attorney General**

குடும்ப அல்லது பாலியல் வன்முறையால் ்பட்டவர்களுக்கான தகவல்களை ontario.ca என்ற அல்லது findlink.at/ovs என்ற இணையத்தளத்தில் கண்டறிந்திடுங்கள்.

**கல்வி**

ஒன்ராறியோவின் குடும்பச் சட்டத்தின் கீழ், பெண்களின் உரிமைகளுக்கான விளக்கத்துக்கு onefamilylaw.ca என்ற அல்லது ontario.ca or findlink.at/flew என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

**குடும்பச் சட்ட வழிகாட்டி**

ஒன்ராறியோவின் குடும்பச் சட்டத்தின் கீழ், உங்களது உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகளின் ஒரு அறிமுகத்திற்கு, ontario.ca என்ற அல்லது findlink.at/on-famlaw என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்

# சுற்றுச்சூழலைப் பராமரிப்பது

## ஒன்ராறியோவில் சுற்றுச்சூழலைப் பராமரிப்பது என்பது ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. குப்பைகளைப் போடாமல் தவிர்ப்பது, மறுசுழற்சி திட்டங்களில் பங்கேற்றல் மற்றும் சக்தி வீணாவதைத் தவிர்ப்பது போன்றவற்றைச் செய்வதன் மூலமாக நீங்களும் உங்களது பங்கை இதற்கு அளிக்கலாம்.

### குப்பைகளைப் போடாதீர்!

நகரத்தில் அல்லது கிராமத்தில் எந்த வித குப்பையையும் சாலையில் அல்லது தரையில் கொட்டி விடுவதே குப்பைகளாக்குவது ஆகும்.

ஒன்ராறியோவில் பெரும்பாலான மாநகர சபைகளில், குப்பைகளைக் கொட்டுவதற்கு எதிரான சட்டங்கள் உள்ளன. குப்பைகளைக் கொட்டுவதற்கு $100 லிருந்து $1,000 வரை அல்லது அதற்கு மேலான அபராதங்கள் உண்டு. ஒரு நெடுஞ்சாலையில் நீங்கள் குப்பை எறிந்து செல்வதை காவலதிகாரிகள் பார்த்தால், அவர்கள் உங்களின் காரை நிறுத்தி விடுவார்கள்.

உங்களது குப்பையை ஒரு குப்பை கொள்கலன் ஒன்றில் போட்டு அல்லது உங்களது வீட்டிற்கு எடுத்துச் சென்று அப்புறப்படுத்தி, ஒன்ராறியோவின் சுற்றுச்சூழலைத் துப்புரவாக வைத்திட உதவுங்கள்.

### வீட்டில் சேரும் கழிவுகளை மறுசுழற்சி செய்யும் திட்டம்

ஒன்ராறியோவில் பெரும்பாலான வீடுகளுக்கு ***நீல பெட்டி*** மறுசுழற்சித் திட்டம் கிடைக்கிறது. நிலக்கீழ் கிடங்குகளை நிரப்பும் வகையில் கொட்டப்படுவதற்குப் பதிலாக, புதிய பொருட்களைத் தயாரிக்க அந்தக் கழிவு பயன்படுத்தப்படுகிறது. உள்ளூர் துப்புரவுப் பணியாளர்கள் எடுத்துச் செல்லும் வகையில் உங்களது நீல பெட்டியில் நீங்கள் பல வகையான கண்ணாடி, உலோகம், பிளாஸ்டிக் மற்றும் காகிதக் கழிவுகளைப் போடலாம்.

சில மாநகர சபைகளில் ஒரு ***பச்சைத் தொட்டித்*** திட்டமும் இருக்கிறது, இது பழங்கள் மற்றும் காய்கறித் துண்டுகள், மாமிசம் மற்றும் மீன், கோப்பி பொடி போன்ற சேதனக் கழிவினை மறுசுழற்சி செய்ய அனுமதிக்கிறது. (organic Waste) சேதனக் கழிவானது கூட்டெரு ஆக மாற்றப்படுகிறது, இது பூங்காக்கள் மற்றும் விவசாய நிலங்களில் மண்ணை வளப்படுத்தப் பயன்படுகிறது.

நீல நிறப் பெட்டி ஒன்றைப் பெறுவதற்கு, அல்லது உங்களது பகுதியில் உள்ள ஒரு பச்சைத் தொட்டித் திட்டத்தைக் கண்டறிவதற்கு, உங்களது உள்ளூர் மாநகர சபையைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களது தொலைபேசி புத்தகத்தின் நீலப்பக்கங்களைப் பாருங்கள், அல்லது நகராட்சி விஷயங்கள் மற்றும் குடியிருப்புக்கான அமைச்சகத்தின் இணையதளத்திற்கு வருகை தந்து, மாநகர சபைகளின் பட்டியல் மற்றும் தொடர்புத் தகவல்களை ontario.ca என்ற அல்லது findlink.at/muniseroff என்ற இணையத்தளத்தில் பாருங்கள்.

### மின்னியல் பொருட்களின் மறுசுழற்சித் திட்டம்

கேமராக்கள், கணினிகள், மானிட்டர்கள், தொலைபேசிகள் மற்றும் தொலைக் காட்சிப் பெட்டிகள் போன்ற போன்ற மின்னியல் பொருட்களின் கழிவுகள் மின்--கழிவு என்றும் அழைக்கப்படும். அவை நச்சுத்தன்மை கொண்ட மற்றும் மதிப்பு மிக்க பொருட்களால் நிரப்பப்பட்டு உள்னன- இவற்றை நிலத்தை நிரப்பும் கிடங்குகளில் போடக் கூடாது. ஒன்ராறியோவில் மின்னியல் பொருட்களை நீங்கள் வாங்கும் பொழுது, ஒரு சுற்றுச் சூழல் பாதுகாப்பதற்காக கையாளுகைக் கட்டணத்தைச் செலுத்துகிறீர்கள். இவ்வாறு சேகரிக்கப்படும் நிதிகள், மறுசுழற்சிக்கான அல்லது மின்னியல் பொருட்களை மீண்டும் புதுப்பிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

உங்களது பகுதியில் உள்ள ஒரு மின்னியல் பொருள் மறுசுழற்சிக்கான சேமிப்பு இடத்தை கண்டறிவதற்கு recyclemyelectronics.ca என்ற இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.

### சக்தி வீணாவதைத் தவிர்ப்பது

மின்சக்தி அல்லது வாயு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் பொழுது, அதற்கு சுற்றுச்சூழல் மீது எதிர்மறையான விளைவுகள் உள்ளன. குறைவாக உபயோகிப்பதே சிறந்தது. உங்களது வீட்டில் எவ்வாறு சக்தி வீணாவதைத் தடுப்பது என்று அறிவதற்கு, Ministry of Energy: ontario.ca என்ற அல்லது findlink.at/savinenerg என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள். மேலும், கனடாவின் Natural Resources Canada -வின், Office of Energy Efficiency -ன் oee.nrcan.gc.ca என்ற இணையதளத்திற்கு வருகை தாருங்கள்.



#### விடயங்கள்

*நீல நிறப் பெட்டி ஒன்றை நான் எங்கு பெறுவது மற்றும் அதை எங்கு வைப்பது?*

*எனது மாநகர சபையிடம் ஒரு பச்சைத் தொட்டித் திட்டம் இருக்கிறதா?*

*எனக்கு வேண்டாத மின்னியல் பொருட்களை நான் எங்கே எடுத்துச் செல்வது?*

*எவ்வாறு எனது இல்லத்தை திறன் மிக்க அளவில் சக்தி சேமிக்கும் ஒன்றாக ஆக்குவதற்கு நான் என்ன செய்ய முடியும்?*

# குடியமர்வுத் திட்டம்

## உள்ளடங்கிய தன்மை

- [ ] ஒன்ராறியோ மனித உரிமைகள் நடத்தை விதியின் கீழ், எனது உரிமைகள் மற்றும் கடமைப்பாடுகளைப் புரிந்து கொள்ளல்

## சுற்றுச்சூழலைப் பராமரிப்பது

- [ ] எனது மாநகர சபையிடம் இருந்து ஒரு நீல நிறப் பெட்டியைப் பெறுங்கள் (அல்லது மறுசுழற்சிப் பை).
- [ ] எனது மாநகர சபையிடம் ஒரு பச்சைத் தொட்டித் திட்டம் இருக்கிறதா என்று கண்டறிந்திடுங்கள்.
- [ ] பயன்படுத்திய மின்னியல் பொருட்களைப் போடுவதற்கான எனது இடம் எது என கண்டறிந்திடுங்கள்.
- [ ] எனது இல்லத்திற்கான சக்தி சேமிக்கும் தேர்வுகள் பற்றி ஆராய்ச்சி செய்யுங்கள்.

1. பணி நிறைவு செய்தது / /

தகவல் ஆதாரங்கள்

2. பணி நிறைவு செய்தது / /

தகவல் ஆதாரங்கள்

3. பணி நிறைவு செய்தது / /

தகவல் ஆதாரங்கள்

# பிற்சேர்க்கை




62
மத்திய அரசு
ஆதார வளங்கள்

63
ஒன்ராறியோ அரசு
அமைச்சகங்கள்

64
பட்டியல்

# மத்திய அரசு ஆதார வளங்கள்

**Start Your Life in Canada**
canada.ca or findlink.at/ctcextstay
Do you want to come to Canada, or extend your stay? This tool will help you determine your eligibility, fill out and submit your application.

**Immigrant services in your area**
canada.ca or findlink.at/cic-serve
Services may include assistance with finding a place to live, job search support, language assessment and classes, help with filling out forms and information about community services.

**Work in Canada**
canada.ca or findlink.at/workincana
Working in Canada is the Government of Canada's leading source for jobs and labour market information. It offers users free occupational and career information.

**Discover Canada: The Rights and Responsibilities of Citizenship**
canada.ca or findlink.at/cic-study
Discover Canada: *The Rights and Responsibilities of Citizenship* is used by newcomers to study for the citizenship test.

## புதிதாக வந்தவர்களுக்கான மாகாண மற்றும் பிரதேச இணையதளங்கள்

Alberta
albertacanada.com/immigration

British Columbia
welcomebc.ca

Manitoba
immigratemanitoba.com

New Brunswick
welcomenb.ca

Newfoundland and Labrador
gov.nl.ca/immigration

Northwest Territories
immigrate.nwt.ca

Nova Scotia
liveinnovascotia.com

Nunavut
gov.nu.ca

Ontario
ontario.ca

Prince Edward Island
princeedwardisland.ca

Quebec
immigration-quebec.gouv.qc.ca

Saskatchewan
saskatchewan.ca

Yukon
yukon.ca/immigration

# ஒன்ராறியோ அரசு அமைச்சகங்கள்

Agriculture, Food and Agribusiness

Attorney General

Children, Community and Social Services

Citizenship and Multiculturalism

Colleges and Universities

Economic Development, Job Creation and Trade

Education

Energy and Electrification

Environment, Conservation and Parks

Finance

Francophone Affairs

Health

Infrastructure

Intergovernmental Affairs
Indigenous Affairs & First Nations Economic Reconciliation

Infrastructure

Labour, Immigration, Training and Skills Development

Long-Term Care

Mines

Municipal Affairs and Housing

Natural Resources

Northern Development

Public and Business Service Delivery and Procurement

Red Tape Reduction

Rural Affairs

Seniors and Accessibility

Solicitor General

Sport

Tourism, Culture and Gaming

Transportation

Treasury Board Secretariat

# அட்டவணை


தொழிற்பயிற்சி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 33
வங்கியியல்.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 50
அடிப்படை உரிமைகள். . . . . . . . . . . . . . . . . . . . 24
ஆதாயங்கள் மற்றும் சமூக உதவி . . . . . . . . . 53
இணைப்புத் திட்டங்கள் . . . . . . . . . . . . . . . . . . 41
உரிமைகள் மற்றும் சுதந்திர சாசனம்.. . . . . . 24
குழந்தைப் பராமரிப்பு . . . . . . . . . . . . . . . . . . . 30
பருவநிலை . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .9
நுகர்வோர் விழிப்புணர்வு . . . . . . . . . . . . . . . . 17
தகவல் தொடர்புச் சேவைகள் . . . . . . . . . . . . .11
சமூக இணைப்புகள் மற்றும் பொழுதுபோக்கு 21
கடன் வசதி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 51
மிதி வண்டி ஓட்டுவது . . . . . . . . . . . . . . . . . . . . 23
பல் மருத்துவர். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 16
குடும்ப வன்முறை . . . . . . . . . . . . . . . . . . . . . . . 58
வாகனம் ஓட்டுவது. . . . . . . . . . . . . . . . . . . . . . . 23
ஓட்டுநர் உரிமம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 22
பொருளாதாரம். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .8

**கல்வி**:

- வயது வந்தோருக்கான கல்வி மற்றும் தொடர் கல்வி. . . . . . . . . . . . . . . . . . . . . . . 34
- ஆரம்பநிலைப் பள்ளி . . . . . . . . . . . . . . . . 31
- இரண்டாம்நிலைப் பள்ளிக்குப் பிந்தைய கல்வி.. . . . . . . . . . . . . . . . . . . . . 33
- இரண்டாம்நிலைப் பள்ளி. . . . . . . . . . . . 31

அவசரகால இலக்கங்கள். . . . . . . . . . . . . . . . . . .11
வேலை வாய்ப்பு (வேலை தேடல்) . . . . . . . . . 42
சக்தி திறன் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 59
குடும்ப மருத்துவர் . . . . . . . . . . . . . . . . . . . . . . 15
குடும்பச்சட்டம் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 58
உணவு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 17
புவியியல்.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .6
அரசாங்கம். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .5
ஆரோக்கியப் பராமரிப்பு. . . . . . . . . . . . . . . . . 14
விடுமுறை தினங்கள் . . . . . . . . . . . . . . . . . . . . 44
குடியிருப்பு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 18
மனித உரிமைகள் தொகுப்புச் சட்டம்.. . . . . . 24
உள்ளடங்கிய தன்மை. . . . . . . . . . . . . . . . . . . . 56
கனடாவுக்கு அறிமுகம். . . . . . . . . . . . . . . . . . . .4
ஒன்ராறியோவுக்கு அறிமுகம். . . . . . . . . . . . . .6
வேலை தேடல். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 42
தொழிலாளர் சந்தை . . . . . . . . . . . . . . . . . . . . . 42
மொழி மதிப்பீடு. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 35
மொழிப் பயிற்சி. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 35
LGBTQ. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 56
சட்ட உரிமைகள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 24
சட்டச் சேவைகள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . 25
உளவியல் ஆரோக்கியப் பராமரிப்பு. . . . . . . . 16
ஓஹிப் (OHIP) அட்டை . . . . . . . . . . . . . . . . . . . 15
திறனிழப்பு உள்ள மக்கள். . . . . . . . . . . . . . . . 57
தொலைபேசி மற்றும் இணையச் சேவைகள்.17
தபால் சேவைகள். . . . . . . . . . . . . . . . . . . . . . . . 17
பொதுப் போக்குவரத்து. . . . . . . . . . . . . . . . . . . 22
பொழுதுபோக்கு . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 21
மறுசுழற்சி.. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 59
ஒரு காரை வாடகைக்கு எடுப்பது.. . . . . . . . . . 22
வாடகைக்கு விடுவது . . . . . . . . . . . . . . . . . . . . 19
குடியமர்வு முகமைகள் . . . . . . . . . . . . . . . . . . 10
சமூக காப்பீட்டு எண். (SIN).. . . . . . . . . . . . . . . . 40
சொந்தமான வர்த்தகத்தைத் தொடங்குவது 46
வரிகள் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 52
டாக்சிகள் (Taxi) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 22
போக்குவரத்து. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . 22
தன்னார்வத் தொண்டு செய்தல். . . . . . . . . . . 21

**வேலை**:

- வேலை தேடுவது. . . . . . . . . . . . . . . . . . . . 42
- பணியிட உரிமைகள். . . . . . . . . . . . . . . . . 44